# தொண்டக்குலமே தொழுகுலம்

(7262)



பி.ஸ்ரீ

# தொண்டக்குலமே தொழுகுலம்

**ஸ்ரீ.** பி. ஸ்ரீ. அவர்களை அறியாத தமிழர்கள் இருக்க முடியாது. அவர் விகடனில் வாரந் தவருமல் எழுதி வரும் ராமாயணக் கட்டுரைகளை எல்லோரும் ரஸித்துப் படித்திருப்பார்கள். இலக்கியச் சுவை கெடாமல் பக்திச் சுவையையும் அதனுள் கலந்து ஊட்டி, தம் இனிய சரளமான நடையால் ரஸிகர்களை இன்பத்தில் ஆழ்த்தும் சக்தி இவர் பேனுவுக்கு உண்டு.

ஆண்டாள், பெரியாழ்வார், திருப்பாவை, சிவநேசச் செல்வர் முதலிய பல பக்தி இலக்கியங்களுக்கு இவர் ஆசிரியர். சிவ விஷ்ணு பேதம் இல்லாமல் சமரஸப்படுத்தி, இனிக்க இனிக்கப் பக்தர்கள் கதைகளையும், பக்தர்கள் கவிதை வியாக்கியானங்களையும் எழுதுவதில் இவருக்கு ஒப்பு இவரே. இவரது ஆழ்ந்த ஆங்கிலக் கல்வியின் மணம், இவர் எழுத்து ஒவ்வொன்றிலும் சுவையை மிகுத்துக் காட்டுகிறது.

அன்பு கூர்ந்து இவர் எழுதிய 12 - ஆழ்வார்களின் வரலாறுகள், பல இனிய அரிய ரஸமான விஷயங்களோடு ஒன்பது புத்தகங்களாக எங்கள் காரியாலயத்தின் மூலம் வெளிவருகின்றன. மூவர் ஏற்றிய மொழி விளக்கு என்பது வெளிவந்து விட்டது. இது இரண்டாவது. தொடர்ந்து, மற்றவைகளும் ஒவ்வொன்ருக வெளிவரும்.

# தொண்டக் குலமே
# தொழுகுலம்

# தொண்டக் குலமே தொழுகுலம்

பி. ஸ்ரீ.

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர் : : சென்னை-4.

முதற் பதிப்பு, ஜனவரி, 1957
உரிமை பதிவு

விலை ரூ. 2—8—0

நவபாரத் பிரஸ். 76, எல்லிஸ் ரோட், சென்னை,-2

# முகவுரை

ஆத்ம ரஸாயன ஆராய்ச்சிச் சாலையில் மூன்று மாபெருஞ் சோதனைகள் நடக்கின்றன. இறுதியில் உண்மை ஒளி சுடர் விடுகின்றது. காலைச் செங்கதிரோன் நீலக் கடலிலிருந்து எழுகின்றான். அந்தப் புகலரும் எழிலில் ஆழ்ந்த பொய்கை ஆழ்வார்,

'வையம் தகளியா, வார்கடலே நெய்ஆக
வெய்ய கதிரோன் விளக்(கு)ஆக- செய்ய
சுடர்ஆழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று'

என்று மிகக் கவின் பெறப் பாடுகின்றார்.

இத்தகைய ஒளியைப் புறத்தில் காண்பது போதாது; அது அகத்தில் பாயவேண்டும் என்று பூதத்தாழ்வார் எண்ணுகிறார்; அவ்வெண்ணம் ஓர் அழகிய பாட்டாகச் சுரக்கின்றது.

அன்பே தகளியா ஆர்வமே நெய்ஆக,
இன்(பு)உருகு சிந்தை இடுதிரியா- நன்(பு)உருகி
ஞானச் சுடர்விளக்(கு) ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.'

இத்தகைய சுடர் விரிந்தவுடன் பேயாழ்வார் பேரு வகை நறவு மாந்தி,

'திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்– செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்
என்ஆழி வண்ணன்பால் இன்று.

என்று இசைக்கின்றார்.

இவ் வாழ்வார்களின் அடிச்சுவடுகளைத்தான் திருமழிசை ஆழ்வாரும் பின்பற்றுகின்றார் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை.

இவ் வாழ்வார் அரும் தவம் புரிந்து, ஆண்டவனை அடைந்துவிடுகின்றார். எல்லாவற்றிலும் அவன் உருவைக் காண்கின்றார் என்பதும் உண்மையே. திரைத்தெழுகின்ற கடல் இவருக்கு நல்லதோர் உவமையை நல்குகின்றது:

'தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்(து) அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

ஆண்டவன் அருட்கோயிலைக் காணக் கூடிய பாதையை அவர் வகுக்கின்றார். புறத்தில் திரிகின்ற மனத்தை அடக்குகின்றவனே உண்மையான வீரன்; அப்பொழுதுதான் உள்ளொளி விரியும் என்று கடவல்லி உபநிஷத் மொழிகின்றது. இதே கருத்தைத்தான் திருமழிசைப்பிரான் ஓர் அபூர்வமான பாட்டில் அலர வைத்திருக்கிறார்:

'புன்புல வழியடைத்(து) அரக்கிலச் சினைசெய்து
நன்புல வழிதிறந்து ஞானநற் சுடர்கொளீஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந் தெழுந்த(து)ஓர்
அன்பிலன்றி ஆழியானை யாவர்காண வல்லரே!'

இவ்வாழ்வாரைப்பற்றி எழுந்த புராணக் கதைகளை நமக்குத் திரு. பி. ஸ்ரீ. அவர்கள் மிக நயன்படத் தருகின்

ரர். பெரும்பாலும் திருமழிசை யாழ்வாரின் பாடல்களில் காணப்படும் குறிப்புக்களை வைத்தே பின் காலத்தவர்கள் தம் கற்பனைத் தறிகளில் பற்பல கதைகளை நயம்பட நெய்துவிட்டார்கள் என்பதை ஆசிரியர் நாகரிக முறையில் விளக்கிக் காட்டி யிருப்பது மிகவும் போற்றத் தகுந்தது.

இந்நூலில் தொண்டனின் இலக்கணம் கூறப் பட்டிருக்கிறது. அவன் கொக்குப்போல் இருப்பான்; கோழிபோல் இருப்பான்; உப்புப்போல் இருப்பான்.

இயற்கை எழில் நிறைந்த இடத்தில்தான் கொக்கு உறையும்; ஆண்டவனின் தரிசனங்கூட இயற்கை வனப் புத் தாண்டவமாடுகின்ற இடங்களில்தான் தோன்றுகின் றது. உதாரணமாக, கங்கைக் கரையில் குகனுக்கு ராகவனோடு உறவு நிகழ்கின்றது; உயர் வரைத்தடத் தில் சுக்கிரீவனுக்கு அச்சானுேடு நட்பு மலர்கின்றது; கடற்கரையில் விபீஷணன் பரம்பொருளான ராக வனைச் சந்திக்கின்றான்.

திருமழிசை ஆழ்வார் இருந்த காலத்தைப்பற்றித் திரு பி. ஸ்ரீ. ஆராய்ச்சி செய்கின்றார், ஆனால் முடிவாய் ஒன்றுங் கூறுவதற்கில்லை. கடைச்சங்க காலத்திற்குப் பிற் பட்டதும், நாத முனிகள் தோன்றிய கி. பி. 823-க்கு முற் பட்டதுமான காலத்தில் எல்லா ஆழ்வார்களும் வாழ்ந்தவர் என்பது உண்மையே. ஆனால் முதல் மூன்று ஆழ்வார் களுக்குப் பிறகு திருமழிசை ஆழ்வார் அவதாரமானார் என் பதை யாரும் மறுக்க முடியாது.

அன்பு நெறியைப்பற்றிச் சிலர் உய்கின்றார்கள்; ஞானத்தால் உண்மையைத் தேர்கின்றனர் வேறு சிலர்; தூய கர்மாவைப் புரிந்து, மற்றுஞ் சிலர் உள்ளொளியை

நண்ணுகின்றனர். பக்தியோகம், ஞான யோகம், கர்ம யோகம் இவைகளுக்கிடையே பகை இல்லை.

உண்மையான ஞானமுள்ளவனே பக்தியோகத்தைச் செய்ய முடியும்; உண்மையான பக்தியோகத்தைப் புரிகின்றவனே கர்மயோகத்தைச் செய்யக்கூடும்; திருப்பாணாழ்வார், இசையால் - கீதாஞ்சலியால் - ஆண்டவனை அடைந்து விட்டார். இழிகுலத்தில் தோன்றிய காரணத்தால் ஸ்ரீரங்கம் பெரிய கோயிலுக்குள் அவர் போக முடியவில்லை. ஆனால் அரங்கனைத் தம் கற்பனைச் சிறகு கொண்டு அடைந்துவிடுகின்றார். கற்பனையில் சித்திரித்துப் பார்த்ததும் நேரில் கண்டதும் ஒன்றாயிருக்கின்றன.

'கமலபாதம் வந்துஎன் கண்ணிலுள்ளன
ஒக்கின்றதே'

என்ற வரி சிந்தனைக்கு உரியது.

அழகில்லாத ஓர் அரசிளங்குமரி ஆண்டவனுடைய ஒவ்வோர் அவயவத்தையும் சிந்தித்து, அவனுடைய சிதையாவனப்பை அடைந்துவிடுகிறாள் என்று வாஸர்மன் (Wassarman), தம்முடைய 'உலக மாயம்' (The World's Illusion) என்ற சிறந்த நாவலை முடிக்கின்றார். திருப்பாணாழ்வாரை நினைக்குந்தோறும், என் அகக் கண்முன் அந்த அரசிளங்குமரியின் தூய உருவம் மிதந்து வருகின்றதைக் காண்கின்றேன்.

அந்த அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றைக் காணுமோ?

'குலந்தரும் நாராயணா என்னும் நாமம்' என்று கூறுமிடத்து, 'குலந்தரும்' என்ற சொல்லுக்கு விளக்கம் தருகின்றார்கள் உரையாசிரியர்கள். குலம் என்பது

இங்கே தொண்டர் குலத்தை உணர்த்தும். தொண்டர் குலத்தில் சாதிச் சழக்குகளுக்கு இடமில்லை. இவ்விரு ஆழ்வார்களுடைய தூய சரிதங்கள், கல்வித் திமிர், செல்வத் திமிர் சாதித் திமிர் என்ற முக்குறும்பையும் போக்கி, வாழ்க்கையை வெள்ளுயிராக்க முடியும் என்ற உண்மையை உலகங் கேட்க முரசடிக்கின்றன.

திருவாளர். பி. ஸ்ரீ. அவர்கள் தெவிட்டாக் கம்பன் செவிநுகர் கவிதை அமுதத்திலும் ஆழ்வார்களின் அன்பு வெள்ளத்திலும் திளைத்தவர் என்பது யாவரும் அறிந்ததே. தொண்டக்குலமே தொழுகுலம் என்ற நூலைத் துருவி ஆராய்வோர்க்கு ஆசாரியரின் ஆழ்ந்த சிந்தனையும் பரந்த படிப்பும் செஞ்சொற்களை ஆள்கின்ற திறமையும் உரைநடையில் எழுகின்ற வனப்பும் இன்பமும் புலனுகாமற் போகா. இத்தகைய தமிழ்த் தொண்டாற்றி மேன்மேலும் நமக்குச் சிறந்த இலக்கிய விருந்தை இவர் நல்குவாராக.

திருவல்லிக்கேணி,
9—1—57.

ரா. ஸ்ரீ தேசிகன்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தொண்டர் பெருமை | ... | 1 |
| 2. | நந்தவனத்திலே (குருவும் சீடரும்) | ... | 17 |
| 3. | பக்திசாரரின் பக்தி யோகம் | ... | 27 |
| 4. | திருமழிசையிலும் திருவல்லிக்கேணியிலும் | | 37 |
| 5. | காஞ்சியில் திருமழிசையார் | ... | 46 |
| 6. | குடந்தை செல்லும் வழியிலே | ... | 58 |
| 7. | கும்பகோணத்துப் பாகவதர் | ... | 66 |
| 8. | பாசுரங்களில் பக்தி ஸாரர் | ... | 77 |
| 9. | இவர் வாழ்ந்த காலம் | ... | 88 |
| 10. | திருமழிசையாரின் பக்தியநுபவம் | ... | 102 |
| 11. | திருப்பாணர் | ... | 118 |
| 12. | திருவரங்கமும் திருப்பாணரும் | ... | 126 |
| 13. | பாணர் விளக்கு | ... | 137 |
| 14. | தொண்டக்குலத்தில் பாணர் நிலை | ... | 145 |
| 15. | கதையும் படிப்பினையும் | ... | 149 |
| 16. | வாக்கும் வாழ்க்கையும் | ... | 157 |
| 17. | அமலனாதிபிரான் | ... | 169 |

# 1.

# தொண்டர் பெருமை

'தொண்டன் எப்படியிருப்பான்?' என்று ஒரு சமயம் கேள்வி எழுந்தது. கேட்டவர் உத்தம பக்தர்களில் ஒருவர்; தமிழகமெங்கும் ஞான ஒளி வீசிய பேரறிஞர் ஒருவரது உகப்பிற்கு உரிய சீடர். பணிவே உருவெடுத்தது போன்ற பாகவதர். திருவரங்கத்திலிருந்து திருமலைக்கு வந்திருந்தவர்; கேள்விக்கு விடை காணவே புறப்பட்டு வந்தவர்.

பொழுது புலர்ந்துவிட்டது; கோழி கூவிக்கொண்டிருந்தது; எதிரே குளத்தில் கொக்கு, அங்கும் இங்கும் திரிந்துகொண்டிருந்தது; திருமாளிகையில் அடியார்களுக்காக நடைபெறும் விருந்துகளுக்குப் பயன்படுமாறு ஒருவர் அனுப்பியிருந்த உப்பு மூட்டை ஒன்றை வேலைக்காரர்கள் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

கேள்வி கேட்டவருக்கு இந்த மூட்டையிலுள்ள உப்பைத் திருமலை ஆசிரியர் சுட்டிக் காட்டினார். அந்தக் கொக்கையும் கோழியையும் காட்டினார். காட்டி, உடனே தொண்டனின் இலக்கணம் கூறத் தொடங்கி,

'கொக்குப்போல் இருப்பான்;
கோழிபோல் இருப்பான் ;

உப்புப்போல் இருப்பான்;
உம்மைப்போல் இருப்பான்!'

என்று பதில் சொன்னார்.

எவ்வளவு பெரிய விஷயம்! எப்படி இரத்தினச் சுருக்கமாய்ப் பொதுஜன ரஞ்சகமாய் வெள்ளைச் சொற்களால் விளையாட்டாகச் சொல்லப்பட்டது! இந்த விநோதமான சூத்திரத்தை எவ்வளவு இலகுவாக நினைவில் வைத்துக்கொள்ளக்கூடும்! இதை நினைவிற்கொண்டு, தொண்டனின் முழு லட்சணத்தையும் ஒருவாறு ஊகித்து, உணர்ந்துகொள்வதும் சாத்தியமாகும்.

## கொக்குப்போல் இருப்பான்:

கொக்கு எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது? என்ன செய்கிறது? நீர்வளம் உள்ள இடத்தில் காணப்படுகிறதல்லவா? பக்தனும் பக்திவளம் நிறைந்த இடங்களிலே வசிப்பான். இப்படித்தான் பாகவதர் நினைத்தார், முதல்முதல்.

அந்த நாளில் உடம்பையும் உள்ளத்தையும் ஒருங்கே தூய நன்னிலையில் வைத்துக்கொண்டு, வாழ்க்கை நடத்தக்கூடிய வாய்ப்பு, அடியவர் உகந்த இடங்களாகிய திவ்யஸ்தலங்களில் விசேஷமாகக் காணப்பட்டது. இத்திருப்பதிகளில் நல்லார் கூடி வாழ்ந்து, ஒருமுகமாக 'நல்லான்'—கடவுள்—அருளையே நம்பி வழிபாடு செய்யவும், இங்கிருந்து புறப்பட்டு எங்கும் திரிந்து பணி புரியவும் வசதிகள் இருந்தன.

நீர்வளம் நிறைந்த காவேரி தீரத்திலுள்ள திருவரங்கம் முதலான திருப்பதிகளும், 'திருப்பதி' என்றே சிறப்பிக்கப் பெற்ற மலைவளம் உள்ள திருமலை முதலான தலங்களும் பக்தர்களுக்கு வனப்பும் கலைவளமும் நிறைந்த நல்வாழ்வு வாழ வாய்ப்பும் வசதியும் அளித்தன என்பதில் ஐயமில்லை. வழிபாடுகளும் விழாக்களும் பஜனைகளும் பக்தர் குழாங்களும்

காலட்சேப கூடங்களும், கலை மன்றங்களும் நாம ஸங்கீர்த்தனங்களும் இத்தலங்களைப் 'பூலோக வைகுந்தமோ!' என்று அதிசயிக்குமாறு திகழச்செய்தன. கொக்குக்குக் குளம்போல இருந்தது திவ்ய ஸ்தலமும் பக்தர்களுக்கு.

'கொக்குப்போல் இருப்பான், கொக்குப்போல் இருப்பான்' என்று சொல்லிக்கொண்டே, மேலும் எண்ணமிட்டார் பாகவதர். நல்லாரோடு தோழமை கொள்வதிலும், நல்லாசிரியரைத் தேடிக் காண்பதிலுங்கூட,

'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு'

என்ற அந்தக் கொக்கின் நிலையில்தானே இருக்கிறார்கள் தொண்டர்கள்.

ஆசாரக் கள்ளர்போல்
நாரை திரியுது!

என்ற குறவஞ்சி ஆசிரியர் கூற்றும் தொண்டர்க்கு ஓர் எச்சரிக்கையாகப் பயன்படக் கூடியதுதானே. இந்தப் போக்கிலே நினைவுகள் ஓடத் தொடங்கின.

மேலும், கொக்கு வெள்ளையாக இருக்கிறதல்லவா? 'வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை:' தொண்டர்கள் கள்ளங் கபடு அறியாத குழந்தையுள்ளத்தோடு இருப்பார்களாம். 'கள்ளம் போனல் உள்ளது காணும்.' குழந்தையுள்ளம் படைத்தவர்களே இறையுண்மை காண்பர். அறிந்தும் அறியாதவர் போல், நீறு பூத்த நெருப்பைப்போல், பரம ஸாத்விகர்களாக இருப்பார்கள் பக்தர்கள்.

## கோழிபோல் இருப்பான்:

தொண்டன் கோழிபோல் இருப்பான் என்று திருமலை ஆசிரியர் சொன்னாரல்லவா? கோழி என்ன செய்கிறது?

குப்பையைக் கிளறிக் கிளறித் தானிய மணிகளைப் பொறுக்கும் கோழி, குஞ்சுகளுக்கு ஊட்டித் தானும் உண்டு, பசி ஆறுகிறது. இப்படித் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார் பாகவதர், திருமலையை விட்டுப் புறப்பட்டதும்.

பக்தர்களும் வேத சாத்திரங்களிலுள்ள சாரமான மணிகளைப் பிறருக்கும் வழங்கித் தாங்களும் அநுபவித்து மகிழ்வார்கள். இவ்விதமான காரியத்தை ஆழ்வார்கள், காலத்தின் தேவைக்குத் தக்கவாறு சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பது ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கை அல்லவா? ஆழ்வார்களின் நினைவு வந்ததும் நமது பாகவதரின் உள்ளம் குதூகலித்தது.

ஆழ்வார்கள் தாங்கள் கண்ட உண்மைகளைப் பிறருக்கு வழங்குவதில் எவ்வளவு சிரத்தை உள்ளவர்களாக் இருந்தார்கள்! இதற்காகவே அவர்கள், பால்போன்ற தமிழில், பண்சுமந்த பாசுரங்களைப் பாடி வைத்திருக்கிறார்கள்.

'தமிழ்மறை' என்று ஆழ்வார்களின் பிரபந்தங்களைக் குறிப்பிடுகிறோம். வேதம் தமிழ் செய்தவர்கள் என்கிறோம். நம்மாழ்வார், வேதமாகிய பாற்கடலைத் தமது நாவினால் கடைந்து, 'தமிழாயிரம்' என்றும், 'பண்கள் ஓராயிரம்' என்றும் சொல்லக்கூடிய அமிர்தத்தைத் தொண்டர் குழாம் களித்து உண்ணுமாறு நிறைத்தருளினார் என்பர் அழகிய மணவாள தாசர் என்ற பிள்ளைப் பெருமாளையங்கார். தத்துவம், பாற்கடல் என்றால், அதிலிருந்து பிறந்த் கலையை, அமிர்தம் என்று சொல்வது பொருத்தந்தானே ?

மற்றை ஆழ்வார்களைக் காட்டிலும் நம்மாழ்வார் வேதாந்தக் கொள்கைகளை அதிகமாகவும் தெளிவாகவும் திருந்திய வடிவத்துடனும் உபயோகித்துக்கொள்கிறார்; கலையமிழ்தமாக்கித் தருகிறார்.

'அருமறை துணிந்த பொருள்முடி பை,இன்சொல்
அமுதொழு குகின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பெற்(று) உயர்ந்தன
அரவணை விரும்பி அறிதுயில் அமர்ந்த
அணிதிரு அரங்கர், மணிதிகழ் முகுந்தர்,
அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே'

என்பது அழகிய மணவாள தாசரின் அழகிய - பொருள் பொதிந்த – வாக்கு.

தேவகி வயிற்றில் வசித்ததுபோல் பகவான், உபநிஷதங்களிலும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல்களிலும் வசிப்பதாகச் சொல்கிறார் ஒரு வைஷ்ணவ ஆசிரியர். உபநிஷதங்கள் என்ற பசுக்களைக் கோபாலன், அர்ச்சுனனாகிய கன்றை முன்னிட்டுக் கறந்து, கீதை என்ற பாலமிழ்தமாகக் கொடுத்தருளினான் என்று கூறுவதும் உண்டு. அதே பசுக்களைப் பொதுமக்களாகிய கன்றை முன்னிட்டுக் கீதம் – அதாவது, தமிழிசைப்பாடல்கள் - என்ற பாலாகக் கறந்து கொடுத்தருளியவர்கள் ஆழ்வார்கள் என்று கூறலாம்.

பாலைக் கடைந்து, அந்தக் கோபாலனுக்கும் உலகத்திற்கும் ஒருங்கே உகப்பான வெண்ணெய் ஆக்கினர் என்றும் பக்தர்கள் சொல்லக்கூடும். கறந்த பால், தத்துவம் என்றால், கடைந்த வெண்ணெய், கலை என்று சொல்லலாம். 'நாவினுள் நின்று மலரும் ஞானக்கலைகள்' என்பது நம்மாழ்வார் அருள்வாக்கு.

இயலும் இசையுமான இந்தப் பாடல்களை அபிநயத்துடன் பாடுவது, வைஷ்ணவ ஆசாரியர்களால் சமயப்பயிற்சியின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்பட்டது. 'இசையின்பமும் இறைவன்தான்; இன்பபபாடலும் இறைவன்தான்!' என்று பாடியாடிப் பக்தி செய்தவர்கள், தானிய மணிகளைப் பொறுக்கிக் குஞ்சுகளுக்கு ஊட்டித் தானும் உண்ட கோழிபோல, வேத

சாஸ்திர சாரமான உண்மைகளைக் தமிழருக்குக் கீத அமிழ்தாக அள்ளி வழங்கினுர்கள்; தாமும் அள்ளி விழுங்கினுர்கள். திருவரங்கத்திற்கு வரும் வழியிலே பாகவதர் உள்ளத்தில் வெள்ளமிட்ட நினைவுகள் இவை.

**உப்பைப்போல் இருப்பான் :**

தொண்டன் உப்பைப்போல் இருப்பான் என்றும் ஆசிரியர் குறிப்பிட்டா ரல்லவா? 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது. மனித சமுதாயத்திற்குத் தொண்டன் உப்பைப்போன்றவன்தானே?

உப்பானது, தான் அழிய மாறிக் கறியமுதிற்குச் சுவை தருகிறது. அப்படியே தொண்டனும் உடல், பொருள், ஆவி அழிய மாறித் தான் செய்யும் உபகாரம் அல்லது கைங்கரி யத்திற்குச் சுவை தருகிறுன்.

'பிறரை ஹிம்ஸித்துத் தன் வயிற்றை வளர்க்க வேணும் என்றிருக்குமவன் அதமன்; பிறரும் ஜீவிக்க வேணும், நாமும் ஜீவிக்கவேணும் என்றிருக்குமவன் மத்யமன்; தன்னை அழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்க வேணும் என்னுமவன் உத்தமன்' என்பர் பெரியவாச்சான் பிள்ளை. உப்பைப்போல் தொண் டாற்றும் தொண்டனே உத்தம மனிதன்.

உப்பு முனைந்தால் கறியமுதின் சுவை கெட்டுப்போகும். அப்போது கறியமுதைக் கெடுத்துவிட்டது என்று உப்பின்மீது குற்றம் சாட்டுகிறுர்கள். ஆனுல் அழிய மாறிக் கறியமுதிற்குச் சுவை தரும் உப்பை, யாராவது பாராட்டுவது உண்டா? கறி யமுது நன்ருக இருக்கிறது என்றுதானே சொல்லுகிறுர்கள். இது தான் தொண்டனின் நிலையும் என்று கண்டுபிடித்தார் திருவரங் கத்திற்குத் திரும்பிவந்து சேர்ந்த தொண்டர்.

தொண்டிலே தொண்டன்,'நான்' என்னும் ஆணவத்துடன் முனைந்து நின்ருல், தொண்டு, சுவை இழந்து, தூய்மை இழந்து,

கெட்டுப்போகும். அந்த நிலையில் தொண்டனைத்தான் குறை கூறுவார்கள். தொண்டிலே, தொண்டன் மறைந்துபோய்த் தொண்டு, சிறந்து விளங்கும்போது தொண்டனைத் தேடிக் கண்டு பாராட்டுவோரும் இல்லை.

தொண்டிலே, தன்னை மறந்த தொண்டனுக்குப் பிறரும் தம்மை மறந்து, தொண்டை மட்டும் பாராட்டும்போதுதான் உள்ளபடியே திருப்தியும் ஏற்படுகிறதாம்.

**உம்மைப்போல் இருப்பான் :**

'உப்பைப்போல் இருப்பான்', என்று சொன்னபின், 'உம்மைப்போல் இருப்பான்' என்று கூறி முடித்தார் அல்லவா? என்னே அதிசயம்! 'தொண்டன் எப்படி இருப்பான்?' என்று கேட்டவரிடத்திலேயே தொண்டனின் இலக்கணம் நன்கு அமைந்திருந்தது.

இவர் இதை அறிந்திருகக வில்லை. அவ்வளவு பெரும் பணிவோடு, 'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்(று) அறியேன்' என்ற நிலையில் இவர் வாழ்ந்தார். இத்தகைய 'அறியாமை'யே செருக்கித் திரியும் அறிவினும் சிறந்ததல்லவா?

**காதலி போலவும் இருப்பான்!:**

ஓர் அரசிளங்குமரி, தன் காதலன் அளித்த முத்து மாலையைத் தேடத் தொடங்கிவிட்டாளாம், 'அது எங்கே? எங்கே?' என்று. பரபரப்பாக அங்குமிங்கும் தேடினாள், ஓடினாள், தோழிமார்களை விசாரித்தாள், 'அதைக் கண்டீர்களா?' என்று.

கடைசியாக ஒரு தோழி, அரசிளங்குமரியை உற்று நோக்கி, 'தலைவியே, உன் கழுத்திலேயே அணிந்துகொண் டிருக்கிறாயே! என்ன மறதி இது!' என்று சுட்டிக்காட்டினாள். இப்படியே தான் தொண்டரின் இலக்கணத்தைத் தொண்டருக்குச் சுட்டிக்காட்டினார் திருமலை வாசியான பெரியவர்.

கழுத்திலே தொங்கி, நெஞ்சிலே புரண்டுகொண் டிருந்த முத்து மாலையை, 'அது எங்கே இருக்கிறதோ?' என்று தேடித் திரிந்த அரசிளங்குமரிபோலவே, தொண்டரும், தாமே தொண்டர் என்பதை மறந்து, 'தொண்டன் எங்கே? எப்படி இருப்பான்?' என்று விசாரித்தார். தொண்டுக் காதலால் ஏற்பட்ட மறதி இது!

ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம் :

தொண்டனுடைய லட்சணமே ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம். விஷ்ணுவைச் சார்ந்தவர்கள் வைஷ்ணவர்கள். 'விஷ்ணு' என்ற சொல்லுக்கு, எங்கும் வியாபித்திருக்கும் கடவுள் என்று தான் பொருள். எனவே, விஷ்ணு சம்பந்தம் பெறாது, உலகில் ஒருவரும் இருக்க முடியாது. இந்தத் தொடர்பினை உள்ளவாறு உணர்ந்துகொண்டு, தன்னிடத்திலும் பிறரிடத்திலும் சரிசம மான புத்தியுடையவனே உண்மையான வைஷ்ணவன்.

பிறர்— நண்பராக இருந்தாலும் சரி, பகைவராக இருந் தாலும் சரி— அவர்களிடம் அன்பு பூண்டு,பணிசெய்து கிடப்பதே ஸ்ரீ வைஷ்ணவ லட்சணமாகும்.

'குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் கிருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்மிருதியும் நடக்க வேணும்' என்பர் பிள்ளை லோகாசாரியர் என்ற ஸ்ரீவைஷ்ணவப் பேரறிஞர், தமது ஸ்ரீவசன பூஷணத்திலே. இது ஸ்ரீ வைஷ்ணவச் சான்றோர், தலைமுறை தலைமுறையாக அநுஷ்டித்தும் உபதேசித்தும் வந்த பெருங் கொள்கைகளில் ஒன்று.

குற்றத்தைப் பொறுத்துக்கொள்வது மட்டும் போதாது; குற்றம் செய்தவர்களிடம் வைஷ்ணவனாகிய தொண்டன் கிருபை செய்யவும் வேண்டுமாம்!

'குற்றம் செய்தானே' என்று, முகம் வாடியிருப்பதும் தொண்டனுக்கு அழகன்று. முகத்திலே சிரிப்பும் அகத்திலே உகப்புமாய் இருக்கவேண்டுமாம்.

கடைசியாக, 'உபகாரஸ்மிருதியும் நடக்கவேணும்' என்கிறார். அதாவது குற்றம் செய்தான் என்ற நினைவின்றி, நமக்கு உபகாரமே செய்தான் என்ற நினைவுடன் நடந்து கொள்ள வேண்டுமாம்!

தொண்டன், தான் அறிந்து செய்திராத குற்றங்களையும் நினைப்பூட்டித் தற்சோதனை செய்து பார்த்துக்கொண்டு, திருந்துவதற்கு உரிய உபகாரம் செய்பவன் உபகாரிதானே! அவனுக்கு மன, மெய், மொழிகளால் நன்றி தெரிவிப்பதுதானே முறை?

மேலே காட்டிய ஸ்ரீ வசன பூஷண வாக்கியம், பிள்ளை லோகாசாரியர் காலத்திற்கு முன்பே ஸ்ரீ வைஷ்ணவத் தொண்டர்களுக்கிடையே வழங்கிவந்து, அவர்களுடைய வாழ்க்கையையும் குணுதிசயத்தையும் உருவாக்கி வந்த மகா வாக்கியங்களில் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு வியாக்கியானமிட்ட அறிஞர், இதன் பொருளை நன்கு விளக்குவதற்காகப் பட்டர் என்ற ஆசாரியரின் வைபவத்துணுக்கு ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

தம்மை இகழ்ந்தவர்களுக்குப் பட்டர் ஆபரணம் கொடுத்தாராம். அப்படிக் குற்றஞ் செய்தவர்களைப் பீதாம்பரம் – பொன்னுடை – போர்த்தும் கௌரவித்தாராம். இந்த நிகழ்ச்சியைச் சற்று விவரமாகத் தெரிந்துகொள்வோம்:

ஒரு நாள் பெருமாள் சந்நிதியிலே பட்டர் சிந்தித்துத் தற்சோதனை செய்துகொண்டு நின்றார். அப்போது சிலர், அவர் நின்றுகொண்டிருந்ததை அறியாதவர்களாய்ச் செவி பொறுக்கவொண்ணுத வசை பொழிந்து, அவரை நிந்தனை செய்தார்கள். பட்டருடன் நின்றுகொண்டிருந்த பக்தர்களின் நெஞ்சு புண்ணுயிற்று. பட்டரோ அகமகிழ்ந்து, முகமலர்ந்து, அருள் நோக்குடன், தாம் அணிந்துகொண்டிருந்த திருவாழி

மோதிரத்தைக் கழற்றித் தம்மை இகழ்ந்தவர்களில் ஒருவருக்கு வழங்கிவிட்டார்!

அதிகமாக இகழ்ந்தவரை அழைத்துத் தமது பொன்னுடையால் அவரைப் போர்த்து, வாழ்த்தினாராம் பட்டர்.

பட்டரிடம் பயபக்தி விசுவாசத்துடன் சந்நிதியில் நின்று கொண்டிருந்த பாகவதர்கள், வியப்பும் திகைப்பும் ஒருங்கே அடைந்தனர். அவர்களை நோக்கிப் பட்டர், 'இவர் நிந்தனைக்கு அஞ்சி, நான் கொடுத்தேன் என்று நீங்கள் எண்ணவேண்டாம்' என்றார்.

திகைப்பும் வியப்பும் அதிகரித்தன. 'நான் அறியாத குற்றங்களையும் பெருமாள் திருச்செவி சாத்தி, நமது தற்சோதனைக்கு உதவிய உதவிக்காகக் கொடுத்தேன்!' என்று பட்டர், தமது நிலையை விளக்கிக் கூறினார்.

இந்த வார்த்தை, அந்தச் சந்நிதியில் – கல்லும் கரைந்து உருகுமாறு - பட்டர் உள்ளத்தின் ஆழத்திலிருந்து புறப்பட்டது. இதைக் கண்ணீர் பெருகக் கேட்டு நின்றார்கள் பக்தர்கள். பட்டர் சொன்னதை எதிரிகளும், கண்ணீரும் கம்பலையுமாகக் கேட்டுத் திருந்தினார்கள் என்று கருதலாம்.

தமிழர் பொதுமறையான திருக்குறளில், குற்றம் செய்தாரைத் தண்டிப்பதற்கு ஓர் அதிசய உபாயம் கூறப் பட்டுள்ளது.

> 'இன்னாசெய் தாரை ஒறுத்தல், அவர்நாண
> நன்னயம் செய்து விடல்'

என்பது திருவள்ளுவர் வாக்கு.

தமக்குப் பொல்லாங்கு செய்தவர்களைக் கொடுந் தண்டனைக்கு உட்படுத்தவேண்டும் என்பது பழிக்குப் பழி வாங்கும் சுபாவம். 'பல்லுக்குப் பல்! கண்ணுக்குக் கண்!'

என்று பழிவாங்கும் பழக்கம், நினைப்பிற்கும் எட்டாத நெடுங் காலமாக மண்ணுலகில் காணப்படுவது கண்கூடு. 'ஒரு பல்லுககு இரண்டு பற்கள்!' என்ற ரீதியில் பழிவாங்குவதும் இவ்வுலகம் அறியாத தன்று. இத்தகைய தண்டனைக்கும் மேலான 'தண்டனை' ஒனறைப் புத்தப் புதிய முறையில் வெளி யிடுகிறார் மகாத்மா திருவள்ளுவர், மேலே சொன்ன குறளில்.

'இன்னு செய்தார், அவர்தாமே நாணும்படியாக நல்ல நயமுடைய உபகாரச் செயல்களைச் செய்து விடுக; இதுவே தண்டிக்கும் நெறி' என்பது திருவள்ளுவர் சித்தாந்தம். இதற்கு உரை காணும் பரிமேலழகர், 'இன்னு செய்தார், தாமே நாணு மாறு அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து, அவ்விரண் டனையும் மறத்தலே ஒறுக்கும் நெறி' என்பதை வற்புறுத்துகிறார். இதுவே, 'வெல்'லும் உபாயம்' என்பர்.

'இத்தகைய நன்மை செய்த பெரியவர்களுக்கு அறியாமல் பொல்லாங்கு செய்தோமே' என்று இன்னு செய்தார், தங் களைத் தாங்களே நொந்துகொள்வார்கள்; எனவே திருந்து வார்கள். இதுவே வெற்றி என்பது வள்ளுவர் கண்ட ஒழுக்க நெறி.

இந்த நெறியை ஸ்ரீ வைஷ்ணவத் தொண்டர்கள் எவ்வாறு புதுமை செய்து, பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதை, இந்தக் குறளுடன் ஸ்ரீவசனபூஷண வாக்கியத்தை ஒப்பிட்டு நோக்கி, நன்கு உணர்ந்துகொள்ளலாம். எதிரிகள் இன்னு செய்ததையும், நாம் அவர்களுக்கு நன்மை செய்ததையும் ஒருங்கே மறந்துவிட வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து. பிள்ளை லோகாசாரியரோ, செய்த குற்றத்தையும் உபகார மாகவே நினைத்துக்கொண் டிருப்பது நலம் என்கிறார்! இதற்கு எத்தகைய சீலமும் பணிவும் வேண்டும்!

எத்தகைய சீலம் உள்ளவர்களாயினும், 'சீலம் இல்லாச் சிறியன்' என்று பணிவது பாகவத தருமம். எவ்வளவு நிறைவு

இருந்தாலும், 'நிறைவு ஒன்றும் இலேன்' என்று தற்சோதனை செய்து பார்ப்பதே தொண்டு நெறி. இந்தத் திருநெறியிலே, ஒருவர் செய்த குற்றத்தை மறப்பதைக் காட்டிலும் அவர் களையும் உபகாரிகளாக மதித்து, முன்னேறுவதே முறை என்பது ஆழ்வார் – ஆசாரியார்களின் சித்தாந்தம்.

ஒருவன், 'அடியேன்' என்று தன்னைத் தாழ்த்திக்கொண்டாலும் போதாது; பிறர் கூறும் தாழ்வையும் உபகாரமாக அங்கீகரிக்கும்போதுதான், ஸ்ரீ வைஷ்ணவம் என்ற தொண்டு, நிலைபெறுவதாகும். குற்றஞ் செய்தவர்களின் உள்ளம் புண்படவும் வேண்டாம், நாணமடையவும் வேண்டாம் என்பது தொண்டர் நிலை. இந்த நிலை பிறரையும் திருத்தித் தொண்டராக்கக்கூடும் என்பர்.

லட்சுமீநாராயண மூர்த்தியாக இறைவனைச் சரண மடைந்து, கள்ளமற்ற உள்ளமுடையவனாக, அமைதியோடு கூடிய விழிப்பான ஒருமையுள்ளத்துடன் தொண்டன் நல்லாசிரியனை அடைந்து, நல்லார் தோழமை பெறுகின்றான். வேத சாஸ்திர சாரத்தைக் கிரகித்து, மக்களுக்கு ஊட்டித் தானும் அநுபவிக்கிறான். உப்பைப்போல் கைங்கரியத்திலே முழுக்க முழுக்கத் தன்னை இழந்துவிடுகிறான்.

இத்தகைய தொண்டன் எல்லாருக்கும் உபகாரி; குற்றம் செய்தவர் உள்ளிட்ட எல்லா மக்களும் இத்தொண்டனுக்கு உபகாரிகளே ஆவர். இத்தகைய வளர்ச்சி, தொண்டர் குழாத்திலே இயற்கையாக ஒருவனுக்குச் சாத்தியமாகவும் கூடும்.

இத்தொண்டர்கள் கல்வித் திமிர், செல்வத் திமிர், சாதித் திமிர் என்ற முக்குறும்பும் இல்லாமல் வாழ்க்கை நடத்துவார்கள். காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்று குற்றங் களைக் காட்டிலும் நமது மதியை வஞ்சித்து மயக்கக்கூடியவை, மேலே சொன்ன முக்குறும்பே என்பது தொண்டர் கொள்கை.

இமமுககுறும்பும் வாழ்ககைப் பாதையில் நம்மை வஞ்சித்துப் படுகுழுயில வீழ்த்திவிடும எனபர். இந்த முத்திமிரையும், 'வஞ்ச முககுறும் பாமகுழி' என்று திருவரங கத்து அமுதனர் தமது 'இராமநுச நூற்றந்தாதி'யில் குறிப்பிடு கிறர் இக்குழியைக் கடத்தி, நெறிப்படுத்துபவன நல்லாசிரியன் என்ற குறிப்பையும அமுதனர் வாககில் காண்கிறேம்.

**'ஒன்றே குலம்' :**

ஆராய்ச்சி – அறிஞர் திரு. மு. இராகவையங்கார், 'ஆழ் வார்களின் காலநிலை' என்ற தமது நூலில கூறியிருப்பதுபோல், 'மிக உயர்குலத்தோரும் மிகத் தாழ்குலத்தோருமான திருமா லடியாா பலர், திருவரங்கப் பெருமான திருமுன்றிலில் சாதி வேற்றுமை அற ஒருங்கு குழுமி, ஒருவரை ஒருவர் தெயவ சமானமாகக கருதி, வழிபட்டு வந்தனர் என்பதும், அக்குழு வினருள் அத்தகைய வேற்றுமை பாராட்டுதல் பெரியதோா அபசாரமும் இழுக்குமாகக கருதப்பட்டு வந்தது என்பதும் அறிஞர்கள அறிந்த செய்திகளே. 'அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள்' என்பது பிள்ளைப்பெருமாளையங்கார் வாககு.

'பக்தி பெரிது; குலம் பெரிதன்று' என்பது திருமாலடியா ரான தொண்டர்களின கொள்கை.

'பாதியாய அழுகியகால் கையை ரேனும,
  பழிதொழிலும் இழிகுலமும் படைததா ரேனும்,
''ஆதியாய்! அரவணையாய்'' என்ப ராகில,
  அவரன்றே யாம்வணங்கும அடிகள் ஆவார் ?
சாதியால ஒழுககத்தால மிககோ ரேனும,
  சதுரமறையால வேள்வியால தக்கோ ரேனும,
போதிலநான் முகனபணியப் பள்ளி கொள்வான்
  பொன்னரங்கம போற்ருதார் புலையர் தாமே.'

என்ற பிள்ளைப பெருமாளையங்கார் வாககிலே சாதியுணர்வு

முதலான வேற்றுமை உணர்ச்சிகளைக் கடந்தது தொண்டக் குலம், என்பது தெளிவாக விளக்கப்படுகிறது.

இத்தகைய தொண்டர்களுக்குத் தொண்டே பேரின்ப மாகும். எனினும், தொண்டினை, 'அடிமைத்திறம்' என்றும், 'சேஷத்வம்' என்றும் குறிப்பிடுவதும் உண்டு.

ஒருவன் ஒரு விஷயத்தில் ஆசை கொள்ளும்போது, அவ் விஷயத்திற்கு அடிமையாகிறான்; அதாவது, 'சேஷத்வம்' அடை கிறான் உலக விஷயங்களில் ஆசை கொள்வது, பந்தம் என்ப தும் பகவத் விஷயத்தில் ஆசைகொள்வது பந்த விடுதலை என் பதும் அறிஞர் கருத்து; பக்தர் அநுபவம்.

'அடிமைத்திறம்' —சேஷத்வம்— என்றதும், 'அது துன்ப மல்லவா? சுதந்தரந்தானே இன்பமானது?' என்று பலரும் வாதிக்கக்கூடும். இதற்கு விடையாகப் பிள்ளைலோகாசாரியர் பின்வருமாறு கூறுவர்: 'சேஷத்வம், துக்க ரூபமாகவன்றோ நாட்டில் காண்கின்றது என்னில், அந்த நியமம்இல்லை; உகந்த விஷயத்துக்குச் சேஷமாயிருக்கும் இருப்பு, சுகமாகக் காண்கை யாலே.'

சாதாரணமாக, உலகத்தில் ஒருவனுக்கு வேறொருவன் அடிமை செய்வது துக்க ரூபமானதுதான். ஆனால் காதலி காதலனுக்கோ, காதலன் காதலிக்கோ அடிமையாகப் பணி புரிவதில் துக்கம் ஒன்றும் ஏற்படுவதில்லையே! அது சுகமாகத் தானே காணப்படுகிறது! வாழ்க்கை, பக்திக் காதல் மயமாகிவிட் டால், தொண்டு பேரின்பந்தான் என்பது பக்திக்காதலர் கொள்கையும் அநுபவமும் ஆகும்.

தொண்டர்கள், இறைவன் தமர் – ஈசுவர குடும்பத்தினர்–. இக் குலத்தினரில் மிகச் சிறந்தவர்களை ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் ஆழ்வார்கள் என்றும், ஆச்சாரியர்கள் என்றும் இரு வகுப்பினராகப் பிரித்துக் காட்டுகிறது.

ஆழ்வார்கள் பல்வேறு வகுபபினர். இவர்களெல்லாம் தெய்வ சமானர்களாக இன்றும வழிபடப் பெறுகின்றனர். இன்றும் இவர்களுடைய பிரபந்தங்களை வேத சமானமாக மதிக் கப்படுகினறன.

தூய நற்றமிழ் நூல்களாகிய இப்பிரபந்தங்களே இவர் களது பெருநதொண்டு; இன்றும் என்றும எத்தகைய நிலையிலும் வழிகாட்டத்தக்க தனிப்பெருந் தொண்டு.

இவர்களில் முதலாழ்வார்களான பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற மூவரைக் குறித்தும், அவர்களது தமிழ்ப் பணி குறித்துய நாம் ஏற்கனவே தெரிநதுகொண் டிருக்கிறோம். இனி, நாம் முதலாழ்வார்களுக்கு அடுத்தவரும, பேயாழ்வாருடைய சீடருமான திருமழிசையாழ்வாரின் வாழ்க்கை, உபதேசம முதலான விஷயஙகளைத் தெரிநது கொள்ள முயல்வோம்.

இந்த ஆழ்வாரைத் திருமழிசைப்பிரான் என்றும கூறுவர். 'திருமழிசை வந்த ஜோதி' என்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவரைப் போற்றுகின்றனா.

திருமழிசைப்பிரானோடு திருப்பாணாழ்வாரையும் நாம் அறிந்துகொள்ள முயலவது நலமாகும். திருப்பாணரைப் 'பாண்பெருமாள்' என்று போற்றுகிறது ஸ்ரீவைஷ்ணவ உலகம.

ஆழ்வார்களுள இவரே பகவானைக குறித்து, மிகக் குறைந்த அளவில் பாசுரம் அருளிச் செய்தவர். எனினும், இவா பாசுரங்களைப் 'பழமறையின் பொருள்' என்று ஸ்ரீவேதாநத தேசிகர் புகழ்ந்து போற்றியுள்ளார்.

திருப்பாணாழ்வார் — 'தீணடத்தகாதவாக'ளென்று அந் நாளில் ஒதுக்கி வைககப்பட்டிருந்த—பாணர் வகுப்பைச சேர்ந்தவர் என்பது பிரசித்தம். திருமழிசையாழ்வார்,

குலங்களாய ஈரிரண்டில்
ஒன்றிலும் பிறந்திலேன்

என்று கூறியுள்ளார்.

எனினும், தொண்டக்குலமே தொழுகுல மாதலின் இவர்கள் இருவரும் மற்றை ஆழ்வார்களைப்போலவே தெய்வ சமானராய் வழிபடப் பெறுகின்றனர். இவ் இருவருள் திருமழிசை யாழ்வார், முதலாழ்வார்கள் ஏற்றிய மொழி விளக்கை, எவ்வாறு போற்றி, ஒளி வீசச் செய்திருக்கிருர் என்பதை இப்போது அறிந்துகொள்வோம்.

# 2

# நந்தவனத்திலே (குருவும் சீடரும்)

'தனதானியங்களாலும், பூக்கள் கனிகளாலும், பொன்னாலும் மணியாலும் வளமுற்று விளங்குகிறது இந்த மயிலைமா நகரம். இங்குள்ள தர்க்க சாஸ்திரிகளோடு வாதஞ் செய்து, அவர்களுடைய நுண்ணறிவெல்லாம் இருளேதான் என்பதை மெய்ப்பிக்கவேண்டும்' என்றார் சித்தர், தமது சீடர்களை நோக்கி. அந்நாளில் மயிலாப்பூர் பல்வேறு சமயிகளுக்கு உறைவிடமாகவும், தமிழ் நாகரிகத்தின் வளர்ப்புப் பண்ணைகளுள் ஒன்றாகவும், அறிஞர்கள் பலரும் பல்வேறு தலங்களிலிருந்தும் வந்து குழுமி, வாதப் போர்கள் நடத்தும் ஒரு களமாகவும் இருந்தது.

## சித்தரின் வெற்றிகள்

சித்தர், மயிலைக்குச் சில் கல் தொலைவிலுள்ள திருமழிசையைச் சேர்ந்தவர். கருவிலே திருவுடையராக இருந்து, கல்விப் பயிற்சியிலும், பல்வேறு சமய நூல்களின் பயிற்சியிலும் தேர்ச்சி பெற்றுத் தர்க்க வாதங்கள் செய்து செய்து, தமது அறிவை மிகவும் கூர்மையாகத் தீட்டி வைத்திருந்தார்.

உறையிடாத கத்திபோல் அதைக் கண்ட கண்ட இடங்களில் பிரயோகிப்பதற்கும் இவர் பின் வாங்குவதில்லை. தர்க்க

வாதிகள் விலகிப் போனாலும், வலியச் சண்டைக்குப் போய் விடுவார் இவர்.

'பிணங்கும் சமயம் பலபல' வாய் இருக்கக் கண்டு, சமயந் தோறும் புகுந்து புகுந்து, ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். ஆனால்,

> 'செம்மையால் உள்ளுருகிச் செவ்வனே நெஞ்சமே!
> மெய்ம்மையே காண விரும்பு'

என்ற பேயாழ்வாரின் பெருங் கொள்கைக்கு இணங்க ஆன்ம ஆராய்ச்சிச் சாலையில் இன்னம் ஆராய்ச்சி நடத்தி, இவர் வெற்றி காணவில்லை. இந்த நோக்கத்துடன் முதலாழ்வார்களைப் போல் இவர் ஓடித் திரியவில்லை.

வாதப் போர்களில் எத்தகைய கொள்கையையும் வெட்டி வீழ்த்தி, வெற்றி பெற வேண்டும் என்பதையே பெரு நோக்காகக் கொண்டு சஞ்சாரம் செய்தார். திக்விஜயம் பண்ணிப் பல்வேறு தலங்களிலும் வெற்றிக் கொடியைப் பறக்கவிட்டார்.

அதே யாத்திரையில் இப்போது திருமயிலை வழியாக வந்துகொண் டிருந்தார். மயிலையின் சிறப்பு, இந்தச் சித்தர் உள்ளத்தையும் வசீகரித்தது; வேறு தலங்களைக் காட்டிலும் வசீகரித்ததுபோலத் தோன்றியது, இங்குள்ள ஏதோ ஒரு சிறப்பான சக்தி.

சிறந்த பாகவதர்களும் பக்தர்களும் அந்நாளில் மயிலையைச் சார்ந்திருந்த திருவல்லிக்கேணியில் கூடி, நாம ஸங்கீர்த்தனம் செய்து, இறைவனை வழிபடுவது பிரசித்தம். 'அந்தப் பக்தர்களுடனும் வாதஞ் செய்வோம்; அவர்களையும் திகைக்கச் செய்வோம்!' என்று சித்தர் உள்ளம் எதிர்பார்த்தது.

> 'உளன்கண்டாய், நன்னெஞ்சே!
> உத்தமன்

என்று பக்தர், கடவுள் உண்மையை வற்புறுத்தினால் அல்ல வென்று சொல்லவும், இல்லையென்று மறுக்கவும் ஆற்றல் இல்லையா இந்தத் தர்க்க நிபுணருக்கு!

'உள்ளத்தின் உள்ளான்' என்று பக்தர்கள் சொன்னால், 'ஓஹோ, அப்படியா செய்தி? ஆண்டவன் உள்ளே தான் இருக்கிறானா? வெளியே ஒன்றும் இல்லையா? உள்ளத்தின் கற்பனைதான் உங்கள் புருஷோத்தமன்!' என்று வாதிக்கவும் இவருக்குத் தெரியும். 'ஆண்டவன் வெளியேதான் இருக்க வேண்டும் ஐயா! உம்முடைய உள்ளத்தில் தோன்றும் மயக்க உணர்ச்சிதானா சுத்த அறிவான கடவுள்?' என்று கேள்வி கேட்டு மடக்கவும் தெரியும்.

'ஸ்தூலத்திற்குள்ளே சூட்சுமமான ஆத்மா எப்படி வந்தது? அதி சூட்சுமமான பரமாத்மா எப்படி வந்து புகுந்தது?' என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு, எதிரியின் வாயை அடைக்கச் செய்யும திறமையும் இவருக்கு உண்டு. 'ஆத்மா, பரமாத்மா எல்லாம் சோம்பர்கள் விவகாரந்தானா?' என்று ஆஸ்திகர்களே ஐயுறவுகொள்ளுமாறு விவகரிக்கும் ஆற்றலும் இவருக்கு உண்டு.

கோவிலில் வழிபாடு செய்யும் பக்தர்களை நோக்கி, 'வெளியிலே விக்கிரகத்திலா உங்கள் உள்ளத்திலுள்ள உத்தமனைக் காண்கிறீர்கள்?' என்று சொல்லி, அவர்களுடைய பக்தி விசுவாசங்களை நிலைகுலையச் செய்துவிடுவார்.

தியானம் செய்துகொண் டிருப்பவரை நோக்கி, 'என்ன பேடித்தனம் ஐயா! வெளியே ஆண்டவனைக் காணப் பயந்து, கண்களை மூடிக்கொண்டு, கனவு காணப் பார்க்கிறீரே!' என்று முழக்கி, அவருடைய தியான சிந்தனைகளைக் கலைத்துவிடுவார்.

'வித்திலிருந்துதானே விளைவு?: உள்ளத்திலிருந்துதான் வெளியுலகம்; ஆலவித்திலிருந்து ஆலமரம் வளர்வதுபோல'

என்பார், ஒருசமயம். இவரொரு சமயம், 'ஆலமரத்தின் எத்தனையோ சிறு பழங்களில் ஒரு சிறு பழத்தின் எத்தனையோ சின்னஞ்சிறு விதைகளில் ஒரு சின்னஞ்சிறு விதையைப் பிரமாதப்படுத்துகிறீரே!' என்று நகைப்பார்.

ஒரு தத்துவ சாஸ்திரியை நோக்கி, ஒரு சமயம் சித்தர், 'சாஸ்திரியாரே, உண்மை எங்கே இருக்கிறது? உள்ளத்தில் இருக்கிறதா? வெளியே இருக்கிறதா?' என்று கேட்டார். அதற்கு அந்தத் தத்துவ சாஸ்திரி, 'உள்ளும் புறமுந்தான்' என்று விடையிறுத்தார். சித்தர் பளிச்சென்று, 'புறமும் உள்ளுந்தான் என்றால், பொருந்தாதோ?' என்று தர்க்கித்தார்.

சாஸ்திரியார் சற்றுக் கலங்கி, 'பொருத்தம், பொருத்தம்!' என்று முணுமுணுத்துக்கொண்டே, 'அருத்தம் தெரியாமல் விழிக்கிறேன், ஸ்வாமி!' என்றார். அதற்குச் சித்தர் சிரித்துக் கொண்டே, 'திருத்தமாய் நீரே சொல்லிவிட்டீர், "உள்ளும் புறமும்" என்று. அகமும் புறமும் ஒரே வட்டம்: இங்குண் டானால் அங்குண்டு; அங்குண்டானால் இங்குண்டு!' என்றார்.

தத்துவ சாஸ்திரியின் முகத்திலே கலக்கம் தெளிந்து மகிழ்ச்சிக் குறி கண்டதும், சித்தர் அவரை நோக்கி, 'நானோ, "உள்ளேதான் இருக்கிறான் உத்தமன்" என்பேன். புறத்திலே இந்தப் பாழான உலகந்தான் இருக்கிறது!' என்று சொல்லி, மறுபடியும் அவரைக் கலக்கத்திற்கு உட்படுத்திவிட்டார்.

பிரமித்து நின்ற தத்துவ சாஸ்திரியை நோக்கிச் சித்தர் மறுபடியும், 'இது பாழான உலகந்தானா? நன்றாகப் பாரும். அங்கே சமுத்திர கோஷம்; இங்கே ஒரே ஜனசமுத்திர கோஷம்! இதோ தாமரை, குமுதம், நீலோற்பலம், குவளை, ஆம்பல் முதலிய பூக்கள் நிறைந்த குளம். அன்னம் முதலான நீர்ப்பறவைகள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கின்றன! குளக்கரைச் சோலையில் பெண்கள் பாடிக்கொண்டே பூக்

கொய்கிறார்கள். இவ்வளவு அழகான பிரதேசத்தைப் பாழான உலகம் என்று எப்படிச் சொல்லலாம், சாஸ்திரியாரே!' என்றெல்லாம் பேசி, அவரை ஒரே குழப்பக் கடலில் ஆழ்த்திவிட்டார். சித்தரின் சீடர்களுக்கோ தங்கள் குருநாதரிடம் ஒரே பிரமை! ஒரே பிரேமை!

## திகைப்பும் தெளிவும்

பிறகு, ஒரு பாகவதர் அவ்வழியே வரக் கண்டு, திருமழிசைச் சித்தர், அங்கும் இங்கும் போய்க்கொண்டிருக்கும் பெருங் கூட்டத்தைச் சுட்டிக்காட்டி, 'அந்த ஜனசமுத்திரம் இவ்வளவு வேகமாகப் போவதுதான் எங்கேயோ?' என்று!கேட்டார். இதற்கு அவர், 'மரணத்தை நோக்கிப் போகிறார்கள்' என்றார். 'என்ன ஆழ்ந்த அறிவு!' என்று சித்தரும் சற்றுப் பிரமித்து நின்றார்.

'உயிர்கள் மரணத்தை நோக்குகின்றன; நித்திய வாழ்வை நோக்கவில்லை' என்று சித்தர், தமக்குத் தாமே சொல்லிக்கொண்டிருக்கும்போதே, 'உயிரும் தருமனையே நோக்கும; ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்று அந்தப் பாகவதர், உரதத குரலில் பாடிக்கொண்டு போவது காதில் விழுந்தது.

'என்ன அழகான வாக்கு!' என்றது சித்தரின் வாய்; ஆனால், 'என்ன அழகான உண்மை!' என்பது சித்தரின் உள்ளத்திற்கு இன்னமும் புலனாகவில்லை. சித்தரும் சீடர்களும், பூஞ்செடிகளும் பூமரங்களும் நிறைந்திருந்த ஓர் அழகான நந்தவனத்தை அடைந்தார்கள்.

'என்ன மனோஹரமான சோலை!' என்றான் சீடர்களில் ஒருவன். 'மிகவும் அழகாய் உள்ளது இந்தப் பிரதேசம். அதோ அந்தத் துளசி வனத்தைப் பாருங்கள்: என்ன அழகு!' என்றார் சித்தர்.

பசுஞ்சோலை சுடர்ச்சோலையாகக் காணப்பட்டது. காலைக் காற்று, மலர்களின் மணத்தைச் சுமந்து வந்தது. 'பட்சி ஜாலங்கள் பாடிக் குதூகலித்து, யாரை அப்படி வரவேற்கின்றன? எந்த ஞான சூரியனை இயற்கை, இத்தகைய அபூர்வ அழகு பூண்டு வரவேற்கிறது?,

'திருக்கண்டேன். பொன்மேனி கண்டேன்...' என்று பாடிக்கொண்டே வருகிருரே, இந்தப் பெரியாரின் நந்தவனந் தான் இது. எத்தனையோ சிறப்புக்களில் மயிலைமா நகரத்தின தனிப்பெருஞ் சிறப்பு, பேயாழ்வார் என்ற வைராக்கிய மூர்த்தி இங்கு அவதரித்த சிறப்பே ஆகும் என்பது குறித்துத் திருமழிசைச் சித்தரும் கேள்விப்பட்டிருக்கிருர்.

முகத்தையும் சற்றுத் தூரத்திலிருந்து உற்று நோக்குகிருர். 'இந்தப் பூக்களும் இந்தச் செடிகொடிகளும் இப்போது எவ்வளவு அழகாக ஜொலிக்கின்றன! அவ்வளவு அழகும் அந்த முகத்திலும் ஜொலிக்கிறது!' என்று தோன்றுகிறது சித்தருக்கு.

'இன்றே கழல்கண்டேன்; ஏழ்பிறப்பும் யான்அறுத்தேன்' என்று பாடிக்கொண்டே பேயாழ்வார் நந்தவன கைங்கரியத்தில் ஈடுபடுகிருர். திருமழிசைச் சித்தர், பூமரங்கள் பூங்கொடிகளின் மறைவிலிருந்து பேயாழ்வாரைக் கவனித்துக்கொண்டிருக்கிருர். குழலை வென்ற குரல் அது! என்று அதிசயமாய்க் கேட்டுக் கொண்டிருக்கிருர். சொல்லையும் பொருளையும் இசைவிக்கும் இசையின்பத்திலே சொக்கிப் போகிருர்.

மனத்துள்ளான் இறைவன் என்றும், அவனே மருந்தும் பொருளும் அமுதமுமாக இருக்கிருன் என்றும், அவனுடைய அழகே அழகு, அவன் காட்டும் ஒளியே ஒளி என்றும் பொருள் படப் பேயாழ்வார் பாடிக்கொண்டிருந்தது திருமழிசையாரைப்

பரவசமாக்கியது. ஆனால் இந்தப் பக்தர் ஏன் இப்படி இப் பூஞ்செடிகளையும் துளசிச் செடிகளையும் வேரோடு பறிக்கிறார்?

பட்ட மரம் தழைத்தது

பைத்தியமா? தலைகீழாக நட்டு வைக்கிறாரே? சித்தர் திகைக்கிறார்; சற்றுத் திகில் அடைகிறார். தம்முடைய சீடர்கள் ஆரவாரம் செய்யாமல் இருக்கும்படி சைகை காட்டி, மேலும் கவனிக்கிறார், பக்தரின் செயல்களை.

அதோ செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கவும் புறப்பட்டு விட்டாரே! அந்தக் கையிலுள்ள மண்குடத்தின் லட்சணத்தைத் தான் என்னென்பது? அதில் எத்தனை துவாரங்கள்! குடத்தில் எடுத்த தண்ணீர் முழுவதும் வழியில் ஒழுகிப் போகிறதே! ஒரு சொட்டுத் தண்ணீரும் துளசிச் செடிக்கோ பூஞ்செடிக்கோ வந்து சேரவில்லையே!

சித்தர் சிரித்தார்; ஒரு பெருஞ் சிரிப்புச் சிரித்தார். 'பேயார் என்ற பெயர் இவருக்கே தகும்!' என்று நினைத்தார். கைகொட்டிச் சிரித்துத் தம் சீடர்களை நோக்கி, 'பாருங்கள், இந்த வேடிக்கையை! பார்த்தீர்களா இந்தப் பேய்த்தனமுள்ள பக்தனை! இப்படியும் ஒரு கொள்கை. உண்டா! இதுவோ பாகவத தருமம்!' என்று முழக்கினார்.

பேயாழ்வார் புன்முறுவல் பூத்தார்.

> கருமா முகில்வண்ணன் கார்க்கடல்நீர் வண்ணன்
> திருமா மணிவண்ணன் தேசு

என்று பாடி நிறுத்திவிட்டுத் திருமழிசையாரை நோக்கினார். திருமழிசையாரும் உற்று நோக்கினார். 'ஆஹா; என்ன தேஜஸ்! திருமா மணிவண்ணனின் தேஜஸையே இந்த மாசற்ற திருமுகத்தில் காண்கிறேமோ!' என்று பிரமித்தார் ஒரு கணம்.

பேயாழ்வார் அமைதியாகவும் கண்டிப்பாகவும் பேசினர், திருமழிசையாரின் முகம் நோக்கி. 'உம்முடைய பேய்த்தனத்தை உமக்குக் காட்டுவதற்குத்தான் நான் இப்போது என்னுடைய நந்தவனத்திலே இப்படிச் செய்யத் துணிந்தேன்! வார்த்தை, வார்த்தை, வார்த்தை! ஓரே வார்த்தைக் கடலிலே மூழ்கிக் கிடக்கிறீர்! சத்தத்தையே சங்கீதம் என்று மயங்குவதுபோல் குதர்க்கத்தையே ஆராய்ச்சியென்று எண்ணுகிறீர். மணிவண்ணனுக்கு ஆட்பட்டு அவனை வாழ்த்தக் கிடைத்திருக்கும் வாயைக் கொண்டு, வீணுக விவகரித்துக்கொண் டிருப்பதால் நீர் அடைந்த பயன்தான் யாதோ! இந்தப் பரிதாப நிலையில் உம்மை நோக்கி, நீரே சிரித்துத் திருந்துவதுதான் முறையாகும்.

அந்த முகமும் கண்களும் திருமழிசையாரை வசீகரித்து விட்டன. இதுவரை வீண் வாதம் செய்து, பொழுது போக்கி வந்த காலமெல்லாம், தம் வாழ்க்கையை வெட்டிக் குறைத்த வாளாகத் தோன்றிப் பயமுறுத்தியது. பேயார் செய்து காட்டிய அந்த விபரீத நந்தவன கைங்கரியம், கடந்துபோன தமது வாழ்க்கையின் அறிகுறிதான் என்பது புலனுகிவிட்டது. சித்தர் அழுதார்; தொழுதார்.

'இனி அடியேன் அஞ்சாதிருக்க அருள்புரிய வேணும்' என்று பிரார்த்தித்தார், திருமழிசையார் மயிலையாரை நோக்கி.

> எஞ்சா இணையடிக்கே ஏழ்பிறப்பும் ஆளாகி
> அஞ்சா திருக்க அருள்

என்று உலகளந்த பெருமாளைப் பிரார்த்தித்த வண்ணம் திருமழிசையாருக்கு அருள்புரிந்தார் பேயாழ்வார்.

'இவரது சிந்தையே, இருளாத சிந்தை' என்று தீர்மானித்த திருமழிசையார் பேயாரையே தமக்குக் குருவாகக் கொண்டார்.

இவருக்குப் பணிசெய்தும், இவருடன் பணிசெய்தும், இடையிடையே உரையாடியும், தீராத ஐயப்பாடுகளை யெல்லாம் தீர்த்துக்கொண்டார்.

பட்ட மரம் தழைத்ததுபோலத் தழைத்தது பக்தி. இவருக்குப் பக்திஸாரர் என்று புதிய நாமம் சூட்டினர் பேயாழ்வார்.

பேசுவார் எவ்வளவு
பேசுவர் அவ்வளவே

என்று எம்பெருமான் தானே வரையறுத்துக்கொண் டிருக்கும் சொரூப சுபாவங்களைத் திருமழிசையாரது பேச்சும் பாசுரமும் ஒரு புதிய முறையில் உலகத்தாருக்கு வெளியிடக் கூடுமென்று நம்பினர்.

இவரால் பாகவத தருமம் ஒரு புதிய சக்தி பெறும் என்றும் பேயாழ்வார் உறுதியாக நம்பினர். இந்த நம்பிக்கையுடன்,

மெய்ம்மையே காண விரும்பு

என்று தம் நெஞ்சை நோக்கித் தாம் உபதேசித்து, வெற்றி கண்டிருந்த அந்த உபதேசத்தைப் புதிய சீடரின் நெஞ்சிலும் உயிராசையாக இயங்குமாறு செலுத்திவிட்டார்.

பேயாழ்வாரோடு திருமழிசை யாழ்வாரும் திருவல்லிக் கேணி எம்பெருமானை வழிபட்டார். வேறு திருக்கோயில்களிலும் இருவரும் வழிபாடு செய்தனர். பேயாழ்வாரோடு பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்வதும், அவர் சொல்ல, ஹரி கதைகள் கேட்பதும் திருமழிசையாருக்குப் பேரின்பமாக இருந்தன,

உள்ளத்தின் உள்ளே உளன் என்று பேயார் கண்டு, காட்டிய லட்சுமீ நாராயண மூர்த்தியைத் திருமழிசையாரும் தமது நன்னெஞ்சில் கண்டுகொண்டு, பூரித்துப் போனர். இக்

காட்சி, வாழ்க்கைக்கு ஒரு புதிய பொருள் காட்டியது; ஒரு புதிய சுவை ஊட்டியது.

'வாழும் வகையறிந்தேன்......எங்கள் பெருமான் அடி சேரப் பெற்று' என்று பேயாழ்வார் பாசுரமிட் டிருக்கிறு ரல்லவா? திருமழிசையார் இந்தக் குருவின் அடி சேரப்பெற்று, 'வாழும் வகை' அறிந்துகொண்டார். இவர் உள்ளமும், 'கோல்தேடி ஓடும் கொழுந்து' போல். 'மால்தேடி ஓடி' மகிழ்வு எய்தியது.

'ஏது கதி? ஏது நிலை? ஏது பிறப்பு?—என்னுதே, எல்லாக் காலத்திலும் இறைவன் அடியார்களுக்கு இரட்சகனுகவே இருப்பான்' என்று பேயாழ்வார் கண்டுகொண்ட உண்மை யைப் பக்திஸாரர் என்ற திருமழிசையாரும் அநுபவித்து அறிந்து கொண்டார்.

உய்த்துணர்(வு) என்றும்
ஒளிகொள் விளக்கேற்றி

மயிலைப் பேயார் கண்டுகொண்ட உத்தமனை அவர் அருளால் திருமழிசையாரும் தமக்கு உரிமையாக்கிக்கொண்டார்.

'அன்றைய மயிலை என்ற ஜனசமுத்திரத்திலே ஒரு திவலை தான் பேயாரும்!' என்று ஆதியில் நினைத்திருந்தார் திருமழிசை யார். ஆனுல் இப்போது இந்த ஜன சமுத்திரம் தந்த ஆரா அமுதமல்லவா நமது ஆசாரியர்!' என்று தெளிந்தார்.

இந்த ஞானத் தெளிவு, திருமழிசையாருக்குப் பேயாழ் வாரின் நந்தவனத்திலே மலர்ச்சிபெற்ற மலர்களோடு ஒரு வாடாமலராய், மலரொளியாய்க் கிடைத்தது என்று ஊகிக் கலாம.

# 3

# பக்தி சாரரின் பக்தி யோகம்

சென்னை மாநகரத்திற்கு அருகே உள்ள திருமழிசை என்ற தலத்தை வடமொழியில் மஹீஸார க்ஷேத்திரம் என்று கூறுவது உண்டு. இங்கே முனிவர் ஒருவர் தமக்குப் பிறந்த குழந்தையை ஒரு பிரப்பந் தூற்றின் கீழே; சிறு துணியை விரித்து, அத் துணி மேல் வைத்துப் போய்விட்டாராம்.

அக்குழந்தை ஓர் உருவும் இல்லாமல் பிண்டமாகக் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதால் பார்க்கவர் என்ற அம் முனிவரும் அவர் மனைவியும் வெறுப்புடன் அதை அப்படி அங்கே விட்டுச் சென்றனராம். அம்முனிவருக்கும் கனகாங்கி என்ற அப்ஸரஸுக்கும் பிறந்த குழந்தையானதால் அவர்கள் அப்படிப் புறக்கணித்து விட்டுப் போனதாகவும் ஒரு கதை வழங்குகிறது.

'இறையருள் காப்பதாக' என்று பிரார்த்தனை செய்து விட்டு, முனிவர் தவம் செய்யச் சென்றபின், பிண்டம் குழந்தையுருப் பெற்றுவிட்டதாம், பசுங்குழந்தை, பசி தாகங்களால் அழத் தொடங்கியது. அப்போது அங்கே பிரம்பு அறுக்க வந்த திருவாளன் என்பவன் அழுகுரலைக் கேட்டு, அருகணைந்து, குழந்தையைக் கண்ணுற்றுப் பெருமகிழ் வெய்தி, வாரி எடுத்துக்கொண்டு இல்லம் சேர்ந்தான்.

மனைவியான பங்கயச்செல்வி கையில், திருவாளன் குழந்தையைக் கொடுக்க, அவள் அக்குழந்தையைத் தானே பெற்றெடுத்தவளைப்போல் அவ்வளவு பிரீதியுடன் வாங்கிக் கொண்டாள். மக்கட் பேறு இன்றிச் சோர்வுற்றிருந்த இவர்கள், 'பகவான் அருளால் பிள்ளைச் செல்வம் பெற்றோம்!' என்று குதூகலமாகச் சீராட்டி வளர்க்கத் தொடங்கினர்.

இவர்கள் அந்தப் பிரப்பங் காட்டின் ஒரு பகுதியிலேயே வசித்து வந்தார்கள். பிரம்பறுத்து, கூடைமுடைந்து. விற்று, ஜீவனம் செய்தார்கள். திருவல்லிக்கேணி செல்லும் யாத்திரிகர்களுடன் பழகி, இவர்கள் விஷ்ணு பக்தர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் வளர்த்த குழந்தைதான் திருமழிசைப் பிரானை வளர்ந்தது என்பர்.

குழந்தைத் திருமழிசையார் பால் உண்ணாது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்ததாகவும், இறையருளால் இறைவனுடைய குணநுபவம் என்ற பாலமிழ்தத்தையே தாரகமாகக் கொண்டு, அழுகை முதலியவை ஒன்றும் இன்றி அவயவங்கள் பரிபூர்ணமாக விருத்தி அடையப் பெற்றதாகவும் கதைகள் வழங்குகின்றன. பங்கயச் செல்விக்குக் குழந்தைமீது ஏற்பட்ட பாச மிகுதியால் பால் சுரந்ததாகவும், அவள் பாலூட்டி வளர்த்ததாகவும் வடிவழகிய நம்பி தாசர் தமது 'திருமழிசைப்பிரானாழ்வார்' பிரபந்தத்தில் கூறியுள்ளார்.

இந்த அதிசயத்தைக் கேள்வியுற்ற ஒருவன்—நல்ல அறிவாளி, பிள்ளையில்லாதவன்—பாங்காகப் பாலமிழ்து காய்ச்சிக்கொண்டு தன் மனைவியோடு வந்து, 'இதைப் பருகியருள வேணும்' என்று குழந்தைத் திருமழிசைப் பிரானை வேண்டிக் கொண்டானாம். இவரும், அந்த வயது முதிர்ந்த தம்பதிகளின் மீது அருள் சுரந்தவராக அந்தப் பாலை உட்கொண்டாராம்.

அது முதல் அந்தத் தம்பதிகளுக்கு ஒவ்வொரு நாளும், திருமழிசைப் பிரான் வளரும் அழகைக் கண்ணுல் பருகுவதிலும், தங்கள் பாலமிழ்தத்தை அவர் அன்புடன் பருகு வதைக் காண்பதிலும் ஆசை அதிகரிக்கலாயிற்று. அதிகரிக் கவே, அவர்கள் நாள்தோறும் சூரியோதயமானதும் அவர் இருப்பிடத்திற்குப் பாலைக் காய்ச்சிக் கொண்டுவந்து சேர்வது வழக்கம். இப்படிப் பல தினங்கள் கழிந்தன.

ஒரு நாள் திருமழிசைப் பிரான் அந்தத் தம்பதிகளின் குறிப்பை அறிந்துகொண்டார். 'மக்கட் பேறு இல்லாத குறை யல்லவா இவர்கள் உள்ளத்தை வாட்டுகிறது?' என்று உள்ளம் இரங்கித் தாம் அமுது செய்து, எஞ்சியிருந்த பாலைப் பருகுமாறு அவர்களிடம் கொடுத்தாராம். அவர்கள் அதைப் பருகி, மூப் பொழிந்து யௌவனம் அடைந்தனராம்.

பின்னர் அவர்களுக்கு ஒரு புதல்வன் பிறந்ததாகவும், அவன் கணிகண்ணன் என்ற பெயருடன் அறிவிலும் ஒழுக்கத் திலும் பக்தியிலும் சிறந்தவனுக வளர்ந்ததாகவும், திருமழிசைப் பிரான் அவனுக்கு ஆசி அருளியதாகவும், அவன் இவருடன் பிரிவின்றி வாழ்ந்து வந்ததாகவும், இருவரும் பல தலங்களுக் குச் சென்று, பல்வேறு சமயங்களை ஆராய்ந்து பார்த்ததாகவும் கதைகள் வழங்குகின்றன.

முனிவரின் புதல்வரானதால் திருமழிசைப் பிரான் தக்க அறிவுப் பயிற்சி பெற்றதுடன், ஐம்புலன் அடக்கி, யோகம் புரிவதிலும் தேர்ச்சி பெற்ருர் என்பர். அஷ்டாங்க யோகத்தை அப்பியசிக்க வேண்டுமென்று தீர்மானித்ததும், தியானத்திற்கு உரிய பரம்பொருளைக் குறித்து, ஆராய்ச்சி செய்ய விரும்பினுர். இதற்காகப் பல்வேறு சமய ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டார். அந்த அந்தச் சமயத்தைத் தழுவி, அந்த அந்தச் சமயியே ஆகி, ஆராய்ச்சி நடத்தவும் துணிந்தார்.

நாஸ்திகம், ஜடமாயாவாதம், சாங்கியம், சாக்கியம்' சமணம் முதலான பல்வேறு கொள்கைகளை உணர்ந்தும் உரைத்தும் ஆராய்ந்தும் அநுஷ்டித்தும் பார்த்தார். 'சிவவாக்கியர்' என்ற பிரசித்தமான பெயருடன் சித்தராகிச் சஞ்சரித்து வந்ததாகவும் ஒரு கதை வழங்குகிறது. இந்த நிலையில்தான் திருமழிசையார் பேயாழ்வாரைச் சந்திக்க நேர்ந்ததாம்.

விஷ்ணு பக்தியை இவர் ஏற்கனவே அறிந்திருந்தார். 'வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கா'க இவர் திருமாலை அறிந்துகொண்டது, பேயாழ்வாரின் உபதேச வாயிலாகத்தான். இதற்குரிய மயர்வற்ற மதிநலம் இவருக்கு இறைவன் அருளியதும் பேயாழ்வார் என்ற குருமுகமாகத்தான்.

## பக்தரும் யோகமும்

நாம் கருணைகூர்ந்து 'பக்தி ஸாரர்' என்ற செல்வப் பெயரிட்டு அழைத்த அருமைச் சீடரை நோக்கிப் பேயாழ்வார், 'லட்சுமி நாராயணமூர்த்தியின் சொரூபத்தை நீரே உம்முடைய யோக திருஷ்டியினல் பார்த்து, உமக்குள்ளே இருக்கும் அந்த உத்தமனை அறிந்துகொள்ளும்' என்றார். திருமழிசையார் அந்த யோக ரகஸ்யங்களைப் பேயாழ்வாரிடம் கற்றுச் சிந்தித்துத் தெளிந்தவராய்த் திருவல்லிக்கேணியில் யோகத்தில் அமர்ந்தாராம்.

'தேன் அமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி' அந்நாளில் ஓர் அழகிய கடற்கரைச் சோலையாக இருந்தது. இந்தச் சோலை சூழ்ந்த தலத்தைத் திருமங்கையாழ்வார்,

குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில்கள்நின் றால,
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக் கேணி

என்று பாடியிருக்கிறார். இந்த அழகிய புனிதமான சோலையில் பக்திஸாரரின் யோகம், சிறந்த நற்பயனை அளித்திருக்க வேண்டும்.

'அறிவித்தேன் ஆழ்பொருள்' என்று இந்த ஆழ்வார் தமது 'நான்முகன் திருவந்தாதி' என்ற பிரபந்தத்தின் முதற் பாட்டிலேயே கூறியுள்ளார். இந்த ஆழ் பொருளின் ஸாரத்தைப் பேயாழ்வாரின் அருளாலும் தமது யோகத்தாலும் இவர் திருவல்லிக்கேணியில் ஐயந்திரிபின்றி அறிந்துகொண்டார் என்று கருதலாம்.

> தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்;
> ஆரும் அறியார் அவன்பெருமை;—ஓரும்
> பொருள்முடிவும் இத்தனையே, எத்தவத்தைச் [செய்தார்க்கும்
> அருள்முடிவ(து) ஆழியான் பால்.

[தேருங்கால் - தேர்ந்து பார்க்கும்பொழுது. ஓரும் – ஆராய்ந்துணரும். இத்தனையே – இவ்வளவேயாம். அருள் முடிவது ஆழியான்பால் - முடிவில் பலனை அளிப்பது திருமாலிடத்து உண்டாகும் திருவருளேயாம்.]

என்பது இந்த ஆழ்வார் தமது யோகத்தால் கண்டு கொண்ட பக்திப் பேருண்மை யாகும்.

இவரது யோகம் இவரைப் பக்தி யோகத்திலேயே கொண்டு சேர்த்துவிடுகிறது. இவரது பக்தி, ஞான பக்தி தானே. இந்தப் பக்தி, தீபத்திலே கொளுத்திய தீபம்போல் பேயாழ்வாரின் வைராக்கிய விளக்கிலிருந்து வளர்த்துக் கொண்டது தானே!

முனிவர்கள் வேள்விகள் செய்து, பேறு பெற முயன்றார்கள். தவம்புரிந்து பேறுபெறப் பார்த்தவர்களும் உண்டு.

குடல்வாடப் பட்டினி கிடந்து, கதிதேட முயன்றவர்களும் உண்டு. அஹிம்ஸா தர்மப் பிரசாரம் செய்துகொண்டே, தங்கள் உடம்பை ஹிம்ஸித்துக் கதி தேடியவர்களும் உண்டு.

இவர்களெல்லாம், 'அந்தக் கருமத்திலே அந்தத் தவறு ஏற்பட்டது, அல்லது இந்தத் தவறு ஏற்பட்டது' என்று வருந்தி, பெரும்பாலும் விசுவாசத்தையும் பலனையும் ஒருங்கே இழந்து விடுகிறார்களாம்.

திருமாலை வழிபடுவதில் அத்தகைய கஷ்டங்கள் இல்லை; எளிதில் வழிபட்டு உய்ந்துபோகலாமே என்கிறார் திருமழிசை யார்.

மெய்ப்பொருள்தான், வேத முதற்பொருள்தான்,
[விண்ணவர்க்கும்
நற்பொருள்தான் நாரா யணன்

என்ற மஹா விசுவாசத்தால் நாம் செல்லவேண்டிய பெருவழி எவ்வளவு எளிதாகிவிடுகிறது என்கிறார்.

இத்தகைய நல்வழி இருக்கும்போது குழிகள் நிறைந்த, வேறு வழிகளில் ஏன் செல்ல வேண்டும் என்பது இவர் மன நிலை. நம்பிக்கையும் நாம ஸங்கீர்த்தனமும் பக்தர்கள்மீது பற்றும் கைங்கரியத்தில் ஈடுபாடும் பக்தி நெறியை வசீகரம் ஆக்கிவிடுகின்றன.

பக்தியிலும், பகவத் பக்தியைக் காட்டிலும் பாகவதர் மீதுள்ள பக்தியே சிறந்தது. கைங்கரியத்திலும் பாகவத கைங் கரியந்தானே சிறந்தது.

அன்பர்பணி செய்யஎனை
ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானேவந்(து)
எய்தும் பராபரமே

என்ற தாயுமானவர் உள்ளம், பக்தி நெறியில் ஈடுபடுவோர்க் கெல்லாம் பொதுவாகவுள்ள மனநிலைதான்.

பக்தி நெறி அன்பு நெறி; எனவே இன்பநெறிதான். திருமால்மீது அன்பு கொண்டவர்கள், அவன் அன்புடையவன் என்றுகூடச் சொல்லமாட்டார்களாம். 'இறைவன் அன்புடை யவன்' என்றால், 'அன்பு என்பது வேறொன்று; அதை இறைவன் உடையவனாக இருக்கிறான்' என்று ஏற்படுகிற தல்லவா? 'திருமாலே அன்பு; அன்பே திருமால்' என்று சொல் லும்படி அன்பு-வடிவமாகவே இருக்கிறானும்.

> அன்பாவாய்! ஆரமுதம் ஆவாய்! அடியேனுக்(கு)
> இன்பாவாய்! எல்லாமும் நீஆவாய்!

என்று இவர், தாம் யோகத்தில் கண்டுகொண்ட இறைவனை நெஞ்சு குளிர அழைக்கிறார். இது இவரது ஆழ்ந்த அநுபவம் என்று சொல்லவேண்டும்.

இந்த இறைவனைப் 'பொன் பாவை கேள்வா!' என்று அருமையாக அழைக்கிறார். இவரும் முதலாழ்வார்களைப்போல் லட்சுமீ நாராயண மூர்த்தியை யோகக் காட்சியில் கண்டவர் தாமே?

திருமாமகளின் சேர்த்தியால் இறைவனது மரகதமேனி யையும் பொன் மேனியாகப் பேயாழ்வார் கண்டாரல்லவா? அவர் சீடரான இவரும், அச்சேர்த்தியால் கொழுந்துவிட்டு வளர்கின்ற ஒளியோடு கூடிய கேசவனைக் கண்டுகொண்ட தாகக் குதூகலப்படுகிறார். 'கிளரொளி என் கேசவனே!' என்று இவர் அழைப்பது காண்க.

இப் 'பொன்பாவை கேள்வன்' ஒரு குறைவும் இல்லாமல் நம்மைக் காப்பாற்ற வல்லவன் என்கிறார். என்னே, 'நான் அடியன்; ஆண்டருள்வாய்' என்று சரணாகதி செய்கிறார். இந்த

இவரது நிலையைக் கண்ணாடியில் காட்டுவதுபோலக் காட்டும் இப்பாட்டு முழுமையும் கூர்ந்து நோக்கத்தக்கது:

அன்பாவாய்! ஆரமுதம் ஆவாய்! அடியேனுக்(கு)
இன்பாவாய்! எல்லாமும் நீயாவாய்!—பொன்பாவை
கேள்வா! கிளரொளிஎன் கேசவனே! கேடின்றி
ஆள்வாய்க்(கு) அடியேன்நான் ஆள்.

[பொன்பாவை கேள்வா - திருமகள் நாயகனே. கிளர் ஒளி – வளர்கின்ற ஒளியையுடைய. ஆள்வாய்க்கு-ஆட்கொண்டு காப்பாற்ற வல்ல உனக்கு. ஆள் - ஆண்டருள்வாய்; நான் ஆட்படுகிறேன்.]

'திருவிருந்த மார்வன்' என்றும், 'சிரிதரன்' என்றும் இவர், தம் இஷ்டதெய்வத்தைக் குறிப்பிடுவதில் விசேஷ உவகை கொள்கிறார். இந்த லட்சுமீநாராயண மூர்த்தியின் பழைய விலாசந்தான் சேஷசயனம் என்பர்; 'இன்றைய விலாசம் என்னுடைய நெஞ்சம்' என்று மார் தட்டுகிறார்.

இடமாவ(து) என்நெஞ்சம் இன்றெல்லாம் பண்டு
படநா கணைநெடிய மாற்கு!

[பண்டு – முன்பு படம் நாக அணை - படங்களையுடைய சேஷசயனம். நெடிய மாற்கு - நெடிய மாலுக்கு.]

இப்படி உறுதி கூறுகிறவருக்கு யோகக் காட்சி எவ்வளவு தெளிவாக இருந்திருக்கவேண்டும்!

தெள்ளத் தெளிந்து, தித்திக்கும் அநுபவமாக இருந்திருக்க வேண்டும் இவரது ஞானபக்தியாகிய யோகக் காட்சி.

செவிக்கின்பம் ஆவதும்
செங்கண்மால் நாமம்

என்பது இவருக்குச் சாதாரண அநுபவம் ஆகிவிட்டது.

இந்த நாமத்தை உச்சரித்துக்கொண்டே இவர் யோகத்தில் மூழ்கிச் செவிக்கும் கண்ணுக்கும் சிந்தைக்கும் ஒருங்கே இனிய ருகிய செங்கண்மாலேக் கண்டுகொண்டார் எனக் கருதலாம். அந்தக் கண்கள், தம்மை நோக்கிக கசிந்து, சிவந்திருப்பதையும் நன்கு உணர்ந்துகொண்டார் எனலாம்.

யோகத்தால் இறைவனே அகமும் புறமுமாகக் கண்டு கொண்ட இவர்,

" கலந்துஎன் உள்ளத்துக் காமவேள் தாதை
நலந்தானும் ஈதொப்ப துண்டோ?

[உள்ளத்து - உள்ளத்திலே. காமவேள் தாதை - மன்மத னுக்குத் தந்தையான திருமால். நலம்தானும ஈது ஒப்பது உண்டோ – இந்த நன்மையை ஒத்த வேறு நன்மையும் இருக்க முடியுமா!]

என்று எவ்வளவு குதூகலமாக அந்த யோக அநுபவத்தைத் தம் கவிதையில வெளியிடுகிருர்!

இவர் கண்ட யோக நெறியில் ஞானத்திற்கும் பக்திக்கும் விசேஷ வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லே. இவரிடத்தில் ஞானம், பக்தி, யோகம் ஆகிய மூன்றும் பொருந்தியுள்ளன என்பதில் ஐயமில்லே.

பறவைகள் பறப்பதற்கு இரண்டு சிறகுகளும் ஒரு வாலும் இன்றியமையாதன என்பதுபோல, 'மனிதன் உய்ந்துபோக ஞானம், பக்தி, என்ற இரு சிறகுகளும், யோகம் என்ற நடு நிலேயும் வேண்டும்' என்பர் சுவாமி விவேகானந்தர்.

'எவன் என்னே இடைவிடாது அன்போடு வழிபடுகிருனே, அவனுக்கு என்னே அடையும் வழியை நான் காட்டுகிறேன்' என்று பகவான் கூறுவதாகச் சொல்லி, 'எவன் இறைவனுக்கு உவப்பா யிருக்குமென்று அவனேயே தியானிககிருனே அவன்

இறைவனுல கடாட்சிக்கப் பெற்றவன்; அவனே இன்றவனை அடைவான். இவ்வகைத் தியானத்திற்குப் பக்தி என்று பெயர்' எனகிருர் ஸ்ரீராமாநுஜர். 'தியானம் என்பது இடைவிடாமல் தயில தாரைபோல் ஓடும நினைவு' என்றும இவா கூறியுள்ளார். இத்தகைய பக்தியோகத்தில் பக்திஸாரர ஆழ்ந்திருந்தார் என்பதில் ஐயமில்லை.

திருமழிசையார் எத்தகைய யோகத்தில் ஈடுபட்டிருந்தார் என்பதற்கு இவரது 'நான்முகன் திருவந்தாதி'யில ஒரு குறிப்புமஇருககிறது 'திருமாலே! உனனை நான் அநுஸந்தித்தேன்; உன திருப்புகழ்களை எழுதி எழுதிப் பாாத்தேன' என்று சொலலிவிட்டு,

வாசித்தும கேட்டும் வணங்கி வழிபட்டும
பூசித்தும் போக்கினேன் போது

எனறு தமது பொழுதுபோககைப பேசுகிருா. இப பொழுது போககே இவர் ஈடுபட்டிருநத யோகம் என்று ஊகிக்கலாம்.

இந்த வாக்கில ஐநது அம்சஙகள் குறிககப்படுகின்றன: (1) வாசித்தல் (2) கேட்டல் (3) வணங்குதல (4) வழிபடுதல (5) பூசித்தல். இவற்றை யெல்லாம பொழுதுபோக காகக கொள்ளுமமனநிலையும் சேர்ந்தால ஆறு அம்சஙகளை இந்த வாககிலேயே கணடுகொள்ளலாம.

அநுசந்திததலையும எழுதுதலையும சேர்தது, ஆழ்வார் எட்டு அங்கங்களாக குறிப்பிடுவதாக ஊகிக்கக கூடும். இநத எட்டு அங்கஙகளும் பக்திஸாரர் கண்ட தம் பக்திப பெருநெறியிலே கண்ட அஷ்டாங்க யோகம் என்று கருதலாம்.

# 4

# திருமழிசையிலும் திருவல்லிக்கேணியிலும்

திருமழிசையில் தோன்றியதால் திருமழிசைப்பிரான் என்று பெயர் பெற்றிருந்த இந்த ஆழ்வாருக்கு, குருவாகிய மயிலைப் பேயார் சூட்டிய பெயர் 'பக்திஸாரர்' என்பதை நாம் அறிவோம். சித்தர், பக்தராக மாறிப் பிறந்த, ஞானப்பிற விலை நினைவூட்டுவதுதான் 'பக்திஸாரர்' என்ற திருப்பெயர்.

வீணை-விவகாரங்களில் திரிந்தோடிய உள்ளத்தை இவர், பக்தி என்னும் கயிற்றினால் பகவானுடன் கட்டி வைப்பதற்கு உதவிய ஆசிரியர் பேயாழ்வார். இந்த நல்லாசிரியரின் அருளால் திருமழிசையார், உரலைக் கண்ணனுடன் கட்டிவைத்த ஆய்ச்சிபோலத் தம் உள்ளத்தையும் கண்ணனுடன் கட்டி வைத்துப் பெரும் பேறு பெற்றார்; அந்தப் பேற்றைப் பிறருக்கும் வாரி வழங்கினார்.

'இவ் ஆழ்வாருடைய திரு அவதாரமும் ஒரு பிறவியிலே இரு பிறவியாயிறே இருப்பது' என்று பின்பழகிய பெருமாள் சீயர் அருளிய ஆறுயிரப்படி குருபரம்பராப்ரபாவம் தெரிவிக்கிறது.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர

என்று ஆண்டாள், கண்ணன் பிறந்து வளர்ந்த வைபவத்தைப் பேசுகிருள் அல்லவா? அப்படியே இருக்கிறது திருமழிசைப் பிரான் பிறந்து வளர்ந்த வைபவமும் என்பது பின்பழகிய பெருமாள்சீயர் வாக்கு. நந்தன் குலமதலே, ஆயர் குலத்திலே வளர்ந்ததுபோல், பார்க்கவ முனி புத்திரர், கூடை முடைந்து விற்றுப் பிழைத்த திருவாளன் குலத்தில் வளர்ந்தார் என்பது கருத்து.

'தத்துக் கொண்டாள்கொலோ? தானே பெற்ருள் கொலோ?' என்று பிறர் ஐயுற்று அதிசயிக்கும்படி அவ்வளவு அன்புடன் பங்கயச் செல்வி, குழந்தையை வளர்த்தாளாம். திருமழிசையார், சித்தார்த்தி வருஷம் தை மாதம் ஞாயிற்றுக் கிழமை மக நட்சத்திரத்தில் பிறந்தாரென்றும், அன்று கிருஷ்ண பட்சப் பிரதமை என்றும், திவ்ய ஸூரி சரிதம் கூறுகிறது.

இந்தக் குழந்தைக்குத் திருமழிசையில் வசித்து வந்த வேறு ஒரு குடும்பமும், பால் கொண்டு வந்து கொடுத்து, உதவியதென்றும், அந்தத் தம்பதிகளுக்கும் புத்திரப்பேறு கிடைத்ததென்றும், அந்த அம்மாள் தத்துக்கொள்ளாமல், தானே கணிகண்ணன் என்ற இந்த ஆழ்வாரின் தோழனைப் பெற்றெடுத்தாள் என்றும் தெரிந்துகொண் டிருக்கிறோம்.

முனி புத்திரராகிய திருமழிசையாருக்குக் குலவித்தையாகவே தெரிந்துவிட்டதாம், யோகாப்பியாசம், திருமழிசையிலேயே இளமையில் இவர் அந்த அப்பியாஸங்களில் பழகி வந்தார் என்பர் இவர் கல்வி கற்றதும் சமய ஆராய்ச்சிகளைத் தொடங்கியதும் திருமழிசையில்தான் நிகழ்ந்தன.

அந்த அந்தச் சமயந்தோறும் புகுந்து புகுந்து, ஆராய்ச்சிகள் செய்வதற்கும், இவர் வெகு தூரம் போக வேண்டியதில்லை.

அந்நாளில் மயிலைமா நகரத்திலேயே ஜைன பௌத்தக் கொள் கைகள் முதலான சமயக் கொள்கைகளை ஆராய்வதற்கு வசதி கிடைத்திருக்க வேண்டும். ஆராய்ச்சிகளை முன்னிட்டும், தமது சித்த மார்க்கப் பிராசாரத்தை முன்னிட்டும் இவர் தேச சஞ்சாரம் செய்திருக்கவும் கூடும்

பேயாழ்வாரால் திருத்திப் பணி கொள்ளப்பெற்ற பின், திருமழிசைப்பிரான் மறுபடியும் திருமழிசைக்குச் சென்று, அங்கே கஜேந்திரசரஸ் என்ற தடாகக் கரையில் பகவானைத் தியானித்துக்கொண்டு, வெகு காலம் யோகத்தில் எழுந்தருளி யிருந்தாராம். எழுநூறு ஆண்டுகள் இப்படி யோகத்தில் அமர்ந்திருந்ததாகக் குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இறைவனைத் தியானம் செய்துகொண்டே, கிழிந்த கந்தைகளைத் தைத்துக்கொண் டிருப்பாராம். அப்போது 'மறந்தும் புறந் தொழா மாந்தர்' என்று சொல்லத்தக்க வீரவைஷ்ணவர்களில் ஒருவராக இருந்தார் என்றும், தம் கண்முன் தோன்றிய ருத்திர மூர்த்தியையும் புறக்கணித்துவிட்டார் என்றும் குருபரம்பரைக் கதை வழங்குகின்றது:

இக் கதையிலிருந்து திருமழிசையார் காலத்தில் சைவ வைஷ்ணவ சமயிகளுக்கிடையே முதலாழ்வார்கள் காலத்துச் சமரஸ நிலை மறைந்து, சச்சரவுகள் மலிந்திருந்தன என்று ஊகிக்கலாம். இவர், கடைசியாகச் சைவசமயத்தைத் தழுவி யிருந்து வைஷ்ணவரானதால், புதிய சமயத்தில் புகுந்து, பிரசர்ரம் செய்வோரின் ஆவேச நிலையை இவரிடம் காண் கிறோம். இந்நிலை இவரைப்பற்றி வழங்கும் கதைகளில் மட்டு மல்ல, இவர் பாடல்களிலும் பிரதிபலிக்கிறது.

திருமழிசையில் ஆழ்வார், யோகத்தில் அமர்ந்திருந்தபோது ஒருசமயம் சுக்திஹாரன் என்ற ஒரு சித்தன் புலியைத் தனக்கு வாகனமாகக் கொண்டு. வானவீதியில் சென்றுகொண் டிருந்

தானும். ஆழ்வார் இருந்த இடத்திற்கு மேலே அந்தப் புலி செல்ல முயன்று, அப்படியே மயங்கி, நின்றுவிட்டதாம்.

சித்தன், திகைத்துப்போய்க் கீழே பார்த்தான். மௌன மாக யோகத்தில் அமர்ந்திருக்கும் இப்பெரியாரைக் கண்டு, அதிசயித்து, அப்படியே ஆகாசத்தினின்றும் நிலத்தில் இறங்கி, இவருக்குச் சமீபத்தில் வந்து நின்றான். அவர் அவனை லட்சியம் செய்யாமலே ஒரு கந்தைத் துணியைத் தைத்தவண்ணம் தமது தியான யோகத்தில் ஈடுபட்டிருந்தார்.

அவன் இவரை நோக்கி, 'முனிசிரேஷ்டரே! நீர் தைத்துக் கொண்டிருக்கிற அந்தக் கநதையை எறிந்துவிடும். ஐயோ! அந்த அரையிலும் கந்தைத் துணிதானே கட்டியிருக்கிறீர்? இதோ நான் கொடுக்கும் இந்தப் பொன்னுடையை அணிந்து கொள்ளும்' என்று சொல்லி, ஒரு பீதாம்பரத்தை நீட்டினான். இவர் அதை வாங்கிக்கொள்ள மறுத்துத் தாமே தம்முடைய சங்கற்ப சக்தியால் மாணிக்க மயமான ஒரு கவசத்தை உண் டாக்கிக் காட்டினார்.

அந்தக் கவசம் சூரியகாந்தியிலிருந்து செய்யப்பெற்றது போல் மின்னுவதைக் கண்ட சித்தன், பெரிதும் வெட்கம் அடைந்தான். மீண்டும் அவன், 'ஆழ்வாரே! இதோ என் கழுத்தில் கிடக்கும் மணிமாலையைப் பாரும். உமது கழுத்தில் கிடக்கும் தாமரை மணிமாலை, துளசி மாலைகளைக் காட்டிலும் இந்த மணிமாலை உமக்கு அழகு தரும் அல்லவா?' என்றான். 'இந்த மாலையை நீர் ஜப மாலையாக உபயோகித்துக்கொண்டால் அதிசயமான சித்திகளும் உமக்குக் கிடைக்குமே!' என்றும் சொன்னான்.

ஆழ்வாரோ தம் கழுத்திலிருந்த துளசி மாலையையும் தாமரை மணிமாலையையும் எடுத்து, அவனுக்குக் காட்டி, 'இவற்றை நன்றாகப் பார்' என்று சொன்னார். என்ன ஆச்சரி

யம்! 'நவரத்தின மாலைகள் அல்லவா இவை? என் கண்கள் ஏன் இவற்றைச் சரியாக அப்போது பார்க்கவில்லை!' என்று தனக்குத் தானே உரக்கச் சொல்லிவிட்டான்.

ஆழ்வார் புன்முறுவல் பூத்தவராய், 'இப்போதுதான் உன் கண்கள் சரியாகப் பார்க்கவில்லை' என்றார். உண்மையில் அவை துளசி மாலை, தாமரை மணி மாலைகளே என்பதைத் தெரிந்துகொண்டதும் சித்தன், நாணித் தலை குனிந்து, 'நீர் மகானுபாவர்!' என்று தண்டனிட்டு, அவர் வைபவத்தைக் கொண்டாடித் தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டானும்,

வேறொரு சமயம் கொங்கண சித்தன் என்ற ஓர் இரசவாதி இவரிடம் வந்து. 'இந்த ரச குளிகையை வாங்கிக்கொள்ளும்' என்று சொல்லி, மணிபோன்ற ஒரு மாத்திரையைக் காட்டினான். 'எதற்காக இதைக் கொடுக்கிறாய்?' என்று ஆழ்வார் கேட்க, அவன், 'இதைக் கொண்டு தொட்டதை யெல்லாம் பொன்னாக்கிச் செல்வத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். கோடீச்வரனாக வாழ்வதைவிட்டு, இப்படி ஏழைப் பாகவதராகக் கஷ்டப்படுவானேன்?' என்று பதில் சொன்னான்.

'அப்படியா? நம்மை ஏழை யென்று எண்ணிவிட்டாய்? அறிவில் ஏழையாகிய உன்னுடைய நிலையை நீ உணர்ந்து கொள்ளவில்லையே!' என்று சொல்லித் தம் திருமேனியில் படிந்திருந்த புழுதியைத் திரட்டி உருட்டி, 'உன் குளிகை கோடியைப் பேதிக்கும் என்றாய்; இந்தப் புழுதியோ கோடா கோடியைப் பேதிக்கும். பாராய்!' என்று திருமழிசையாழ்வார் சொன்னார். அந்த இரசவாதி அதை வாங்கிப் பரீட்சித்துப் பார்த்து, அதன் இரசவாத சக்தியைக் கண்டு பேராச்சரியம் அடைந்தான்.

'ஞானிகளுக்குப் பொருட் செல்வம் புழுதிக்குச் சமானந் தானே!' என்ற தத்துவத்தை உணர்ந்தவனாகக் கொங்கண

சித்தன், இவர் காலில் விழுந்து, அருள் பெற்று, விடை கொண்டான்.

பிறகு திருமழிசையாழ்வார், 'இனி இந்த இரசவாதிகளாலும் சித்தர்களாலும் ஜால வித்தைக்காரர்களாலும் நமது யோக நெறிக்கு இடையூறு ஏற்படக்கூடாது எனக் கருதி, ஒரு குகைக்குள் பிரவேசித்துப் பத்மாஸனத்தில் எழுந்தருளி, கண் மூடி, யோகத்தில் அமர்ந்துவிட்டார். அப்படி இவர் இருக்கும் போது பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் என்ற மூவரும் தேச சஞ்சாரம் செய்த வண்ணம், தங்கள் கொள்கைகளைப் பரப்பிக்கொண்டு அவ்வழியே வந்தனர்.

அவர்கள் ஓர் அழகான ஒளியைக் கண்டார்கள். அது மாறுதல் இல்லாமல் அதிசயமாகச் சுடர்வது கண்டு, அதை ஆராய விரும்பி, அங்கும் இங்கும் திரிந்து, சோதித்துப் பார்த்தார்கள். குகைப்பக்கமாகத் திரும்பியதும் நெஞ்சு என்னும் உட்கண்ணால், 'ஒரு மகானுபாவர் இங்கு வீற்றிருக்கிறார்' என்று கண்டுகொண்டனர். 'இவர் யாரோ!' என்று பிரமித்தார்கள். அப்போது பேயாழ்வாரின் சீடர், குருவைத் தெரிந்துகொண்டு வணங்கினார்.

'பக்திஸாரரே! பாங்காயிருக்கிறீரோ?' என்று க்ஷேமம் விசாரித்துவிட்டுப் பேயார், தம் அருமைச் சீடரைப் பொய்கையாருக்கும் பூதத்தாருக்கும் அறிமுகப்படுத்தினார். உடனே இவர், ஆனந்தக் கண்ணீர் ததும்ப. அவர்களுக்கு வணக்கஞ் செலுத்தி, 'இதுவரை நான் மேற்கொண்டிருந்த யோகத்திற்குப் பலனாக இத்திருமாலடியார்களில் முதன்மை பெற்ற மூவரையும் ஒருங்கே தரிசித்துப் பேறு பெற்றேன்' என்றார்.

பிறகு ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டு, இவர்கள், பாலும் தேனும் கலந்தாற்போல் கூடியிருந்து, நாம ஸங்கீர்த்தனம் செய்து, 'தேனூறி எப்பொழுதும் தித்திக்கும்

பகவதநுபவம்' என்ற மதுவை உண்டு போதையேறப் பெற்றார்கள்.

இப்படிக் கொஞ்ச காலம் நால்வரும் ஒருங்கே பகவுதநுபவம் செய்துகொண் டிருந்தபின், பேயாழ்வாரின் அவதார ஸ்தலமான திருமயிலைக்குச் சென்றார்கள். உகந்த உள்ளத்துடன் இங்கும் கொஞ்சகாலம் இந் நால்வரும் சேர்ந்து வாழ்ந்தார்கள். திருவல்லிக்கேணியையும் தரிசித்தபின், ஓடித் திரியும் யோகிகளான முதலாழ்வார்கள் மூவரும் திருமழிசையாரிடம் விடை பெற்றுக்கொண்டு, மறுபடியும் பரபரப்பாய் உலக சஞ்சாரம் செய்யலானார்கள்.

திருமயிலை, அந்நாளில் மாட மாளிகைகள், கூட கோபுரங்களுடனும், சோலைகள் நிறைந்த நகரமாகவும் இருந்தது. திருவல்லிக்கேணியோ ஒரே பசுஞ்சுடர்ச் சோலையாய் அமைதி நிலவும் ஆனந்த நிலயமாக இருந்தது. மயிலையில் பொருட் செல்வர்களும் பக்திச் செல்வர்களும் இருந்தனர். வாணிகத் துறையில் மேம்பாடுற்றிருந்த மயிலாபுரிக்குக் கப்பல்கள் வந்து போவது உண்டு. திருவல்லிக்கேணியோ ஸ்ரீ வைஷ்ணவம் என்னும் பக்திப் பெருஞ் செல்வத்தின் நிலைக்களனாக இருந்தது.

திருவல்லிக்கேணியைப் 'பிருந்தாரண்யம்' என்று தல புராணம் குறிப்பிடுகிறது. பிருந்தாரண்யம் என்றால் துளசி வனம். இங்கே ஸ்ரீரங்கநாதன் 'மந்நாதன்' என்ற திருப்பெயருடன் சயனத் திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இவரே இந்தத் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஐந்து மூர்த்திகளுள்ளும் பழமையானவர். இவரைத் திருமழிசைப் பிரான் தமது 'நான்முகன் திருவந்தாதி'யில் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

தாளால் உலகம் அளந்த அசைவேகொல்?
வாளா கிடந்தருளும்; வாய்திறவான்! நீளோதம்

வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக் கேணியான்
ஐந்தலைவாய் நாகத்(து) அணை.

[தாளால் – திருவடியால். அசைவேகொல் - ஆயாசமோ? வருத்தமோ? வாளா கிடந்தருளும் - சும்மா சயனித்திருக்கிருன். நீள் ஓதம் – பெரிய அலைகள். மாமயிலை மாவல்லிக்கேணியான்- சிறந்த மயிலையைச் சார்ந்த திருவல்லிக்கேணி இறைவன். ஐந்தலை வாய்நாகத்து அணை – ஐந்து தலைகள் வாய்ந்த ஆதிசேஷ ஞகிய சயனம்.]

'காடும் மேடும், கல்லும் கரடுமான நிலத்தை அடியிட்டு அளந்தாயே, அந்தத் தொழிலின் சிரமம் இன்னும் ஆற வில்லையோ?' என்று தம் பக்திக் காதல் தோன்றப் பேசுகிருர் பக்திஸாரர். 'கடற்கரையிலே கண் வளர்கின்ருய்; வாய் திறந்து, ஒன்று பேசவும் முடியவில்லையா? அவ்வளவு களைப்பா உனக்கு?' என்ற குறிப்பிலும கேள்வியிலும் கடல்போன்ற இவரது பக்திப் பெருக்கைக் காணலாம்.

இந்தத் தலத்தில் புண்ணிய தீர்த்தம் அல்லிப் பூக்கள் நிறையப் பெற்றிருந்ததால் அல்லிக்கேணி என்று பெயர் பெற்று, அதுவே தலத்திற்கும் உரிய பெயராக அமைந்திருக்கிறது. இந்தத் தலத்திலே முரண்பட்ட பல சமயக் கொள்கைகளிலும் சஞ்சரித்துக் களைத்துப் போன உள்ளம், குருவாகிய பேயாழ் வாரின் அருளால் விடாய் தீர்த்துக்கொண்டது எனலாம்.

களைத்து வந்தவர், 'நமக்காக முன்னமே இங்கு வந்து அருள் செய்யக் காத்துக் கிடக்கிருன் இறைவன்' என்று எண்ணமிட்டார். 'நம்மைக் கண்டதும் உவகையுடன் எழுந் திருப்பான்; ''வாரும் வாரும்'' என்று வரவேற்பான்' என் றெல்லாம் இவருக்கு நினைவு அலைகள் தொடர்ந்தெழுந்தன. தாம எதிர் பார்த்தபடி ஒன்றும் செய்யாததால், 'கரடு முரடான உலகமெல்லாம் நடந்து, மலரடிகள் நொந்து போயினவோ?

ஆகவே, வளா கிடந்து வாய் திறவாமல் இருக்கிருயோ?' என்று பொங்கும் பரிவுடன் தம் பக்தியை வெளியிடுகிருர்.

பல வேறு மதங்களிலும் திரிந்து திரிந்து, அலுத்துப் போன உள்ளம் இங்கே சிரம பரிகாரத்திற்காக வந்து, இறைவனே நோக்கி, 'நீயும் உலகமெங்கும் திரிந்து, அலுத்து, சிரம பரிகாரத் திற்காகத்தான் இந்தக் கடற்கரையில் வாய் திறவாமல் படுத் துக் கிடக்கிருயோ?' என்று பாசுரமிட்டு, தமது பக்தி அநு பவத்தை வெளியிட்டு, மகிழ்ந்து போவதைக் காண்கிருேம்.

# 5

# காஞ்சியில் திருமழிசையார்

## தமிழில் விளைந்த அற்புதம்

திருமகள் திருப்பாற்கடலில் தோன்றினுள் என்று புராணம் கூறுகிறதல்லவா? ஆனால் பரதகண்டமாகிய இந்தியாவே திருமாமகளுக்குப் பிறப்பிடம் என்று ஒரு காலத்தில் உலகம் நம்பியதுபோல் ஒழுகிவந்தது. அப்படிச் செல்வம் கொழித்து வாணிகமும் கைத்தொழிலும் விவசாயமும் பெருகியதற்கும், கலைச் செல்வமும் சமய ஞானமும் செழித்து வளர்ந்ததற்கும் காரணமாக இருந்த சில முக்கிய நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்ருகும்.

பேயாழ்வாரின் அவதார ஸ்தலமாகிய மயிலாப்பூருக்குத் தெற்கே, சுமார் அறுபது மைல் தூரத்தில் உள்ளது திருக்கச்சி மாநகரம் என்ற காஞ்சி. அங்கிருக்கும் சிறந்த சிற்ப வேலைப் பாடுகள் அமைந்த கோயில்கள், மக்களின் லட்சியங்களை வானளாவத் தூண்டி வளர்த்தன. இந்த நகரம், ஜைன பௌத்தர்களுக்கும், சைவ வைணவர்களுக்கும் ஒருங்கே ஒரு புனிதப் பெருநகரமாக இருந்தது. காஞ்சியில் பொய்கையாரும், இதன் துறைமுகப் பட்டினமாயிருந்த மாமல்லபுரத்தில் பூதத்தாரும் தோன்றித் திகழ்ந்தன ரல்லவா?

காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு, ஆட்சி செலுத்திய பல்லவப் பேரரசர்கள் பெருவாழ்வு வாழ்ந்த காலத்திலேதான் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றினார்கள். இவர்களால் சங்ககாலத் தமிழ் நாகரிகம். 'கோயில் நாகரிக'மாக மாறிப் பிறந்து, ஒரு புதிய முறையில் வளர்ந்தோங்கித் தமிழகத்திற்கும் இந்து சமயத்திற்கும் புத்துயிர் அளிக்கவேண்டும் என்பது விதியின் ஆணைபோலும்!

கண்ணபிரானுக்கும் திருமழிசைப் பிரானுக்கும் ஒரு பிறவியிலேயே இரு பிறவி வாய்த்ததாகச் சொல்லுகிறார்கள் அல்லவா? இந்த நிலையைத் தமிழ் நாகரிகமும் அடைந்து, பக்தியுகத்தைத் தோற்றுவித்து, இந்திய சரித்திரத்தை உருவாக்குவதில் ஒருபெரும் பங்கு கொண்டது என்பது பிரசித்தம். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற சமய உணர்ச்சி தழைக்கப் பெற்று, நம் மக்கள் அமைதியாக வாழ்க்கை நடத்திய காலத்தில், 'கோயில்களின் நகரம்' என்று சொல்லப்படும் காஞ்சிக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு.

சிவகாஞ்சி, விஷ்ணுகாஞ்சி, ஜைனக்காஞ்சி என்ற முப்பிரிவுகளாகத் திகழ்கின்றது காஞ்சி. சிவகாஞ்சியைப் பெரிய காஞ்சி என்றும், விஷ்ணு காஞ்சியைச் சின்னக் காஞ்சி என்றும் குறிப்பிடுகிறார்கள். பெரிய காஞ்சியில் மிகப் பெரிய ஏகாம்பரநாதர் கோயில் உண்டு. இப்பெரிய கோயிலுக்குள் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற நிலாத்திங்கள் துண்டப் பெருமாளும் காணப்படுகிறார்.

சின்னக்காஞ்சியில் வரதராஜப் பெருமாளின் அழகிய ஆலயம் காணப்படுகிறது. ஜைனக்காஞ்சி அல்லது சமணர் காஞ்சியைத் திருப்பருத்திக்குன்றம் என்றும் கூறுவது உண்டு. திகம்பர சமணர்களின் கலைப் பீடங்கள் நான்கில், சமண காஞ்சியும் ஒன்று என்பர். இது வேகவதி ஆற்றங்கரையில் இப்போதுள்ள காஞ்சிக்கு இரண்டு மைல் தொலைவில் இருக்

கிறது. இங்கே இரண்டு கோயில்கள் உள்ளன; இங்குள்ள ஓவியங்கள் பழமையானவை என்று சொல்லுகிருர்கள். எனினும் சமணக் காஞ்சியில் குறிப்பிடத்தக்க பெரிய ஆலயங்கள் இல்லை

காஞ்சிக் கோயில்களில், சிற்ப நுட்பங்கள் சிறந்து, 'ஒரு சிற்பக் காவியம்' என்று போற்றத்தக்க நிலையில் விளங்கியது கைலாசநாதர் கோயில். ஏழாம் நூற்ருண்டின் இறுதியில் ஆட்சி செலுத்திய ராஜசிம்மன் என்ற பல்லவ அரசன் இக்கோயிலைக் கட்டியவன். இப்போதுள்ள காஞ்சி நகரத்தின் எல்லையில் கழனிகளுக்கு நடுவில் காணப்படுகிறது இக்கோயில். இந்தப் பகுதியைப் பழைய காஞ்சியின் மையப்பிரதேசம் என்பர்.

கைலாச நாதர் கோயிலுக்கு அடுத்தபடியாக ஒரு சிற்பக் காவியமாகக் காண்பது, வைகுண்டப் பெருமாள் கோயில், திருமங்கை யாழ்வார், 'பரமேச்வரவிண்ணகரம்' என்று இத் திருப்பதியை மங்களா சாஸனம் செய்திருக்கிருர். முதலாழ் வார்களும் விண்ணகரத்தைப் பாடியிருப்பதால், இக்கோயில் கைலாசநாதர் கோயிலைவிடப் பழமையானது என்றும், பரமேச்வர வர்மன் என்ற பல்லவ மன்னன் தனக்கு முன்னமே இருந்த இக்கோயிலைச் செப்பனிட்டுத் திருத்தமாகக் கட்டினுன் என்றும் ஊகிப்பவர் உண்டு.

காஞ்சிக் கோயில்களில் பாடகம் என்ற பெருமாள் சந்நிதியைத் திருமழிசைப் பிரானும் பூதத்தாரும் திருமங்கை மன்னனும் பாடியிருக்கிருர்கள். ஊரகம் என்ற உலகளந்த பெருமாள் சந்நிதியில் திருக்குறளின் மிகச் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகர் அர்ச்சகராக இருந்தார் என்று சொல்லுகிருர்கள். இந்த ஊரகத்தையும் திருமழிசையாழ்வாரும் திருமங்கையாழ் வாரும் பாடியிருக்கிருர்கள்.

காஞ்சிமாநகரில் பொய்கையாழ்வார் அவதரித்த ஸ்தலமே திருவெஃகா. இக்கோயிலைப் பொய்கையாரும் பேயாரும்

திருமழிசையாரும் திருமங்கை மன்னனும். 'நம்மாழ்வாரும் பாடியிருக்கின்றனர்'. இந்தப் பெருமாளை, சொன்னவண்ணஞ் செய்த பெருமாள் என்பர்.

இவர் பிரமதேவனுக்கும் கணிகண்ணனுக்கும் பிரத்தியட்ச மானவர் என்று ஸ்தலபுராணம் சொல்லுகிறது. கணிகண்ணன் திருமழிசைப் பிரானின் தோழன்தான். 'சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள்' என்ற பெயர் திருமழிசையாழ் வாரால் கிடைத்த பெயர்தான். இந்தத் ஸ்தலத்திற்குத் தெற்கிலுள்ள அட்டபுயகரம் என்ற கோயிலைப் பேயாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பாடியிருக்கிறார்கள்.

திருமழிசை யாழ்வாருக்கும், முதலாழ்வார்களுக்கும் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே திருவெஃகா, சரித்திரப் புகழும் இலக்கியப் புகழும் பெற்றிருந்தது. இதைவளம் மிகுந்த ஊர் களில் ஒன்ருகப் பெரும்பாணாற்றுப்படை என்ற சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இந்த ஊரில் வானளாவிய மாடங்கள் காணப்பட்டன வென்றும், அம்மாடங்களைச் சுற்றிக் குளிர்ந்த நிழல் தரும் மரங்கள் அடர்ந்திருந்தன என்றும் பத்துப்பாட்டில் ஒன்ருகிய பெரும்பாணாற்றுப்படையிலிருந்து அறிந்துகொள் கிருேம்.

'அவ்வூர்களைக் கடந்தபின் காந்தள் (கார்த்திகைப்பூ) வளர் கிற மலையிடத்தில், யானை கிடந்தாற்போல் பாம்பணையில் திரு மால் பள்ளிகொண் டிருக்கும் திருவெஃகாவை அடைவீர்கள்' என்று பெரும்பாணாற்றுப்படையில், ஒரு வள்ளலிடம் பரிசு பெற்று, செல்வனாக மீண்டு வரும் பாணன் ஒருவன், ஏழைப் பாணன் ஒருவனையும் அவன் சுற்றத்தாரையும் நோக்கிக் கூறுகிருன்.

பரிசில் பெற்ற பாணன், தன்னை ஆதரித்த வள்ளலான தொண்டைமான் இளந்திரையனிடம் எளிய பெரும்பாணனை

ஆற்றுப்படுத்தும்போது (வழிச்செலுத்தும்போது) காஞ்சிமா நகரத்திற்குப் போகும் வழியில், திருவெஃகா என்னும் தலம் இருப்பதாகக் கூறுவதால், சங்ககாலத்தில் திருவெஃகா, காஞ்சிமாநகரின் பகுதியாக இராமல் ஒரு தனித் தலமாக இருந்தது என்று ஊகிக்கலாம். திருவெஃகா என்னும் தலத்தைத் தாண்டி அப்பால் சென்றால், உலக நகரங்களுள் சிறந்த காஞ்சி மூதூரை அடையலாம் என்பது அந்தப் பாணனின் வாக்கு.

அந்நாளில் பொய்கையாழ்வாரின் இந்த அவதார ஸ்தலம் எத்தகைய வளமும் வனப்பும் உள்ளதாயிருந்தது என்பதையும், அந்நாளிலேயே இங்குள்ள பெருமாள் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது என்பதையும் பெரும்பாணாற்றுப்படை வருணனையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

'திருவெஃகாவில் நெருக்கமாக வளர்ந்த—வெயில் நுழையாத—இளமரச் சோலைகள் உண்டு. அந்தச் சோலைகளிலே காஞ்சி (ஆற்றுப் பூவரசு) மரங்களில் குருக்கத்திக் கொடிகள் படர்ந்து, பூத்திருந்தன. அப்பூக்கள் அம்மரத்தடியிலுள்ள நீர் நிறைந்த குழிகளில் விழுந்து, அப்ப வாணிகர் சுட்ட அப்பம், பாவிலே கிடந்தாற்போலக் காணப்பட்டன. அந்தப் பொழில் களிலுள்ள குளங்களில் அழகிய மகளிர் நீந்தி விளையாடுவர். நீராடும் துறைகளில் தங்கி, இளைப்பாறுவதற்கும் வசதி உண்டு.'

இப்படித் திருவெஃகாவின் வளமார்ந்த சிறப்பினை வருணித்துவிட்டு, பெரும்பாணனும் சுற்றத்தாரும் அந்தச் சோலைக் குளங்களில் நீராடி இளைப்பாறியபின், திருவெஃகாவிலுள்ள பெருமாள் கோயிலுக்குப் போய், இனிய யாழை வாசித்து, அக்கடவுளை வாழ்த்தி, அவ்விடத்தினின்றும் காஞ்சிமாநகரிலுள்ள வள்ளலிடம் செல்ல வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறான், பரிசில் பெற்று ஊர் நோக்கி வந்துகொண்டிருந்த பாணன்.

இதிலிருந்து பொய்கையாரும் பேயாரும் திருமழிசையாரும் உகந்து பாடிய பெருமாள், பெரும்பாணாற்றுப்படையிலும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற சங்கப் புலவரால் பாடப்பெற்றிருக்கிறார் என்பது தெரியவருகிறது.

முதலாழ்வார்கள் மூவரையும் சந்தித்த பின்பு திருமழிசையார், பொய்கையாழ்வாரின் அவதாரத் தலமான திருவெஃகாவிற்குச் சென்று, பள்ளிகொண்ட பெருமானைத் தரிசித்து, அங்கே தங்கிப் பணிபுரிய விரும்பினார். இந்த விருப்பத்திற்கு இணங்க, சத்தியவிரத க்ஷேத்திரம் என்று சொல்லப்படும் திருவெஃகாவிற்குச் சென்று, அங்கே அறிதுயில் அமர்ந்த வேந்தை வழிபட்டு, பொய்கையார் அவதரித்தருளின அந்தப் பொய்கையையும் தரிசித்தார். அந்தப் பொய்கைக் கரையிலே பொய்கையாரைத் தியானித்த வண்ணம் திருமழிசையார் யோகத்தில் அமர்ந்திருந்தபோது, கணிகண்ணன் வந்து, அவரை அடி பணிந்து, கடைக்கணிக்கப்பெற்றுப் பணிவிடை செய்துகொண் டிருந்தான்.

திருமழிசையார் எழுந்தருளியிருந்த அந்த ஆசிரமத்தைப் பெருக்கி, மெழுகி, சுத்தம் செய்யும் பொறுப்பையும், கோலமிட்டு அலங்காரம் செய்யும் கடமையையும் ஆழ்வாரிடம் பக்தி கொண்டிருந்த ஒரு தாசிக் கிழவி ஏற்றுக்கொண்டாள். இந்தப் பணியைத் தனக்குப் பேறுகக் கிடைத்த ஒரு ·பெரும்பணி எனக் கருதி ஒருமையுள்ளத்துடன் இந்தத் தாசி செய்துகொண் டிருந்தாள்.

உறைவிடத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்வதில் கண்ணுங் கருத்துமாக இருந்த இக் கிழவியை நோக்கி ஆழ்வார் ஒரு நாள், 'நீ உவந்து செய்யும் பணி உன் குண அழகை வெளியிடுகிறது' என்றார். அவள், இவர் அடிகளில் விழுந்து, 'எல்லாம் பெரியோராகிய உங்கள் அருளழகு தான்!' என்று ஆனந்தக் கண்ணீர் ததும்பக் கூறினாள்.

அந்த அகத்தின் அழகு முகத்திலே பொங்கக் கண்ட, ஆழ்வார் திருவுள்ளம் உவந்து, 'உனக்கு இந்தக் கிழப்பருவம் போய், உள்ளபடியே யௌவன அழகு வருவதாக!' என்று குளிரக் கடாட்சித்தார். உடனே அந்தக் கிழவி யௌவன சுந்தரி ஆகிவிட்டாளாம். அவளைக் கண்ணுற்ற பல்லவ அரசன் காதல்கொண்டு, மணம் செய்துகொண்டானும்.

நாளடைவில் தனக்கு வயது முதிர்ந்து, கிழப்பருவம் தோன்றுவதையும், அவளுக்கோ அந்த யௌவனம் மாருமல் இருப்பதையும் அரசன் கவனித்து, அதிசயமுற்ருன். பிறகு அவளை நோக்கி, 'உனக்கு இந்த இளமை அழகு எவ்வாறு விளைந்ததோ?' என்று கேட்டான். 'எனக்கு இது ஆழ்வார் அருளால் உண்டாயிற்று' என்ருள் அவள். தான் அவரை அடிபணிந்து, பணிபுரிந்து, வரம்பெற்ற வரலாற்றை அவள் தன் கணவனுக்கு விரித்துரைத்தாள்.

அதுகேட்ட அரசனுக்குத் தானும் யௌவனம் அடைய வேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. கணிகண்ணன் மூல மாகத் திருமழிசையாரின் அருளுக்குத் தான் இலக்காகக் கூடும் என்று நம்பினுன். கணிகண்ணன் ஒவ்வொரு நாளும் உபா தானம் செய்து, உண்டு, குருவுக்குப் பணிபுரிந்து வந்தான் என்பதை அரசன் அறிந்துகொண்டான்.

ஒரு நாள் தன் அரண்மனை வாசலிலே உபாதானத்திற்கு வந்து சேர்ந்த கணிகண்ணனைக் கண்டதும், 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டது'போன்ற உவகையுடன் அவனை நோக்கி, 'ஐயா, கணிகண்ணரே! உமது ஆசாரியரை நம்மிடம் அழைத்து வரவேண்டும்' என்ருன்.

அதற்குக் கணிகண்ணன், 'நம் ஆசாரியார் ஒருவர் அகத் திற்கும் எழுந்தருளார்!' என்ருர்.

'நாம் மஹாராஜா அல்லவா?'

'எந்த ராஜாவையும் மதித்துப் பாராரே என் குருமகா ராஜா!'

அரசன் திகைத்துப்போனுன்! 'உமக்கும் கவிபாடத் தெரியும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீராவது என்மீது கவி பாட வேண்டும்; எனக்கு யௌவனம் கிடைக்குமாறு உம் முடைய இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துப் பாட வேண்டும். உம்முடைய அரசன் அல்லவா நான்? காஞ்சி அரசுரிமைச் செல்வம் படைத்திருக்கும் என்னைப் பாடுவதால் உமக்கு நஷ்டம் ஒன்றும் இல்லையே!' என்று அரசன் பேசிக்கொண்டே போனுன்.

கணிகண்ணன் குறுக்கிட்டு, 'என்னைப்போன்ற தொண் டர்கள், எவருக்கும் குடியல்லர். வைகுந்தச் செல்வனுரின் சேவடியைப் பாடிய வாய்கொண்டு, மானிடம் பாட அறியேன்!' என்ருர்.

'உம்முடைய அரசனின் கட்டளையை மீறத் துணிந்தீரே! உமக்கு அச்சமும் தெரியாதா?'

'தொண்டர்கள் நமனுக்கே அஞ்சுவதில்லை; நரனுக்கு அஞ்சுவ துண்டோ!'

'ராஜா, தெய்வ அம்சம் பெற்றவன்; ஆகவே ராஜஸ்துதி, கேவலம் நரஸ்துதி ஆகிவிடுமா? நீர் நம்மைப் பாடத்தான் வேண்டும்.'

அரசன் எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்தும் கணி கண்ணன் கடவுளைப் பாடினுர்; காஞ்சியின் தெய்வ மாண் பைப் பாடினுர். பல்லவனே, 'நம்மைப் பாடென்ருல் நம்மு டைய ஊரையும், தெய்வத்தையும் பாடுகிறீரே!' என்று கோபித் தான்.

## பைந்தமிழ்ப் பின் சென்ற பசும் கொண்டல்

அந்தக் கோபத்தைக் கணிகண்ணன் லட்சியம் செய்யாமலே போய்விட முயன்றதும், 'நீர் இப்பொழுதே நம்முடைய ராஜ்யத்திலிருந்தே போய்விட வேண்டியதுதான், இது நம் கட்டளை' என்று அதிக கோபத்துடன் பல்லவன் சொல்லி விட்டான்.

கணிகண்ணன் உடனே திரும்பி, ஆழ்வாரிடம் வந்து, வணங்கி, நடந்ததை விண்ணப்பித்து, 'அடியேன் இவ்விடத்தினின்றும் விடை கொள்கிறேன்; தேவரீர் விடை தந்தருள வேணும்' என்று பிரார்த்தித்தான். ஆழ்வார் இளநகை அரும்பி, 'கணிகண்ணா! நீ போவாயானல் நாமும் இங்கிருக்கப் போவதில்லை' என்ருர்.

பிறகு ஆழ்வார் திருவெஃகா எம்பெருமானுக்கு முன் போய் நின்று,

> கணிகண்ணன் போகின்ருன்; காமரு பூங்கச்சி
> மணிவண்ணா! நீகிடக்க வேண்டா!—துணிவுடைய
> செந்நாப் புலவனும் செல்கின்றேன்; நீயும்உன்தன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்!

[காமரு பூங் கச்சி – அழகு மிகுந்த காஞ்சீபுரம். செந்நாப் புலவன் - செம்மையே பேசும் நாவினையுடைய புலவன். பைந் நாகப் பாய் – படத்தையுடைய ஆதிசேஷன் என்ற பாய்.]

என்று பாடிவிட்டுக் கணிகண்ணனைத் தொடர்ந்து சென்ருர்.

எம்பெருமானும் ஆழ்வார் சொன்ன வண்ணமே பாயைச் சுருட்டிக்கொண்டு, ஆழ்வாரைப் பின்தொடர்ந்தானும். காஞ்சி நகர்க் கோயில்களில் உள்ள தேவதைகள் எல்லாம் தேவாதி தேவனைப் பின்தொடர்ந்து சென்றனவாம். 'சுடர் கொள்

சோதி' என்று அறிஞர் போற்றும் அந்த ஜோதி போய்விட்டதால், நகரம் இருளடைந்த நரகம்போல் ஆகிவிட்டதாம்.

சக்கரவர்த்தித் திருமகனைப் பிரிந்த அயோத்திமாநகரம் பட்ட பாடு பட்டது கணிகண்ணனையும் ஆழ்வாரையும் பிரிந்த கச்சிமா நகரம். பூக்கள் உதிர்ந்தன; உலர்ந்தன. பச்சை மரங்கள் பட்டுப்போயின. நீர்நிலைகள் வற்றிப்போயின. மக்களும் வாடிப்போயினர். காஞ்சி மாதர்கள் வடிவழகு குன்றிப்போயினர். இப்படிக் குருபரம்பரைக் கதைகள், ஆழ்வாரைப் பிரிந்து, ஜீவகளை இழந்த காஞ்சியை வருணிக்கின்றன.

'திருக்கச்சிமாநகரம் திருவை இழந்ததே!' என்று அரசன் திகிலடைந்தான். அமைச்சர்கள் நடுங்கி, அரசனை நோக்கி, 'கணிகண்ணன் காலில் விழுந்து, நாம் இந்தச் சாபத்திலிருந்து விமோசனம் பெறவேண்டும்' என்று மன்றாடினார்கள்.

உடனே இவர்கள் அனைவரும் விரைந்து சென்று, 'ஓர் இரவிருக்கை' என்ற கிராமத்திலே கணிகண்ணன் முதலானவர்களைக் கண்டு, தண்டனிட்டு, 'மன்னிக்கவேணும். மன்னிக்கவேணும்; திரும்பிவந்தருளவேணும்' என்று வேண்டிக்கொண்டார்கள். பிறகு கணிகண்ணனும் ஆழ்வாரும் காஞ்சிக்குத் திரும்ப வேண்டும் என்று தீர்மானித்தனர்.

அப்போது ஆழ்வார் பெருமாளை நோக்கி,

கணிகண்ணன் போக்கொழிந்தான்; காமருபூங் கச்சி
மணிவண்ணா! நீகிடக்க வேண்டும்!—துணிவுடைய
செந்நாப் புலவனும் செலவொழிந்தேன்; நீயும் உன்தன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்!

என்று விண்ணப்பித்துக்கொள்ளவே, பெருமாளும் ஆழ்வாரைப் பின்தொடர்ந்து, காஞ்சிக்குத் திரும்பினராம்.

'முன்னே சீடன், பின்னே குரு, கடைசியாகப் பெருமாள்!' என்ற முறையில் போனார்களே, அதே முறையில் அவர்கள் திரும்பிவிட்டார்கள். இவர்களைத் தொடர்ந்து, காஞ்சியைத் துறந்து போயிருந்த பக்தர்களும் சாதுக்களும்' ஊர்த் தெய்வங்களும் திரும்பி வந்துவிட்டார்களாம். காஞ்சி, வளமும் வனப்பும் சிறப்பும் உற்று, 'நிறைந்தசீர் நீள்கச்சி' என்ற பேரும் புகழும் பெற்றுப் பொலிந்தது.

தாம் சொன்ன வண்ணம் செய்த பெருமாளுக்குத் திருமழிசையாழ்வார், 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்ற புதிய திருப்பெயரைச் சூட்டினார். தொண்டர் பெருமையை வெளியிட்ட பெருமானின் எளிமையில் விசேஷ ஈடுபாடு கொண்ட ஆழ்வார், இந்தக் கல்யாண குணத்தையே தியானத்திற்கு இலக்காக்கிக்கொண்டு, கொஞ்ச காலம் யோகத்தில் அங்கேயே மறுபடியும் அமர்ந்துவிட்டாராம்.

அன்பர்களின் தமிழால் வசீகரிக்கப்பெற்று, ஆண்டவனே அவர்களைத் தொடர்ந்து சென்றான் என்ற இக்கதை எவ்வளவு வசீகரமானது! இது, வைணவர் உள்ளங்களை மட்டும் ஆட்கொண்டது என்பதில்லை; தமிழ்ப் பெருமக்களின் இதயத்தையே வசீகரித்துவிட்டது என்று கருதலாம்.

தமிழ் வடமொழிகளோடு இந்துஸ்தானி மொழியும் கற்று, வட இந்தியாவிலே சைவ சித்தாந்தப் பிரசாரஞ் செய்து, முகம்மதிய அரசரையும் வசமாக்கிக்கொண்ட குமரகுருபர சுவாமிகள் என்ற சிவநேசச் செல்வரே திருமழிசையாரின் இந்தக் கதையில் ஈடுபட்டு,

பழமறைகள் முறையிடப்
பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே!

[கொண்டல் – மேகம்போன்ற திருமால்.]

என்று திருமாலைப் போற்றியுள்ளார்.

இந்த அழகான கதையின் அழகான உண்மைகளில் ஒன்று, தாய்மொழியாகிய தமிழால் திருமழிசையார் அற்புதம் விளைத்தார் என்பதாகும். தமிழின் விளைவுதான் தம்முடைய பக்தி அநுபவமெல்லாம் என்பதைத் திருமழிசையாரே ஒப்புக் கொண்டிருக்கிறார். இவருடைய வைணவப் பிரசாரமும் தாய்மொழியை விதைத்து, விளைத்துக்கொண்ட அற்புதந் தானே.

நற்றமிழை வித்தி,என் உள்ளத்தை நீவிளைத்தாய்,
கற்றமொழி யாகிக் கலந்து.

[வித்தி – விதைத்து.]

என்று திருமழிசையாழ்வார் பாடியிருப்பதிலிருந்து, 'சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள்' கதை தோன்றிருக்கவும் கூடும்.

# 6

# குடந்தை செல்லும் வழியிலே

திருமழிசையாரும் கணிகண்ணனும் கச்சிப் பெருநகருக்குத் திரும்பி வந்ததும், அந்த அரசன் ஆழ்வாருக்குத் தொண்டு பூண்டு ஒழுகி வந்தான். கச்சி நகர்மீதும், பூதத்தாழ்வார் தோன்றிய மாமல்லபுரத்தின்மீதும் திருமழிசையாழ்வாருக்கு அபிமானமும், சொன்னவண்ணஞ் செய்த பெருமாள்மீது பக்திக் காதலும் இருந்தபோதிலும், நாளடைவில் திருக் குடந்தைக்குப் போய் ஆராவமுதப் பெருமாளைத் தரிசித்து, அங்கேயே நித்தியவாசஞ் செய்ய விரும்பினர்.

**ஆழ்வாரும் சாதிச் செருக்கும் :**

இந்த விருப்பம் அதிகரித்ததும் ஒரு நாள் கணிகண்ணனையும் அழைத்துக்கொண்டு காஞ்சியை விட்டுப் புறப்பட்டார். வழியில் பெரும்புலியூர் என்ற ஒரு கிராமத்தை அடைந்து, அங்கே இருக்கும் ஒரு தெருத் திண்ணையில் இருவரும் இளைப் பாற உட்கார்ந்தார்கள்.

அந்த இடத்திற்கு அருகே வேதம் ஓதிக்கொண் டிருந்த பிராமணர்கள், 'தாழ்ந்த வகுப்பினரான இவர்கள் செவியில்

வேத சப்தம் விழக்கூடாதென்று அத்யயனத்தை நிறுத்திவிட்டார்கள். மேலும், அவர்கள் இவ்விருவரையும் நோக்கி, 'நீங்கள் எட்டிப் போய்விடுங்கள்' என்று கட்டளையிடவும் துணிந்தனர். உடனே இவர்கள் வேறொரு பக்கத்திலே போய் நின்றார்கள்.

பிறகு பிராமணர்கள் மீண்டும் வேதம் ஓத முயன்று பார்த்தும், விட்ட இடம் தெரியாமல் தடுமாறினார்கள். நினைப்பூட்டிக்கொள்ள மேலும் மேலும் முயன்றும், பயன் ஒன்றும் கிடைக்கவில்லை.

அந்தப் பரிதாப நிலை கண்டு, ஆழ்வார், தரையில் கிடந்ததொரு கறுப்பு நெல்லை எடுத்து, நகத்தால் கீறி, அவர்கள் முன் காட்டவே, அந்தக் குறிப்பினால் அவர்களுக்கு விட்ட இடம் நினைவுக்கு வந்துவிட்டதாம். உடனே அவர்கள், 'தொண்டர்களை அவமதித்தோமே; தொண்டக் குலமன்றோ தொழு குலம்!' என்பதாகத் தெளிவடைந்து, ஆழ்வாரை வணங்கினார்கள்.

ஆழ்வார் அருளால் அவர்கள், வேதத்தின் உட்பொருளையும் உள்ளபடியே ஞாபகப்படுத்திக்கொண்டு, 'சாதிச் செருக்கும் கல்விச் செருக்கும் மெய்யறிவை மறைத்துவிடும்' என்பதை நன்கு உணர்ந்தனர்.

எக்குலத்தா ராயினும், மால்
ஏரார் மலரடியைத்
தக்க படிஅடையின்,
அந்தணரும் தாம்அவரே!

என்ற ஞானம் பெற்று, எல்லாருக்கும் பொதுவாகப் பாகவர்தகளின் பெருமையையும், சிறப்பாகத் திருமழிசையாரின் அருமை பெருமைகளையும் எடுத்துரைப்பாராயினர்.

**திருமழிசையாரும் குருநானக்கும் :**

அந்த ஊரில், ஆழ்வார் எங்கெங்கே சென்ருலும் அந்த ஊர்ப் பெருமாளும் சந்நிதிக்குள் இருந்தபடியே அந்த அந்தத் திசைகளை நோக்கித் திரும்பிய வண்ணமாக இருந்தாராம். அர்ச்சகர் இந்த அற்புதத்தைக் கண்டு, பேராச்சரியத்துடன் மற்றவர்களுக்கும் காட்டினார். சிக்கிய சமயத்தின் ஆதி குருவான நானக் என்பவரைக் குறித்தும் இப்படி ஒரு கதை வழங்கி வருகிறது.

குருநானக் முகம்மதியர்களின் புண்ணிய ஸ்தலமாகிய மெக்காவிற்கு ஒரு சமயம் போயிருந்தார். ஒரு நாள் அந்த நகரத்திற்கு வெளியே இவர் படுத்திருக்கும்போது, அராபிய குரு ஒருவர் ஓடி வந்து, 'என்ன அநியாயம்! ஆண்டவன் இருக்கும் திசையை நோக்கிக் காலை நீட்டிக்கொண் டிருக்கிருயே!' என்று அவரை நிந்தித்தார். அது கேட்டு நானக், 'ஐயா, தயவு செய்து ஆண்டவன் இல்லாத பக்கமாக என் கால்களைத் திருப்பி வைத்துவிடும்; உம்மை வேண்டிக்கொள்கிறேன்' என்று அமைதியாகப் பதில் சொன்னார்.

அராபிய குரு, பெருஞ் சினத்துடன் சிக்கிய குருவின் கால்களைப் பிடித்து, நாலு திசைகளிலும் சுற்றிச் சுற்றி இழுக்கத் தொடங்கினார். இந்த உடம்பு திரும்பிய பக்கங்களிலெல்லாம் திரும்பிக்கொண் டிருந்ததாம் ஆண்டவன் சந்நிதியும்! ஆண்டவன் இல்லாத இடம் இல்லை என்பது இக்கதையின் உட்பொருள்.

பெரும்புலியூரில் திருமழிசையார் எந்த எந்த இடத்திற்குப் போனாலும் அந்த அந்தத் திசையை நோக்கிப் பெருமாள், சந்நிதிக்குள் இருந்தபடியே திரும்பிக்கொண் டிருந்தார் என்ற கதைக்கும், மேலே சொன்ன விதமாக ஓர் உட்பொருள் காணலாம். இறைவன் இல்லாத இடம் இல்லை என்ற உண்மை

யோடு, தொண்டன் செல்லும் வழியே தொடர்ந்து செல்லு கிறது இறைவனது அருள் நோக்கும் என்ற உண்மையும் இக் கதையால் போதிக்கப்படுகிறது எனலாம்.

மேலே சொன்ன சிக்கிய குருவின் கதைக்கு வேறொரு பொருளும் கூறுவது உண்டு. அந்த நகரம் அந்நாளில் சிக்கியப் பெரியாரின் உபதேசம் கேட்டு, இன்புற்றது என்று ஊகிப்பவ ரும் உண்டு. இப்பொருளும் திருமழிசையாழ்வாரின் இக்கதைக் குப் பொருந்துவதாகும்.

ஆழ்வாரின் கொள்கை, நாலு திசைகளிலும் பரவிக் கொண்டிருந்தது என்பதோடு, நல்லறிஞர்கள் இதன் பொருளை யும் பயனையும் உணரத் தொடங்கிவிட்டனர் என்பதாகப் பொருள் கொள்வதும் பொருத்தந்தானே. திருமழிசை யார் குருநானக் வாழ்ந்த கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்கு எழுநூறு ஆண்டுகளாவது முற்பட்டவராக இருக்கவேண்டும்.

**செருக்கு ஒழிந்து, உண்மை காட்டினார்:**

திருமழிசையாழ்வாரின் அருமை பெருமைகள் அந்தப் பிரதேசமெங்கும் பரவிவிட்டன. பெரும் புலியூர்அடிகள் என்ற தீட்சிதர் ஒருவர் அப்போது அவ்வூரில் ஒரு வேள்வி செய்துகொண்டிருந்தார். அவரும் இந்த ஆழ்வாரின் வைப வத்தைக் கேள்விப்பட்டு, அவரைக் கண்டு, பொன்னடி பணிந்து, 'நம்முடைய யாக சாலைக்கு எழுந்தருள வேணும்' என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்.

திருமழிசையாரின் திருமுகப் பொலிவே தீட்சிதரைப் பிர மிக்கச் செய்தது; 'இவரே மெய்யடியார்; இப்படி ஒரு பரம பாக வதரைக் காணக் கூடுமானால் இதுவே கண்படைத்த பயன்; இந்த வேள்வியின் பயனும் இதுதான்!' என்று அவரை எண்ண மிடச் செய்தது. தீட்சிதர் ஆழ்வாரை அழைத்துக்கொண்டு,யாக சாலைக்குள்ளே போய் ஆழ்வாருக்கு அக்ரபூஜை (தலைமை வழி பாடு) செய்தார்.

அதுகண்டு அங்குள்ள அத்வர்யு (வேள்விக்குத் தலைமை தாங்குபவர்) முதலான சடங்கிகள் கோபம் கொண்டார்கள். தீட்சிதரை நோக்கி, 'பிரப்பங்கூடை முடைந்து, விற்றுப் பிழைக்கும் இத் தாழ் குலத்தவனை இப்படி இங்கே பூஜித்து, யாகத்தைக் கெடுத்துவிட்டீரே!' என்றெல்லாம் பொறுக்க முடியாத வார்த்தைகளைச் சொல்லிப் பழித்தார்கள்.

ஆழ்வார், நீறு பூத்த நெருப்புப்போல் இருந்தார். தீட்சிதரோ நெஞ்சு கொதித்து, 'அந்த நாளில் தருமபுத்திரனுடைய ராஜசூய யாகத்திலே கண்ணனுக்கு அக்ர பூஜை நடந்ததையும், அக்கிரம பூஜை என்று அதைச் சிசுபாலன் பழித்ததையும் நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?' என்று அவர்களை நோக்கி, எச்சரிக்கை செய்தார். அந்த எச்சரிக்கையும் பயன்படவில்லை.

தீட்சிதர் ஆழ்வாரை நோக்கி, 'ஸ்வாமி! இவர்களும் உய்ந்து போகும்படி உண்மையை வெளியிட லாகாதா?' என்று கதறினர். உடனே நீறு விலகி நெருப்பு ஜொலிப்பதுபோல் ஆழ்வாருடைய மேனி அற்புதமாக ஜொலிக்கத் தொடங்கியது.

ஆழ்வார், தம் இதய கமலத்தில் அந்தர்யாமியாக இருக்கும் அற்புதனை நோக்கி,

அக்கரங்கள் அக்கரங்கள்
என்றுமாவ தென்கொலோ ?
இக்குறும்பை நீக்கிஎன்னை
ஈசனுக்க வல்லையேல்,
சக்கரங்கொள் கையனே!
சடங்கர்வாய் அடங்கிட
உட்கிடந்த வண்ணமே
புறம்பொசிந்து காட்டிடே!

என்று பிரார்த்தித்தார்.

ஆழ்வாருடைய தோற்றத்தில் திடீரென்று ஏற்பட்ட மாறுதல், அந்த வேள்விச் சாலையில் இருந்த வைதிகர்களை யெல்லாம் பிரமிக்கச் செய்தது. அவர் திருமார்பிலே அனற் பிழம்பு வீசிச் சக்கரம் சுழன்றது. பகவானுடைய சுதர்சனம் என்ற சக்கராயுதத்தின் அம்சமாகத் திருமழிசைப்பிரான் அவதரித்திருக்கிறார் என்பதை அக்காட்சி உறுதிப்படுத்தியதாம்.

விரைவில் கடல் முழங்குவதுபோல் ஒரு முழக்கம் கேட்கிறது. 'அந்த மஹா சர்பபத்திற்குத்தான் எத்தனை தலைகள்!' என்று பார்த்தவர்கள் பயப்படுகிறார்கள்.

இந்திர நீல வர்ணமுள்ள மேகம் ஒன்று, மலை உச்சியில் சாய்ந்து கிடப்பதுபோலக் காண்கிறது. அது, வர வரப் பெரிதாகிப் பெரு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுமாறு மழை பெய்யப்போவதுபோலத் தோற்றம் அளிக்கிறது. அந்த மின் வெட்டின் அழகைத்தான் என்னென்பது!

பகவான், பாற்கடலோடும் அனந்த சயனத்தோடும், சங்கு சக்கரங்களோடும் திருமகளும் தானுமாகக் காட்சி அளிக்கிறானும், ஆழ்வார் திருமேனியிலேயே.

'ஆழ்வார் திருவடிகளே சரணம்!' என்று அந்தச் சடங்கர்கள் செருக்கடங்கித் தாழ்ந்து வணங்கினார்கள். இவரைப் பரிவுடனும் பக்தியுடனும் பிரம ரதத்தில் ஏற்றி, 'திருமழிசைப் பிரான் வந்தார்! திருமாலின் மெய்யடியார் வந்தார்!' என்று போற்றி, அந்த ஊரை மும்முறை வலஞ் செய்வித்தார்கள். தீட்சிதரின் உள்ளம் குளிர்ந்தது.

பிறகு ஆழ்வார், லட்சுமீ நாராயண மூர்த்தியைச் சரணமடைந்து வாழும் முறை குறித்த மர்மங்களை இனிது விளக்கி, அவர்களை வாழ்வித்தருளினார். அவர்களும் தெளிந்து, வேள்விப்பயன் சித்தித்துவிட்டதென்று பெருமகிழ்வெய்தினார்கள்.

அதன் பிறகு திருமழிசையார் குடந்தைக்குச் சென்று, ஆராவமுதப் பெருமானை வழிபட்டு, அங்கேயே நித்தியவாசம் செய்ய விரும்பினர்.

*　　　*　　　*

மேலே சொன்ன கதைகளெல்லாம், 'குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்' என்ற இவர் வாக்கையே ஞாபகப்படுத்துகின்றன. 'நாற்பாற் குலம்' என்ற நான்கு வர்ணங்களுக்கும் உட்படாத ஒரு வகுப்பில் பிறந்ததாகத் திருமழிசையார் ஒப்புக்கொள்கிறார் அல்லவா?

'பிறந்திலேன்' என்பதற்கு 'வளர்ந்தேனில்லை' என்று பொருள் கொள்கிறார்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். வளர்ந்த குலத்தைக் கருதியே இவரைத் தாழ்ந்த குலத்தினராக அந்தக் காலத்திலுள்ள சில வைதிகர்கள் மதித்தனர் என்பது ஸ்ரீ வைஷ்ணவர்கள் கருத்து.

ஆறுயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம், பார்க்கவ முனிவரின் பத்தினி, திருமழிசையாரைப் பன்னிரு திங்கள் வயிற்றில் கொண்டிருந்து, பிண்டமாய்ப் பெற்றெடுத்ததாகச் சொல்லுகிறது. வடகலைக் குரு பரம்பரை, தென்கலைக் குரு பரம்பரை என்ற இருவகைக் கதைகளையும் ஆராய்ந்து, வங்கிபுரம் ஸ்ரீநிவாஸாசாரியர் என்பார் தமிழ்ச் செய்யுள் வடிவில் இயற்றியுள்ள 'திவ்ய ஸூரி சரிதம்' என்னும் நூல், பார்க்கவ முனிவருக்கும் அப்ஸரஸ் ஒருத்திக்கும் திருமழிசையார் பிண்டமாய்ப் பிறந்ததாகத் தெரிவிக்கிறது.

குழந்தைத் திருமழிசையாரை எடுத்து வளர்த்த திருவாளனும் அவன் மனைவியும் பிரப்பங்கூடை முடைந்து, ஜீவனம் செய்து வந்த குறவர் குலத்தினர் என்பதைக் கதைகளெல்லாம் ஒரு முகமாய் ஒப்புக்கொள்கின்றன. திரு

மழிசையாரும் அந்தச் சாதித் தொழிலை விட்டுவிடாமல் செய்து கொண்டிருந்தார் என்று வடிவழகிய நம்பிதாசர் கூறியுள்ளார்.

'சொல்லினும் தொழிற்கணும்' லட்சுமீ நாராயணமூர்த்தியின் அடிமலர்களைத் தம் உள்ளம் தழுவி, பிரிவிலாது அணிந்து கொண்டிருந்ததாகத் திருமழிசைப்பிரானே பாடியிருக்கிறார்.

> நான்உன்னை அன்றி யிலேன்கண்டாய், நாரணனே!
> நீஎன்னை அன்றி இலை

என்ற அநுபவம் பெற்றிருந்த இப்பெரியாரின் நிலையைச் சாதித் திமிரும் கல்வித் திமிரும் கொண்ட சாமானியர்கள் அறிந்து கொள்வது எளிதான காரியமன்று என்பதைத்தான் மேலே சொன்ன கதைகள் அறிவுறுத்துகின்றன.

# 7

# ‘கும்பகோணத்துப் பாகவதர்

குடந்தை செல்லும் வழியெல்லாம் தாயினும் மிகுந்த அன்புடன் தம் ஒழுக்கத்தாலும் உபதேசங்களாலும் பக்திப் பிரசாரம் செய்துகொண்டே திருமழிசையாழ்வார் குடந்தை என்ற கும்பகோணத்திற்குப் போய்ச் சேர்ந்தார். தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்றும் சிறந்த நகரமாக விளங்குகிறது கும்பகோணம். இது, காவிரி ஆற்றங்கரையில் சிவாலயங்களுடனும் வைஷ்ணவ ஆலயங்களுடனும் திகழும் ஓர் அழகிய நகரமாகும்.

### குடந்தையின் சிறப்பு :

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, மாசி மாதம் மக நட்சத்திரத்தை ஒட்டி ‘மகாமகம்’ என்ற ஒரு பெரும் புனித நீராட்டு விழா இங்கு நடைபெறுவது வழக்கம். இந்த விழா, அகில இந்தியப் புகழ் பெற்றது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக்கணக்கான மக்கள் இப்புனித நன்னாளில் இங்கு வந்து மகாமகக் குளத்தில் நீராடுவதுண்டு.

மகாமக நாளில் இக்குளத்து நீரிலே, கங்கை முதலான இந்தியப் பேராறுகள் ஏழும் வந்து கலக்கின்றன என்பது இங்

துக்களின் நம்பிக்கை. தாய்ப்பால்போல் இந்தியாவை ஊட்டி வளர்க்கும் ஏழு ஆறுகளிலும் நீராடிய பலன் மகாமக நாளன்று இங்கு நீராடுவதால் சித்திக்கிறதாம். இக்குளத்தில் நீராடிக் காவிரியிலும் நீராடுவார்கள்.

தமிழ் நாகரிகத்தையும் கலைகளையும் வளர்த்து வந்திருக்கும் ஆறுகளில் காவிரிக்கே முதன்மை ஸ்தானம் உரியது.

காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி — என
மேவிய ஆறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு

என்று தமிழகத்தின் ஆறுகளில் நம் தேசியக் கவிஞர் பாரதியாரும் காவிரியாற்றையே முதன்மையாக வைத்துப் பாடுகிறார் அல்லவா?

தமிழ் மக்களின் தெய்வத் திரு நதியாகிய காவிரியைத் தொண்டரடிப்பொடியாழ்வார்,

கங்கையிற் புனிதம்ஆய காவிரி

என்று சிறப்பித்திருக்கிறார். இந்நதி உற்பத்தியாகும் தலைக் காவிரியும், கடலோடு கலக்கும் காவிரிப்பூம்பட்டினத்துச் சங்க முகத் துறையும், நீண்ட காலமாகப் புனிதத் துறைகளாகக் கருதப்பட்டு வருகின்றன. காவிரி ஆறு முழுவதும் புனித தீர்த்தமே என்பது சைவ வைஷ்ணவர்களின் பொதுவான நம்பிக்கையாகும்.

'தென்னாட்டுக் கங்கை' யென்றும், 'சோழர் தம் குலக் கொடி' என்றும் பாராட்டப் பெறுகின்ற காவிரி, உபநதிகளுடன் கலந்து, நீர்ப் பெருக்கு நிரம்பப் பெற்று, கம்பீரமான பொலிவு தோன்ற அகண்ட காவிரியாகிச் சோழநாட்டை அடைகிறது.

திருச்சிக்கு மேற்கே கொள்ளிடம் என்னும் கிளைநதி, பிரிந்து செல்கிறது.

காவிரியாறு, கிழக்கு நோக்கி ஓடிய பின், கொள்ளிடம் இதனருகில் நெருங்கி வந்து, உள்ளாறு என்னும் கால்வாயால் காவிரியுடன் இணைந்துவிடுகிறது. இந்த இடத்தில் ஏற்பட்டிருக்கும் தீவுதான் திருவரங்கம்.

இங்கே தென் திசை நோக்கிப் பள்ளிகொண் டிருக்கும் இறைவனது அடிமலர்களை வருடி, அருள் பெற்று, காவிரி, குடந்தை நோக்கிச் செல்லுகிறது.

திருமழிசையாழ்வார், குடந்தை வந்தடைந்ததும் இத்திருப்பதியில் சயனத் திருக்கோலமாக எழுந்தருளி யிருக்கும் ஆராவமுதப் பெருமாளின் திருக்கோலம் கண்டு வணங்கினர். பிறகு இந்நகரிலேயே நெடுங்காலம் வசித்தாரென்றும், இவர் வாழ் நாளின் பிற்பகுதி முழுவதும் திருக்குடந்தையிலேயே கழிந்தது என்றும் குரு பரம்பரை வரலாறுகள் தெரிவிக்கின்றன.

இந்நகரில் இவர் வசித்த காலத்தில் இயற்றிய திவ்யப் பிரபந்தங்களே நான்காம் திருவந்தாதி என்றும், திருச்சந்த விருத்தம் என்றும் பெயர் பெற்று, நாலாயிரப் பிரபந்தத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இவர், தமது நீண்ட வாழ்நாளில் வேறு பிரபந்தங்களும் செய்திருந்தார் என்று கருதுவோரும் உண்டு.

**வெள்ளத்தை எதிர்த்த பாசுரங்கள் :**

ஒரு சமயம் வெள்ளம் பொங்கிக்கொண் டிருந்தது. காவிரியின் அந்தப் பேருருவத்தையும் ஆரவாரத்தையும் பய பக்தியுடன் மக்கள் கண்டு, வணங்குவாராயினர். திருமழிசை யாழ்வார் காவிரியின் அந்தக் கோலம் கண்டு, களித்தவராய்க் கொஞ்ச நேரம் அப்படியே நின்றுகொண் டிருந்தார்.

பிறகு, தாம் மூட்டையாகக் கொண்டு வந்திருந்த ஏடுகளை யெல்லாம் அந்தப் புது வெள்ளத்திலே போட்டுவிட்டார். சுவடிகள் பிரவாகத்தோடு விரைந்து போவதைக் கண்டு, 'காலப் பெரு வெள்ளத்திலே இப்படித்தான் மக்கள் செய்யும் செயல்கள் மறைந்து போகின்றன!' என்று தமக்குள் தாமே சொல்லிச் சிரித்தார்.

ஆனால் சில ஏடுகள் மட்டும் ஆற்றோட்டத்துடன் போய், மறைநதுவிடாமல் தண்ணீரை எதிர்த்து வந்தனவாம். நீர்ச் சுழியில் சிக்கிச் சுழன்று, கரையோரமாக அலைகளால் அவ் வேடுகள் ஒதுக்கப்பட்டன என்று கருதலாம்.

நீரோட்டத்துடன் ஓடி மறைந்துவிடாமல் எதிர்த்து வந்த ஏடுகளைத் திருமழிசையார் இளநகை அரும்பிய வண்ணம், கையில் எடுத்துப் பார்த்தார். பார்த்துக்கொண்டே ஊருக்குள் மறைந்துவிட்டார். இந்த ஏடுகளே திருச்சந்த விருத்தம், நான் காம் திருவந்தாதி என்ற இரு பிரபந்தங்களும் ஆகும் என்பது கதை.

இநத ஆழ்வாரை ஸ்ரீ வைஷ்ணவ சமூகம்,
முழுப்பெருக்கில் பொன்னியெதிர்
மிதந்தசொல்லோன் வாழியே!

என்று இன்றும் வாழ்த்திக்கொண் டிருக்கிறது. இப்படி யெல் லாம் பக்தர்களின் பொருள் பொதிந்த வரலாறுகள் விசித்திர மாக எழுதப்பட்டிருக்கின்றன.

சைவசமய உலகின் தனிநாயகமாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் வரலாற்றிலும் இத்தகைய கதை ஒன்று காணப்படுகிறது. சமணர்கள், வாது புரிய அழைத்ததும் திரு ஞான சம்பந்தர் அவர்களோடு அனல்வாதமும் புனல்வாத மும் செய்தாராம். சமய உண்மைப் பொருளின் கருத்தை

எழுதி யிருக்கும் ஏடுகளை நெருப்பில் இட்டு, அவை வேகாமல் இருந்தால் அனல் வாதத்தில் வெற்றி கிடைத்துவிட்டதாகக் கருதப்படுமாம். புனல் வாதத்தில் வெற்றி என்றால், பிர வாகத்தில் இட்ட ஏடு, ஆற்றோடு போய்விடாமல் எதிர்த்து வர வேண்டுமாம்.

சமணர்கள் தீயில் இட்ட ஏடு எரிந்து போயிற்று; வைகை ஆற்றில் இட்ட ஏடு நீரோடு போய்விட்டது, சம்பந் தர் தீயில் இட்ட ஏடும் வேகாதிருந்தது; ஆற்று நீரில் இட்ட திருப்பாசுர ஏடும் நீர்ப்போக்கை எதிர்த்துக்கொண்டு மேல் நோக்கி வந்துவிட்டதாம்.

வெள்ளத்தை ஏடுகள் எதிர்த்து வந்தன என்ற அற் புதத்தைச் சிறந்த நூல்கள் கால வெள்ளத்தை எதிர்த்து வந்து நமக்குக் கிடைத்திருக்கின்றன என்ற உண்மைக்கு ஓர் அறிகுறி யாகக் கொள்ளலாம். திருமழிசையாழ்வார் தத்துவ விஷயங் களைக் குறித்தும், தமது அநுபவங்களைக் குறித்தும் எத்தனையோ பாடல்கள் பாடியிருக்கக் கூடுமல்லவா? அவற்றுள் திருச்சந்த விருத்தம், நான்காம் திருவந்தாதி என்ற இரண்டு பிரபந் தங்கள் கால வெள்ளத்தை எதிர்த்து வந்து, நாலாயிர திவயப் பிரபந்தத்தில் இடம் பெற்று, நாதமுனிகள் என்ற ஸ்ரீ வைஷ் ணவ ஆசாரியரின் கைக்கு எட்டிவிட்டன என்று கருதலாம்.

ஆற்றங்கரையில் நின்றுகொண் டிருந்த திருமழிசையாழ் வார், ஆற்றுப் போக்கை எதிர்த்து வந்து, தமது திருவடிகளை அடைந்ததுபோல் கரையோரமாக வந்து, ஒதுங்கிய ஏடுகளைக் கையில் எடுத்துக்கொண்டு, ஆராவமுதப் பெருமாளின் சந்நிதிக்கே போய்விட்டார். அப்பெருமானை மன, மெய், மொழிகளால் வழிபட்டார். பிறகு திருச்சந்த விருத்தத்தில், தாம் இப்பெருமானைக் குறித்துப் பாடி யிருக்கும் பாசுரங்களைப் பாடிப் பரவசமானார்.

அடியார்களின் விரோதியாக இருந்த ராவணனை வதஞ் செயதருளிய சக்கரவர்த்தித் திருமகனே பின்புள்ள அடியார் களுக்கு விரோதிகளான அசுர சகதிகளையும் போககி, அருள செய்வதற்காகத திருககுடநதையில் சயனத் திருக்கோலத்தில் அமர்ந்திருககிருன என்று பாடுகிரு. இக் கோயிலை வலஞ் செயது, வழிபட்டு வநத தம் காலதது அடியார்களை,'வேதநாவர், மீதியான கேள்வியார' என்று குறிப்பிட்டு, அவர்ளது கல்வி கேள்விகளின் உயர்ந்த ரகத்தை வற்புறுத்துகிரு.

காவிரியில் நீராடி நிர்மலராய்ப பரிமளம் மாருத நீண்ட கூந்தலை உடைய குடநதைப் பெணமணிகளைத தாம் கணடவாறு குறிப்பிடுகிருர். அந்தப் பெணகள் நீராடும் அழகைக குறிப் பிடடு, அத்தகைய திருக்குடந்தையில தாமரைககாடு பூத்தாற் போனற திவ்விய அவயவஙகளுடன கண்வளரும ஆராஅமுத னைப் பாடுகிருர்:

கொஙகுதங்கு வார்குழல்
மடந்தைமார் குடைந்தநீர்
பொங்குதண் குடந்தையுள்
கிடநத புணட ரீகனே!

[கொங்குதங்கு - வாசனை பொருந்திய. வார்குழல - நீணட கூந்தலை யுடைய. மடந்தைமார் - பெண்கள். தண் குடநதையுள்- குளிர்நத திருககுடந்தையுள். புண்டரீகன் – தாமரைமலாகளை ஒத்த அவயவஙகளை உடையவன.]

ராமாவதாரததில ஈடுபட்டவா, கணணனுககவும ஆரா வமுதனைப போறறுகிருர். எமபெருமானது வீர சரித்திரத்தைக் காட்டிலும, ஸ்ரீ கிருஷ்ணலீலைகள இவரை வசீகரிக்கின்றன.

கண்ணன தவழ்நடை நடந்த அழகிலேயே மருத மரங்கள் சாயந்து விழுந்து, சாப விமோசனத்திற்குக் காரணமான கதை

யைக் குறிப்பிடுகிறார். குவலயாபீடம் என்ற அசுரமதம் கொண்டிருந்த யானையை மாளப் புடைத்ததையும், குதிரை வடிவில் வந்த அசுரனை வதைத்ததையும் கண்ணனது துஷ்ட நிக்கிரக லீலைகளாகக் குறிப்பிடுகிறார்.

மண் அளந்த பாதமே கண்ணனாகத் தளர்நடை நடந்தது, திருவிளையாடல்கள் புரிந்தது என்று கூறி, அத்தகைய கண்ணனே நல்லோர் வலங் கொள்ளவும் வரங்கொள்ளவும் குடந்தையுள் கண்வளர்கிறான் என்கிறார். இக்கடவுளை,

குடந்தை மேய கோவலா!

[மேய - மேவிய. கோவலா - கோபாலா.]

என்று நெஞ்சு குளிரக் கொஞ்சி அழைக்கிறார்.

இக் குடந்தையின் உணவு வளத்தையும் அழகு வளத்தையும் கட்டுக்காவலையும் வாழ்க்கை வசதிகளையும்,

சாலிவேலி தண்வயல்
  தடங்கிடங்கு பூம்பொழில்
கோலமாட நீடுதண்
  குடந்தை

[சாலிவேலி - செந்நெற்பயிர்களை வேலியாக உடைய. தண்வயல் - குளிர்ந்த வயல்கள். தடங்கிடங்கு - பெரிய அகழிகள். பூம்பொழில் - பூஞ்சோலைகள். கோல நீடு மாடம் - அழகான, ஓங்கிய. வீடுகள்.]

என்ற வாக்கில் குறிப்பிடுகிறார். இப்பூம்பொழிலைத் 'தேன் பொருந்து பூம்பொழில்' என்றும் வருணிக்கிறார்.

சோலை சூழ்ந்த இத் திருப்பதியில் சாய்ந்தருளி, அடியார்களுக்கு ஆரா அமுதமாக இருக்கும் இப்பெருமானே திருமலை என்ற திருப்பதியில் அடியார்களுக்கு இன்னமுதமாக

கின்றருளுகிறான் என்கிறார். இப்படியெல்லாம் பக்திசெய்தும், 'நீ கண் வளர்ந்த வண்ணமாகவே இருக்கிறாய்; என்னை அணைத்து அருளவில்லை; வாய்திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே!' என்று நெஞ்சு உருகிக் கேட்கிறார்.

'இப்படிக் கேட்டும் ஆரா அமுதன் வாய்திறக்காமல் கண் வளர்ந்தவண்ணமாக இருக்கிறான்; 'கைகால்களை அசைக்கவும் இல்லையே!' என்று அதிசயமாக உற்று நோக்கும்போது, பக்தரை அநுபூதிச் செல்வராகக் காண்கிறோம்.

நடந்தகால்கள் நொந்தவோ? நடுங்கஞாலம் ஏனமாய்
இடந்தமெய் குலுங்கவோ? விலங்குமால் வரைச்சுரம்
கடந்துகால் பரந்தகாவி ரிக்கரைக் குடந்தையுள்
கிடந்தவா(று) எழுந்திருந்து பேசு,வாழி கேசனே!

[ஞாலம் - பூமி. ஏனமாய் - வராக மூர்த்தியாகி. இடந்த (இங்கே) - அந்த ஞாலத்தை விடுவித்துக் காப்பாற்றிய. மால் வரை - பெரிய மலைகளை. சுரம் - பாலைநிலம்போன்ற பிரதேசங்கள். கால் பரந்த - விஸ்தாரமான கால்வாய்களை உடைய. கிடந்த ஆறு - சயனித்திருக்கிற விதம். கேசனே - கேசவனே.] என்று கேட்கிறார்.

தன்னைப்போன்ற அன்பனை அணைத்துக்கொள்ளாமலும், ஆறுதலாக ஒரு வார்த்தைகூட அருளிச் செய்யாமலும் இருப்பதால், ஏதோ, 'அளவில்லாத சிரமத்தை அடைந்துதான் இப்படிப் படுத்துக்கிடக்கிறானோ?' என்று எண்ணுகிறார். உடனே, 'உலகங்களை எல்லாம் அளந்ததால் ஏற்பட்ட சிரமந்தானோ?' என்று கேட்கத் தோன்றுகிறது. திருவல்லிக்கேணியில் கிடைத்த அநுபவந்தான் இது.

இறைவனுடைய அடிகளை அன்பர்கள், 'அடிமலர்கள்' என்று போற்றுகிறார்கள். 'மலர்கள், நிலமகள் பிடிக்கும்

மெல்லடி' என்று பேரன்புடன் கொஞ்சும் தமிழில் குறிப்பிடு கிருர்கள். திருமழிசையாரும்,

நடந்த கால்கள் நொந்தவோ?*

என்று கொஞ்சிக் கேட்கிருர்.

வராக மூர்த்தியாகி இரணியாட்சனை வதைத்துப் பூமியை மீட்டுக் கொண்டுவந்த புராணக் கதையைக் குறிப்பிட்டு, 'அந்தச் சிரமந்தானே, இப்படி ஆடாது அசையாது கண்வளரக் காரணம்?' என்றும் கேட்கிருர். உலகை அளந்தது திருவடிகளுக்குச் சிரமம் கொடுத்திருக்கக் கூடுமாம். உலகை விடுவித்தது திருமேனிக்குச் சிரமம் கொடுத்திருக்குமாம். அத்தகைய சிரமம் தீர, திருவடிகளைப் பிடிக்கவும், திருமேனியைப் பிடிக்கவுங் கூடக் காதல் கொள்ளுகிறதாம் இவர் நெஞ்சு. 'தாயிலானைத் தழுவும் என் ஆவியே!' என்பது பக்திக் காதலர்களின் மனப் பான்மைதானே.

இப்படிச் சயனித்துக் கிடக்கும் இப்பெருமாளுக்குச் சிரம பரிகாரமாய்ச் 'சீதோபசாரம்' செய்ய வேண்டுமென்றே காவிரி ஓடிவருகிருளாம். வளமான மலைகளையும் வறண்ட நிலங்களையும் கடந்து, பல கால்களால் (கால்வாய்களாக) ஓடி வருகிருளாம்.

'விலங்கு மால்வரைச் சுரம் கடந்து, கால்பரந்த காவிரி' என்பது, காவிரியாறு குடகுமலைப் பிரதேசத்தையும், மைசூர் நாட்டையும் கொங்கு நாட்டையும் கடந்து, சோழநாட்டிலே அகண்ட காவிரி என்ற பரந்த நீர்ப்பரப்பாகிப் பின்பு கிளைநதிகளாய்ச் செல்லும் போக்கை நன்ருகச் சுட்டிக்காட்டுகிறது.

'எழுந்திருந்து பேசு' என்ற இவரது வேண்டுகோள், உற்று நோக்கத் தக்கது. படுத்திருக்கும் காரணத்தைப் படுத்துக் கொண்டே விளக்கினுல் போதாதாம். எழுந்திருந்து பேசினுல்

தான் இவர் உள்ளம் அமைதி பெறும், ஆறுதல் பெறும் என்பது குறிப்பு. எழுந்திருந்து பேசும்போது அந்த அசைவுகளின் அழகை அநுபவிக்கலாம் என்ற ஆசையும் இவருக்கு உண்டு என்பர்.

'வாழி கேசனே!' என்று முடிவு பெறுகின்றது இப்பாசுரம். அதிசயமான – ஓர் அதிசய உண்மைக்கு அறிகுறியான–இச்சயனத் திருக்கோலம்! இந்தப் பள்ளிகொண்ட பேரழகு! வாழ்க என்கிறார். சிரமபரிகாரமாய்ப் படுத்திருப்பவனைத் தட்டி எழுப்பியதற்காக ஒருவன் அநுதாபப்படுவதுபோல் அமைந்திருக்கிறது இப்பாசுரத்தின் இறுதி அமைப்பு.

அறிதுயில் அமர்ந்த இந்த அழகு. இடையூறு ஒன்றும் இல்லாமல் என்றும் வாழவேண்டும் அன்பர்பொருட்டு என்று வாயார நெஞ்சார வாழ்த்துகிறார், பாசுரத்தின் இறுதியிலே.

'கிடந்தவாறு எழுந்திருந்து பேசு' என்று ஆழ்வார் பிரார்த்தித்ததும், அன்பர்கள் உகந்ததே தமக்கு இன்பம் என்று இருக்கும் எம்பெருமான் அப்படியே எழுந்திருக்க முயன்றானாம். உடனே திருமழிசையார், 'இந்தத் திவ்ய மங்கள விக்கிரக அழகு குலையாது வாழ்க!' என்று அந்தச் சயனத் திருக்கோலத்தையே விரும்பி வாழ்த்தினாராம்.

இப்படி இவர் வாழ்த்தவே ஆரா அமுதப் பெருமானும் தான் எழுந்திருக்க முயன்ற அம் முயற்சியை அப்படியே நிறுத்திக்கொண்டானாம். அதேநிலையில் இப்போதும் திருக்குடந்தை ஆரா அமுதப் பெருமான் காட்சி வழங்குகிறான்.

அத்தகைய பாட்டும் பொருளும் கால வெள்ளத்தை எதிர்த்து, நீந்தி வந்து, இன்றைய பக்தர்களுக்கும் ரஸிகர்களுக்குங்கூட ஆற்றல் அளிக்கக்கூடும்.

திருமழிசையாழ்வார் தம் வாழ்நாளின் பிற்பகுதியில் திருக்குடந்தையிலேயே தங்கிவிட்டதால் இந் நகரைத்

'திருமழிசைப் பிரான் உகந்த இடம்' என்று சிறப்பித்துப் பேசுவது உண்டு.

'பாம்பணைமேல் சேர்ந்தாய், குடமூக்கில் கோயிலாக் கொண்டு' என்பது பூதத்தாழ்வார் வாக்கு. திருமழிசை யாழ்வாரைக் 'குடமூக்கிற் பகவர்—கும்பகோணத்துப் பாகவதர்—' என்று ஒரு ஜைன ஆசிரியர் குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது.

# 8

# பாசுரங்களில் பக்திஸாரர்

திருமழிசை யாழ்வாரிடம் பெரும் பக்தி கொண்டிருந்த திருக்கச்சி நம்பிகள் என்ற பெரியார், ஆழ்வார் பிறந்த தலமாகிய திருமழிசைமீதும் பேரபிமானம் கொண்டிருந்தார். இந்த ஊரை எப்படிப் புகழ்ந்தாலும் இவர் உள்ளத்தில் திருப்தி பிறக்கவில்லை.

இந்த உலகின் இருள்தீர வந்து உதித்த பெரியாருள் ஒருவரைத் தந்து, அவரது உபதேசங்களுக்கு வளர்ப்புப் பண்ணையாக உதவிய புண்ணிய ஸ்தலமல்லவா! திருமழிசை வந்த ஜோதி,திருமழிசையாழ்வார்; இவர் தோன்றிய திருமழிசையும், 'இருள்தரு மாஞாலம்'த்திலே ஒரு ஜோதி ஸ்தலந்தானே!

திருக்கச்சி நம்பிகள் திருமழிசையின் புகழை வருணிப்பதில் தம் மனோபாவம் முழுவதையும் உபயோகித்துப் பார்த்து, ஒரு கற்பனை செய்திருக்கிறார். திருமழிசையைத் துலாக்கோலின் ஒரு தட்டிலும், இவ்வூர் தவிர உலகத்தின் மற்றைப் பகுதிகளை மற்றொரு தட்டிலும் வைத்து, நிறுத்துப் பார்த்தார்களாம். பார்த்ததும், நீர்வளம் முதலான வளங்களுடன் திருமழிசையார் தோன்றிய சிறப்பால் பக்திவளமும் மிக்க திருமழிசையைத்

தாங்கிய தட்டே தாழ்ந்தது, தாழ்ந்து தலத்தின் உயர்வை எடுத்துக் காட்டியதாம்:

இந்தத் தனியன் வருமாறு :

உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க,—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

[மாநீர்மழிசை - சிறந்த நீர்வளம் மிக்க திருமழிசை. வலிது – வலிமை மிகுந்ததாய்த் தாழ்ந்தது ]

## கதைகள் வளர்கின்றன !

புலவர்கள், புகழ் என்ற துலாக்கோலில் நிறுத்துப் பார்த்து, முடிவு கட்டியதாகத் திருக்கச்சி நம்பிகளின் பக்தி நிறைந்த மனோபாவம் தெரிவிக்கிறது. குருபரம்பரைக் கதைகளோ புலவரைப் பிரமதேவர் ஆக்கிவிட்டன; அவர் விசுவகர்மா நாட்டிய துலாக்கோலில் நிறுத்துப் பார்த்தாராம்.

பிரமனிடம் வசிஷ்டர் முதலிய முனிவர்கள் சென்று, தவம் புரிவதற்கு மண்ணுலகில் சிறந்த க்ஷேத்திரம் ஒன்றைக் குறிப்பிடவேண்டும் என்று பிரார்த்தித்தார்களாம். அதை நிச்சயிப்பதற்காகத் தேவசிற்பியான விசுவகர்மாவின் உதவியால் இம் முனிவர்கள் காணவே, துலாக்கோல் நாட்டித் திருமழிசையின் சிறப்பைப் படைப்புக் கடவுளே நிலைநாட்டினும். தனியனிலிருந்து இப்படிக் கதை தழைத்திருக்கிறது.

இப்படித்தான் பாசுரங்களிலிருந்து திருமழிசைப் பிரானின் வைபவமும் கதை கதையாகக் கிளைத்திருக்கிறதென்று கருதலாம். உதாரணமாகச் சில பாசுரங்களை நோக்குவோம்.

'துளக்கமில் விளக்கமாய் ஏன்று என் ஆவியுள் புகுந்தது என்கொலோ எம் ஈசனே?' என்று இவர் தமது பக்தியநுபவம்

ஒன்றை வெளியிடுகிறார், திருச்சந்த விருத்தத்தின் நான்காம் பாசுரத்திலே. 'என்றும் வாடாத விளக்காகி, என் காரியங்களை யெல்லாம் உன்னுடைய சுமையாக ஏற்றுக்கொண்டு என் ஆவியினுள்ளே புகுந்து, என்னை ஒளிபெறச் செய்த இது என்ன நீர்மை!' என்பது பொருள். இத்தகைய வாக்கிலிருந்து இவர் ஆதியஞ்சோதியாகிய பெருமானைத் தம் திருமேனியிலே தோற்றுவித்த கதை தோன்றியிருக்கக்கூடும்.

வேறொரு பாசுரத்தில், இறைவன் ஓரிடத்தில் இருக்க வில்லை என்றும், அவன் உறையும் இடத்திற்கு எல்லை இல்லை என்றும் தொன்று தொட்டுப் பெரியோர் கூறுவதாகச் சொல்லி, 'ஆதலால சேர்விடத்தை நாயினேன் தெரிந்து, இறைஞ்சுமா சொலே' என்று இறைவனை நோக்கி, விண்ணப்பம் செய்து கொள்கிறார் திருமழிசையார். 'எங்கும் இருக்கும் இறைவனே! அடியேன் சேர்வதற்கு உரிய இடம் தெரிந்து, இறைஞ்சுமாறு அருள் செய்யவேண்டும்' என்பது பிரார்த்தனை.

இத்தகைய ஒரு வாக்கிலிருந்து 'கோயிலில் விக்கிரக வடிவிலுள்ள பகவான் இந்தப் பக்தர் எப்படி எப்படித் திரும்பினாரோ அந்த அந்த முகமாய்த் திரும்பி அருள்புரிந்தான்' என்ற ஆச்சரியமான கதை தோன்றியிருக்கக் கூடும்.

'பிறந்தபின் மறந்திலேன்'—எனக்கு அறிவு பிறந்தபின்பு இறைவனை மறந்ததில்லை என்று கூறிவிட்டு,

> நின்றதும் இருந்ததும்
> கிடந்ததும்என் நெஞ்சுளே!

என்று உறுதி கூறுகிறார்.

நின்ற திருக்கோலத்திலும் வீற்றிருந்த திருக்கோலத்திலும் கண்வளர்ந்த திருக்கோலத்திலும் திவ்ய ஸ்தலங்களில் இறைவன் காட்சி தருகிறானல்லவா? இந்தக் காட்சிகளை யெல்லாம்

தமக்குத் தம் நெஞ்சிலேயே வழங்கியருளினன் என்று இவர் சொல்லுகிருர்.

இத்தகைய வாக்கிலிருந்து இவர் நீண்டகாலம் யோகத்தில் அமர்ந்து இறையுண்மையை அநுபவித்ததாக வரலாறுகள் தோன்றியிருக்கக்கூடும்.

**ஓர் உவமக்கதை :**

'திவ்யார்த்த தீபிகை' என்னும் தமது உரையில் காஞ்சி மகாவித்வான் ஸ்ரீ அண்ணங்கராசாரியர் இறைவனது நின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களின் உட்பொருளை அதி உசித மாக வெளியிட்டிருக்கிருர். கடனளியையும் கடன் கொடுத் தவனையும் குறிக்கும் ஓர் உவமக்கதையைக் கொண்டு, குறித்த உட்பொருளை விளக்குகிருர்.

'கடன்கொண்டார் நெஞ்சம்போலும் கலங்கினன் இலங்கை வேந்தன்' என்றுசில ராமாயண (அதிகப்) பிரசங்கி கள், கம்பர் பாடியிருப்பதாகவே சொல்லிக் கடனளியின் கலக் கத்தையும் பிரதாப லங்கேசுவரனுடைய பெருங்கலக்கத்தையும் ஒருங்கே சுட்டிக் காட்டுவது உண்டு. ஆனல் கடனளியைத் தேடி அலைந்து கடன்கொடுத்தவன் படும் கலக்கம் கொஞ்சமா?

'எவ்வளவு காலமாகக் கடனைத் திருப்பிக் கொடாமல் இருக்கிருன்!' என்ற எண்ணத்துடன் கடனளி வீட்டுக்கே வந்து சேர்கிருனும் முதலாளி. முதல் முதல் நின்றுகொண்டே கேட்டு விட்டுப் போய்விடுகிருன். இப்படிச் சில தினங்கள் கழி கின்றன.

காரியம் ஆகவில்லையே என்று மறுபடியும் வருகிருன் முதலாளி. இப்போது நின்று கேட்டுப் போய்விடவில்லை; 'திண்ணைமீது உட்கார்ந்துகொண்டு, கடனை நிர்ப்பந்தித்து'க் கேட்டுப் போகிருனும். இப்படிச் சில தினங்கள் கழிந்துபோகின் றன. பணம் இன்னும் திரும்பி வந்தபாடில்லை.

இந்த நிலையில், கடனைக் கொடுத்தாலொழியப் போவ தில்லை யென்று 'படுக்கை படுத்து நிர்ப்பந்தி'க்கும் வழக்கமும் அந்தக் காலத்தில் உண்டு. ஒருவகைச் 'சத்தியாக்கிரக' முறை இது.

உலகங்களுக்கெல்லாம் ஒரு முதலாளியாக உள்ள கடவு ளுக்கு நாமெல்லாம் கடன்பட்டிருக்கிறோம். எனினும், 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உண்மையை நம்மில் எத்தனை பேர் அறிந்து ஒழுகுகிறார்கள்!

கைங்கரியக் கடனைத் தண்டுவதற்காக இறைவன் ஓரிடத் தில் நின்று பார்க்கிறான்; வேறொரு தலத்தில் வீற்றிருந்து பார்க்கிறான்; மூன்றாவது இடத்தில் படுத்துப் பார்க்கிறான். இக்கருத்துடன்தான் 'ஊரகம் என்ற தலத்திலே நிற்கிறான்; பாடகம் என்ற தலத்திலே இருக்கிறான்; திருவெஃகாவிலே கிடக்கிறான்' என்று ஆழ்வார் பாடியிருக்கிறார் என்பர்.

## அற்புத அநுபவங்களும் அன்பு வழியும் :

திவ்ய ஸ்தலங்களிலே நின்றும், இருந்தும், கிடந்தும் இவரது திருப்பணியைப் பெற்றுக்கொள்ள விரும்பிய இறைவன், இவருக்கு ருசி பிறந்ததும் இவர் உள்ளத்திற்கே வந்துவிடு கிறானாம், மூன்று திருக்கோலங்களிலும்.

பாயைச் சுருட்டிக்கொண்டு இவர் கட்டளைக்கு இணங்கத் திருவெஃகாவிலிருந்து புறப்பட்டான் என்றும், மறுபடியும் இவர் சொன்ன வண்ணமே 'பைந்நாகப்பாய்' விரித்துப் படுத்துக் கொண்டான்' என்றும் கதை வழங்குகிறதல்லவா? அதே சொன்னவண்ணம் செய்த பெருமாள், இவர் திருவெஃகாவை விட்டு வந்ததும் அந்தச் சேஷசயநத்துடன் இவரது உள்ளக் கோயிலுக்கே வந்து சேர்ந்துவிட்டானாம்.

சேஷ சயனத்தோடு மட்டுமா?—'அழகிய பாற்கடலோடும் அரவிந்தப் பாவையும் (லக்ஷ்மி) தானும்' உள்ளத்தில் வந்து புகுந்துவிட்டதாகவே ஆழ்வாரின் எண்ணம், அநுபவம்.

இத்தகைய அநுபூதியைத் திருமழிசையாழ்வார் வெளியிட்டிருக்கும் பாசுரங்களிலிருந்தே, வேதத்துக்குரிய ஆறு அங்கங்களையும் அறிந்தவரும், சடங்குகளில் ஈடுபடுவோருமான சடங்கர் வாயடங்குமாறு இறைவன் அனந்த சயநத்தின்மீது அறிதுயில் அமரும் திருவுருவத்தைத் திருமாமகளுடன், இந்த ஆழ்வார் திருமேனியிலேயே, தோற்றுவித்தருளிய அற்புதம் விளங்கிருக்கக்கூடும்.

இத்தகைய அற்புத அநுபூதியை இந்த ஆழ்வார் அடுத்த பாட்டிலும் பின்வருமாறு வெளியிடுகிறார் :

அற்புதன் அநந்தசயநன்
ஆதிபூதன் மாதவன்
நிற்பதும் இருப்பதும்
கிடப்பதும்என் நெஞ்சுளே!

[ஆதி பூதன் – உலகங்களுக்கெல்லாம் ஆதிகாரணமாக உள்ளவன்]

அந்தப் பாசுரத்திலே ஊரகத்தில் நின்று, பாடகத்தில் இருந்து, வெஃகாவில் கிடந்து, அப்படியே தன் நெஞ்சம் புகுந்துவிட்டதாகக் கூறினார். இந்தப் பாசுரத்திலே, திருமலையில் நின்று, பரமபதத்திலே வீற்றிருந்து, பாற்கடலிலே பள்ளி கொண்டிருந்தவன் அந்த இடங்களையும் துறந்து, தம் நெஞ்சின் உள்ளேயே அப்படியெல்லாம் காட்சி தருவதாகக் கூறுகிறார்.

இவருக்குப் பக்தியும் யோகந்தான்;

வாசித்தும் கேட்டும்
வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன்
போது

என்ற அந்தக் கலா யோகந்தான்.

இவர் இறைவனை அன்புநெறியிலேதான் கண்டார்; உடம்பை ஹிம்ஸிக்கும் தவநெறியாகிய அந்த ஹிம்ஸை நெறியில் அல்ல.

அன்பிலன்றி ஆழியானை
யாவர்காண வல்லரே?

என்பது இந்த ஆழ்வாரின் மகாவாக்கியங்களில் ஒன்று.

இந்த அன்பை, 'நெஞ்சு உருகி உள்கனிந்து எழுந்ததோர் அன்பு' என்று சிறப்பித்துக் குறிப்பிடுகிறார். இந்த அன்பிற்கும் இந்திரிய ஜயத்தோடு கூடிய யோகமார்க்கம், துணை செய்தது என்கிறார்:

புன்புல வழிஅடைத்(து)
அரக்(கு)இலச் சினைசெய்து,
நன்புல வழிதிறந்து
ஞானநற் சுடர்கொளீஇ,
என்பில்எள்கி நெஞ்சுருகி
உள்கனிந்(து) எழுந்ததோர்
அன்பிலன்றி ஆழியானை
யாவர்காண வல்லரே?

[புன்புல வழி – இழிவான இந்திரிய வழியை. அரக்கு இலச்சினை செய்து - அரக்கு முத்திரையிட்டு. நன் புலவழி – நல்ல அறிவு வழி. சுடர்கொளீஇ – சுடர்கொளுத்தி. என்பு இல் – எலும்பு வீடாகிய உடம்பு. எள்கி – (இங்கே) நெகிழப் பெற்று.]

இந்த வழியில் செல்லாதபடி தடுத்து, இந்திரிய ஓட்டத்தை நல்வழியிலேயே திருப்பிவிட்டாராம். அதே வேகத்தில் உள்ளே ஞானச் சுடர் கொளுத்தி, உள்ளமும் உடலும் ஒருங்கே உருகுவதுபோன்ற நிலையில் உள்கனிந்து எழுந்த அன்பைக் கண்டு, அந்த அன்பிலேயே தம் அன்பனைக் கண்டுகொண்டாராம்.

இத்தகைய அன்பு யோகந்தான் – பிரேமயோகந்தான் – ஆண்டவனைக் காணும் வழி என்கிறார். இது இவரது யோக ரகசியம்.

இந்த யோக நெறியிலே இந்திரிய ஜயம் சித்தியாவது உள் கனிந்த அன்பினால்தான், அன்பு கலந்த பணியினால்தான் என்பது குறிப்பு. இந்த யோகத்திலே ஞானமும் அன்பும் இணைந்து, ஞானபக்தி ஆகின்றன. இங்கே மூடபக்திக்கு இட மில்லை.

இந்த ஞானபக்திக் காதல், ஒருமையுள்ளத்துடன் நிலை பெறும்போது, 'சோர்விலாத காதல்' ஆகி, இறைவன் திருவடி களைக் காட்டுகிறது. இறைவனைக் காண்பதென்றால் அவன் திருவருளுக்கு இவன் இலக்காகி அவன் திருவடிகளைக் கண்டு கொள்வதுதானே! .

இத்தகைய பக்திப் பெருவாழ்வு வாழ்வோருக்கு,

எத்திறத்தும் இன்பம், இங்கும்
அங்கும் எங்கும் ஆகுமே!

[எத்திறத்தும் இன்பம் – எல்லாவித இன்பமும்]

என்பது இந்த ஆழ்வார் வாக்கு.

இத்தகைய பக்திப் பேரின்பத்தை அநுபவித்தவர் பக்தி ஸாரர் என்பதில் ஐயமில்லை. இந்த அநுபவந்தான்,

எட்டினோ(டு) இரண்டெனும்
கயிற்றினால் மனந்தனைக்
கட்டிவீ(டு) இலாதுவைத்த
காதல்இன்பம் ஆகுமே.

[எட்டினோடு இரண்டு – பத்து என்ற பக்தி. வீடு இலாது– இந்தக் கட்டிலிருந்து விடுதலை இல்லாதபடி.]

என்று உறுதி கூற முடியும்.

இந்தக் காதலின்பத்தை விட்டுப் பரமபதத்திலே போய் அநுபவிக்கின்ற அந்த வீட்டின்பத்தையும் இவர் பாராட்ட வில்லை. அந்தப் பரமபத இன்பமும் இந்த இம்மை வாழ்வின் இன்பத்திற்கு ஈடாகாது என்கிறார்.

**நற்சரிதை :**

இத்தகைய பக்திஸார யோகி, தம்மை முனிகுமார ரென்று சொல்லிக்கொள்ளவில்லை.

குலங்களாய ஈரிரண்டில்
ஒன்றிலும் பிறந்திலேன்!

என்றுதான் தமது பிறப்பைக் குறித்துச் சொல்லுகிறார்.

பார்க்கவ முனிவருக்கும், அவரை மோகிப்பித்த கனகாங்கி யென்ற அப்ஸரசுக்கும் திருமழிசையார் தோன்றினர் என்பது ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்களுக்குக் கிடைத்த செவிவழிச் செய்திதான். 'ரிஷி புத்ரராய்த் திருவவதரித்த இந்த ஆழ்வார், "நாலு வர்ணத்திலும் பிறந்திலேன்" என்பானேன்? என்னில், யது குலத்திலே வந்தவதரித்த கிருஷ்ணன், தான் வளர்ந்தரு ளின இடைக்குலத்தையே தனக்குக் குலமாக நினைத்திருந்தாற் போல இவரும் வளர்ந்தருளினபடியை நினைத்து அருளிச்செய் கிறார்' என்பது வியாக்கியானம். இந்த விதமாகச் செவிவழிக் கதைக்கும் கவிவழிச் செய்திக்கும் உள்ள முரண்பாட்டிலே, உரை யாசிரியர் 'சமரசம்' காண்கிறார்.

'கலந்த சுற்றம் மற்றிலேன்' என்று இவரே கூறியிருப்ப தால், பிரம்பறுக்கும் குடியிலே வளர்ந்த இவர், தம் சுற்றத் தாரைப் பிரிந்து, யோகியாகவும் பரம பாகவதராகவும் வாழ்ந்து வந்தார் என்று ஊகிக்கலாம்.

அடக்கரும் புலன்கள் ஐந்(து)
அடக்கிஆசை யாம்அவை

தொடக்கறுத்து வந்துநின்
தொழிற்கண்நின்ற என்னை

[அடக்கரும் புலன்கள் - அடக்கமுடியாத புலன்கள். தொடக்கு அறுத்து – பாசம் அறுத்து. நின் தொழிற்கண் – உன்னுடைய தொழிலிலே.]

என்று இவர் ஆத்ம சரித்திரம் பேசுவதைக் கேளுங்கள்.

சித்தராகத் தருக்கித் திரிந்து, ஆரவாரம் செய்துகொண் டிருந்தவர், பேயாழ்வார் அருள்பெற்றுப் பக்திஸாரர் ஆகிவிட்ட தாய்க் கதை வழங்குகிறதல்லவா? இந்த வரலாற்றுப் பகுதிக்கு,

மறம்துறந்து வஞ்சம் மாற்றி
ஐம்புலன்கள் ஆசையும்
துறந்து நின்கண் ஆசை யேதொ
டர்ந்து நின்ற நாயினேன்

என்ற பாசுரப் பகுதியில் ஓர் அகச்சான்று கிடைக்கிறது என்று கருதலாம்.

கணிகண்ணன் என்ற இவரது சீடன், காஞ்சியை ஆண்ட பல்லவராயனை நோக்கி, 'நம் ஆசாரியர் உன் ஆணைக்குக் கட்டுப்படமாட்டார்; இம்மை இன்பத்தையே விரும்பும் உன்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்' என்று கண்டிப் பாகச் சொன்னபோது, 'நீராவது என்னைப் பாடி, எனக்கு இளமை வரச் செய்யவேண்டும்' என்று கணிகண்ணனையே அரசன் நிர்ப்பந்தித்தா னல்லவா? அதற்குக் கணிகண்ணன், தானும் குருநாதரைப்போல், நாக்கொண்டு மானிடம் பாடுவ தில்லையென்று மறுத்துவிட்டான் என்ற கதைக்கு ஓர் அகச் சான்றுபோல் அமைந்திருக்கிறது,

நாக்கொண்டு மானிடம்
பாடேன்

என்று 'நான்முகன் திருவந்தாதி' யில் வரும் திருமழிசையார் வாக்கு.

தமிழால் கடவுளை அழைத்துத் தாம் சொன்னவண்ணம் செய்வித்தார் என்ற ரஸமான கதை, சிவநேசச் செல்வரையும் வசீகரித்திருக்கிற தல்லவா? இதற்கும் ஓர் அகச்சான்று,

> நற்றமிழை வித்திஎன் உள்ளத்தை நீவிளைத்தாய்,
> கற்றமொழி யாகிக் கலந்து

என்று இவர் இறைவனை நோக்கிக் கூறுவதிலேயே கிடப்பதாகக் கருதுவோரும் உண்டு.

இப்படியெல்லாம் குருபரம்பரைக் கதைகளில் வழங்கும் திருமழிசைப்பிரான் வைபவத்திற்கு இவர் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்ற இரண்டு பிரபந்தங்களிலிருந்தும் அகச்சான்றுகள் காட்டிக்கொண்டே போகலாம். 'இத்தகைய அகச்சான்றுகளிலிருநதே கதைகள் முளைத்துச் செழித்திருக்கக்கூடும்' என்று ஆராய்ச்சியாளர்களும் பதில் சொல்லக்கூடும் அல்லவா?

# 9

# இவர் வாழ்ந்த காலம்

பேயாழ்வாரின் சீடர் திருமழிசையாழ்வார் என்பதைக் குருபரம்பரைக் கதைகள் ஒருமுகமாக வற்புறுத்து கின்றன. எனவே, முதலாழ்வார் மூவரும் வாழ்ந்த காலத்தி லேயே திருமழிசைப்பிரானும் ஆண்டில் இளைஞராக, வாழ்ந் தவர் எனக் கருதலாம்.

**'குணபரன்'—ஓர் ஆராய்ச்சி:**

காஞ்சிமாநகரில் ஆட்சிபுரிந்த அரசன் தன் கிழத்தனத்தை நீக்கிவைக்குமாறு திருமழிசை ஆழ்வாரை நிர்ப்பந்தித்துக் கடைசி யாக இவரையும் இவர் சீடரான கணிகண்ணனையும் நகரை விட்டு வெளியேறச் செய்தான் என்று குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன அல்லவா? அந்த அரசன் பல்லவ வமிசத்தைச் சேர்ந்தவன் என்றும் குருபரம்பரை வர லாறுகள் கூறுகின்றன. இந்தச் செய்திக்குச் சரித்திர ஆதாரம் இருக்க வேண்டும் என்று கருதுவது தவறாகாது.

அந்தப் பல்லவ அரசன் யார்? திருமழிசையாழ்வார், தாம் பாடிய நான்காம் திருவந்தாதியில் - நான்முகன் திருவந்தாதி என்றும் கூறுவ துண்டு - ஒரு பாசுரத்தில், 'பல் உயிர்க்கும்

ஆக்கை கொடுத்தளித்த கோனே! குணப்பரனே!' என்று இறைவனை அழைப்பது காணலாம். 'குணபரன்' என்ற ஒரு பெயர், பல்லவ அரசனுகிய முதல் மகேந்திர வர்மனுக்கு உரியது என்பதைச் சரித்திர மாணவர்கள் அறிவர்.

இந்தப் பல்லவன் பெயரால் இறைவனைத் திருமழிசையார் கூறுவதற்குக் காரணம் என்ன? இதனால் இந்தப் பல்லவ அரசனும் இந்த ஆழ்வாரும் ஒரு காலத்தவர் என்று ஊகிப்பவரும் உண்டு.

இறைவனுக்கு எத்தனையோ திருப்பெயர்கள் இருக்கும் போது, வேறு எந்த ஆழ்வாரும் எடுத்து ஆளாத குணபரன் என்ற இப்பெயரால் திருமழிசையார் இறைவனை விளிப்பதில் ஏதாவது உட்பொருள் இருக்கக் கூடுமா? 'இருக்க வேண்டும்' என்பது ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. மு. இராகவையங்காரின் கருத்து.

அரசர்களைத் தெய்வ அம்சம் உடையவராகக் கருதுவது உண்டல்லவா? பல்லவப் பேரரசர்களை அக்காலத்து மக்கள் தெய்வ அம்சம் பெற்றவர்களாக மதித்துப் போற்றுவா ராயினர். கடவுளைக் குறிக்கும் புருஷோத்தமன், சத்திய பராக் கிரமன் முதலான பெயர்களைப் பல்லவப் பேரரசர்களுக்கும் வழங்கி வந்தனர். இந்த வழக்கம், பரம பாகவதரான திருமழிசையாருக்கு வெறுப்பை விளைவித்திருக்க வேண்டும் என்பது திரு. மு. இராகவையங்காரின் ஊகம்.

'நாக்கொண்டு மானிடம் பாடேன்' என்பது திருமழிசைப் பிரானின் திருவாக்கு அல்லவா? 'குணபரன்' என்ற பெயர் அநந்த கல்யாண குணங்களைப் பரிபூரணமாக உடைய இறைவனுக்கே உரியதாகும் என்றும், எந்த மானிட அரசனுக்கும் உரியதாகாது என்றும் உறுதிகொண் டிருந்த ஆழ்வார், 'குணப் பரனே!' என்று இறைவனை விளிப்பதில், தம் திருவுள்ளத்தைக் குறிப்பாக வெளியிடுகிறுர் என்பர் திரு. மு. இராகவையங்கார்.

இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டால், 'அப்பெயர் கொண்ட மகேந்திரவர்மனது ஆட்சிக்காலத்தை (618—642) திருமழிசையாரது வாழ்நாளின் பிற்பகுதியாகக் கொள்ளலாம்' என்பது மேலே சொன்ன ஆராய்ச்சி அறிஞரின் துணிவாகும். இந்த அபிப்பிராயம், ஆராய்ச்சி அறிஞர்களால் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப்படவில்லை.

**சமய வாதங்களும் சமரசமும்:**

மகேந்திரவர்மனுடைய பிரசித்தமான ஒரு பெயரால் திருமாலைத் திருமழிசையார் குறிப்பிடுவதிலிருந்து, இந்த ஆழ்வார் மகேந்திரவர்மனது ஆட்சிக் காலத்திற்குப் பிற்பட்டவர் எனறும் ஊகிக்கக் கூடும் அல்லவா? இந்த ஆழ்வார் காலத்தில் சமய வாதங்கள் பெருகி யிருந்ததும் இவர் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் என்பதற்கே சான்ருகக் கூடும்.

முதலாழ்வார்களின் பாடல்களில் சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சி மேலோங்கி யிருப்பதையும், திருமழிசையார் பாடல்களில் சைவ வைஷ்ணவக் கருத்து வேற்றுமைகள் வற்புறுத்தப் படுவதையும் கவனித்து, ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியந்தான். அரியும் அரனும் ஒரே கடவுளின் உருவ வேறுபாட்டினர் என்பது முதலாழ்வார் மூவரும் கருத்தொருமித்து வெளியிடும் கொள்கை எனக் கருதுவது தவருகாது. திருமழிசைப்பிரான் வாக்கிலோ மறந்தும் புறந்தொழாத வீர வைஷ்ணவக் கொள்கை, இடம் பெறுவதைக் காணலாம்.

பொய்கையாழ்வார் வாக்கில், சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சி அதிக அளவில் காணப்படுகிறது என்பதை முதல் திருவந்தாதியைக் கற்றுணர்ந்தவர் நன்கு அறிவர். திருமழிசையாரின் குருவான பேயாழ்வாரும் திருமலைமேல் இறைவனுக்குத் திருமால், சிவன் என்ற இரண்டு உருவங்களும் ஒன்ருக இசைந்திருப்பதாகப் பாடுகிருர். திருமழிசைப்பிராளுே

முதலாழ்வார்களின் போக்கிற்கு முற்றும் வேறுபட்டதுபோல் திருமாலின் பரத்வ நிலையை வற்புறுத்துகிறார்.

திருமழிசைப்பிரான் பல சமயங்களிலும் புகுந்து பார்த்து, இறுதியில் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்துகொண்டார் என்பதற்கு இவர் பிரபந்தங்களில் ஆதாரம் காணலாம். பொதுவாகச் சமயவாதங்களும், சிறப்பாகச் சைவ வைஷ்ணவ வாதங்களும் இவர் காலத்தில் அதிகம் என்பது வெளிப்படை. 'இவ்வாறு சமய விரோதங்கள் செறிந்து நிகழ்ந்தது, குணபரனாகிய மகேந்திர வாமனது ஆட்சிக்காலமேயாம். இப் பல்லவனே முதலில் சைன சமயத்தவனாக இருந்து, திருநாவுக்கரசு நாயனாரால் சைவ மதத்திற்குத் திரும்பப் பெற்றவன் என்பர்' —திரு. மு. இராகவையங்கார்—ஆழ்வார்கள் காலநிலை.

திரு. இராகவையங்காரே, 'இக்குணபரன் சைவப்பற்று உடையவனாயினும், ஏனைய வைதிக மதங்களில் வெறுப்புக் காட்டி வந்தவன் அல்லன்' என்றும் கூறியுள்ளார். சோழசிம்ம புரத்தை அடுத்திருக்கும் மகேந்திரவாடியில் 'மகேந்திர விஷ்ணுக் கிரகம்' என்ற விஷ்ணு கோயில் ஒன்றை, மகேந்திர வர்மன் கட்டி யிருப்பதையும் இந்த ஆராய்ச்சி அறிஞர் சுட்டிக் காட்டுகிறார். மாமல்லபுரத்திலுள்ள ஆதிவராகர் சந்நிதியில் மகேந்திரவர்மனது உருவச்சிலை அமைந்திருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார். மகேந்திரவர்மனின் தந்தையான சிம்ம விஷ்ணுவும் மகனான நரசிம்மவர்மனும் பரம வைஷ்ணவர்கள் என்பதையும் திரு. இராகவையங்கார் எடுத்துக் காட்டுகிறார்.

பொதுவாகப் பல்லவர்கள் வைஷ்ணவத்தையும் சைவத்தையும் ஒருங்கே அபிமானித்து வளர்த்தனர் என்பது உண்மை. மகேந்திரவர்மனும் இதற்கு விலக்காக இல்லை என்பதும் உறுதி. இந்த நிலையில், சைவ வைஷ்ணவ வேற்றுமைகளும் வாதங்களும் மகேந்திரவர்மனின் காலத்தில் அதிகமாக இருந்தன என்று கருதி, அதே காலத்தில் திருமழிசையார் வாழ்ந்திருக்க

வேண்டும் என்று முடிவு கட்டுவதற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறதா என்பது குறித்து, மேலும் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டியதுதான்.

திருஞான சம்பந்தர் பாடல்களிலும் திருநாவுக்கரசர் பாடலகளிலும் சைவ வைஷ்ணவ வாதங்களுக்கும் வேற்றுமைகளுக்கும் சான்றுகள் கிடைக்கின்றன. வைஷ்ணவ சமயம் வளர்ச்சி பெற்று வந்ததற்கும், அப்பர் வாக்கிலும் சம்பந்தர் வாக்கிலும் ஆதாரம் காணலாம்.

> தாயினும் நல்ல சங்கரனுக்(கு) அன்பர்
> ஆய உள்ளத்(து) அமு(து)அருந் தப்பெருர்
> பேயர், பேய்முலை உண்(டு)உயிர் போக்கிய
> மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே !

என்பதுபோன்ற தேவாரப் பாடல்கள் உற்று நோக்கத் தக்கன.

அப்பர் பாசுரங்களிலும் சம்பந்தர் பாசுரங்களிலும், 'ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே' என்ற கொள்கை வெளியிடப் பெறுவதுபோல், திருமழிசையார் வாக்கில் திருமாலே மேலான தெய்வம் என்ற கொள்கை வெளியிடப் பெறுகின்றது. தமிழர்களுக்குச் சைவத்தில் அதிகமான பற்று ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் திருஞானசம்பந்தரும் அப்பரும், தங்கள் சமயக் கொள்கையை வற்புறுத்தி வெளியிடுவது போல், திருமழிசையாரும் தமது வைஷ்ணவக் கொள்கையை வெளியிட்டிருக்கிருர் என்று சொல்லலாம். திருஞான சம்பந்தருக்கும் அப்பருக்கும் காலத்தால் பிற்பட்டவர் திருமழிசையார் என்பது என் கருத்து.

**கால ஆராய்ச்சி:**

மகேந்திரவர்ம பல்லவன் ஆட்சி செலுத்திய ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தைத் திருமழிசைப் பிரானது வாழ்நாளின்

பிற்பகுதியென்று ஆராய்ச்சி அறிஞர் திரு. மு. இராகவையங்கார் கூறி யிருப்பதை ஒப்புக்கொள்வதில் சில இடர்ப்பாடுகள் உண்டு. இந்த ஆழ்வாரின் தமிழ் நடையும், இவரைப் பிற்பட்ட காலத்தவராகவே காட்டுகிறது.

'முதலாழ்வார் மூவரும் 5-6-ஆம் நூற்றுண்டுகளின் பின் முன் பகுதிகளில் எழுந்தருளியிருந்தவர்கள்' என்று இந்த ஆராய்ச்சி அறிஞர் கூறி யிருப்பதையும் ஒப்புக்கொள்ள இயலவில்லை. பொய்கையாழ்வாரும், களவழி பாடிய பொய்கையாரும் ஒருவரே என்ற இவர் கொள்கையும் இன்று ஒப்புக் கொள்ளப்படுவதில்லை.

முக்காலமும் உணர்ந்த முனிவர்களாகப் பொய்கையார், பூதத்தார், குடமூக்கிற் பகவர், காரைக்கால் அம்மையார், திருமூலர் ஆகிய ஐவரையும் யாப்பருங்கல விருத்தியுடையார் குறிப்பிடுவதையும் தமது 'ஆழ்வார்கள் கால நிலையில்' திரு. இராகவையங்கார் எடுத்துக் காட்டுகிறுர். இந்த ஐவருள் குடமூக்கிற் பகவர் திருமழிசையாரே ஆவர். குடமூக்கில் என்பது கும்பகோணம். திருமழிசையாழ்வார், தம் வாழ்நாளின் பிற்பகுதியைக் கும்பகோணத்தில் (திருக்குடந்தையில்) கழித்தார் என்பது பிரசித்தமல்லவா?

'குடமூக்கிற் பகவர் இயற்றிய வாசுதேவனுர் சிந்தம் என்ற நூல் பேர்பெற்றது' எனறு யாப்பருங்கல விருத்தியுடையார் கூறியுள்ளார். 'வாசுதேவனுர் சிந்தம்' என்ருல் வாசுதேவனுகிய திருமாலைக் குறித்துப் பாடப் பெற்ற சிந்த நூல் என்று பொருள். இது திருச்சந்த விருத்தந்தான் என்றும், 'சந்தம்' என்பதே 'சிந்தம்' எனறு திரிந்திருக்க வேண்டும் என்றும் திரு. மு. இராகவையங்கார் கூறுவது பொருத்தமே.

யாப்பருங்கல விருத்தியுடையார் குறிப்பிடும் ஐவருள் பொய்கையாரும் பூதத்தாரும் குடமூக்கிற் பகவர் என்ற திருமழிசையாரும் திருமாலின் அடியார்கள். காரைக்கால் அம்மை

யாரும் திருமூலரும் சிவனடியார்கள். இந்த ஐவருமே ஏறக் குறைய ஒரே காலத்தவராக இருக்கக் கூடும். இது குறித்த ஆராய்ச்சியை இங்கே விரிவாக நடத்துவதற்கில்லை.

யாப்பருங்கல விருத்தி 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியது என்பர். அக்காலத்தில் களவழி பாடிய பொய் கையாரும் ஆழ்வாராகிய பொய்கையாரும் ஒருவரே என்ற கருத்து நிலவியது. ஆனால் களவழி ஆசிரியரும் முதல் திருவந் தாதி ஆசிரியரும் ஒருவர் அல்லர் என்பதற்கு, நடை வேற்று மையே பலருக்கும் போதுமான சான்றாகும். இது குறித்து நாவலர் மு. வேங்கடசாமி நாட்டார் விரிவாக ஆராய்ந்து, பொய்கையாழ்வாருக்கும் களவழிக்கும் தொடர்பில்லையென்று முடிவு கட்டி யிருக்கிறார். களவழி பாடிய பொய்கையார் பொய்கையாழ்வாருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பது திண்ணம்.

'களவழி நாற்பது என்ற நூலை இயற்றிய பொய்கையார் என்பார், கடைச் சங்கப் புலவருள் ஒருவர் என்பது புற நானூற்றிலுள்ள 48,49-ஆம் பாடல்களாலும், நற்றிணையி லுள்ள 18-ஆம் பாடலாலும் நன்கு அறியப்படுகின்றது. அன்றியும் இப்புலவரால் சிறை மீட்கப்பெற்ற சேரன் கணைக் கால் இரும்பொறையின் பாடல் ஒன்று, புற நானூற்றில் காணப் படுவதும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துவதாகும். எனவே சோழன் செங்கணான்மீது இப்புலவர் பெருமான் பாடிய கள வழி நாற்பதும் கடைச்சங்க காலத்து நூல் என்பது தேற்றம், என்பர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறை விரிவுரையாளர் திரு. டி. வி. சதாசிவ பண்டாரத்தார்.

இந்த ஆராய்ச்சி அறிஞர், சோழன் செங்கணானுக்கு நல்லடி யென்ற புதல்வன் ஒருவன் இருந்ததாக அன்பிற் செப் பேடுகள் அறிவிப்பதாகவும், நல்லடியைக் குறிக்கும் பாடல் ஒன்று அகநானூற்றில் காணப்படுவதாகவும் தெரிவிக்கிறார்.

'ஆகவே, நல்லடியின் தந்தையாகிய சோழன் செங்கணான் என்பான் கடைச்சங்க காலத்தில் இருந்தவன் என்பது நன்கு துணியப்படும்' என்பர்

கடைச்சங்க காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரையுள்ள காலம் என்ற கொள்கை, பலருக்கும் உடன்பாடாக இருந்தது. ஆராய்ச்சி அறிஞர் திரு. சதாசிவபண்டாரத்தார், கடைச்சங்கம் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் முதற் பகுதியில் முடிவு எய்தியதென்பர். திரு. மு. இராகவையங்காரோ மூன்றும் சங்கத்துச் சான்றோர் வாழ்ந்த காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டே என்று முடிவு கட்டியுள்ளார்.

இந்தக் கொள்கைக்கு இணங்கக் களவழி பாடிய பொய்கையார் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக வேண்டும். ஆழ்வார்களின் தமிழ்நடைப் போக்கும், சொற்பொருள் வழக்குகளும், இலக்கண அமைதிகளும் இவர்கள் கடைச்சங்க காலத்துக்குப் பிற்பட்டவர்களே என்பதை மெய்ப்பிக்கின்றன. சங்க நூற் பயிற்சியுடன், சாஸனங்களையும் பிற் காலத் தமிழ் நூல்களையும் கற்றிருப்பவர்கள் இந்த அபிப்பிராயத்தை ஒருமுகமாய் ஏற்றுக்கொள்வர்.

ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியருள் முதல்வரான நாதமுனிகள் கி. பி. 823-ல் தோன்றியவர். இது குறித்துக் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. எனவே, கடைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டதும், கி. பி. 823-க்கு முற்பட்டதுமான காலத்தில் எல்லா ஆழ்வார்களும் வாழ்ந்தனர் என்பது திண்ணம்.

மாமல்லபுரத்தில் தோன்றிய பூதத்தாழ்வார், 'மாமல்லை' யென்ற பெயரால் இவ்வூரைக் குறிப்பிடுகிறார். மாமல்லன் என்ற சிறப்புப் பெயருள்ள முதல் நரசிம்ம பல்லவன் புதுப்பித்ததால் இவ்வூர் 'மாமல்லபுரம்' என்று பெயர் பெற்றது என்று கூறுவோர், இப்புதுப் பெயரை, 'மாமல்லை' யென்று சுருக்கிப் பூதத்தாழ்வார் வழங்குவதால், மாமல்லன் கால

மாகிய கி. பி. 650—க்குப் பின்பே முதலாழ்வார்கள் வாழ்ந் திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்;

இதை மறுத்து, 'மாமல்லனுக்கும் முற்பட்டவர்கள் முதலாழ் வார்கள்' என்று திரு. மு. இராகவையங்கார் அபிப்பிராயப்படு கிறார். மாமல்லனுக்கு முன், இந்தப் பழைய துறைமுகம், 'மல்லை' என்று பெயர் பெற்றிருந்ததென்பதும், திருமழிசை யாழ்வார் மயிலையை, 'மாமயிலை' யென்றும், திருவல்லிக் கேணியை, 'மாவல்லிக்கேணி' யென்றும் கூறி யிருப்பது போலவே, மல்லையை, 'மாமல்லை' என்ற சொல்லால் பூதத்தார் சிறப்பித்துப் பேசுகிறார் என்பதும் 'மாமல்லை' மாமல்ல புரத்தின் திரிபாகத்தான் இருக்கவேண்டும் என்ற நியதியில்லை யென்பதும் இந்த ஆராய்ச்சி அறிஞரின் வாதம்.

பூதத்தாரும் காரைக்கால் அம்மையாரும் சேர்ந்து,

கறைப்பல் பெருமோட்டுக் காடு கிழவோட்(கு)
அரைத்திருந்த சாந்தைத்தொட்(டு) அப்பேய்
மறைக்க அறியாது, மற்றுத்தன் கையைக்
குறைக்குமாம் கூன்கத்தி கொண்டு

என்று ஒரு செய்யுள் பாடியதாக யாப்பருங்கல விருத்தி என்ற உரை எடுத்துக்காட்டுகிறது.

காரைக்காற் பேயாரும் பூதத்தாரும் ஒருகாலத்தவர் என்பது இந்த உரைகாரரின் கருத்து. காரைக்கால் அம்மையார் அரு ளிய அற்புதத் திருவந்தாதியையும், முதலாழ்வார்கள் இயற் றிய திருவந்தாதிகளையும் ஒப்பிட்டு, ஆராய்ந்து பார்ப்பவர்களும் இந்தக் கருத்தை ஆதரிக்கக்கூடும். காரைக்கால் அம்மை யாரைக் காரைக்காற் பேயார் என்று கூறுவதுபோல், பேயாழ் வாரை மயிலைப் பேயார் என்று கூறுவதும் உண்டு.

காரைக்கால் அம்மையார் ஆண்டுள்ள வடசொற்களும் முதலாழ்வார்களின் வடசொற்களையும் சொற்றொடர்களையும்

நினைவூட்டுகின்றன. பிற்காலத் தமிழ்ச் சொல் வழக்குகளையும் 'அற்புதத் திருவந்தாதி'யில் காண்பதுபோல் முதலாழ்வார்களின் திருவந்தாதிகளிலும் காண்கிறோம். அற்புதத் திருவந்தாதியில் சிவநெறியின் வித்தாகிய சிறந்த கொள்கைகளைக் காண்பதுபோல், ஸ்ரீ வைஷ்ணவத்தின் வித்தாகிய கொள்கைகளை, முதலாழ்வார்களின் வாக்கில் காண்கிறோம்.

வடமொழி அதிக அளவில் தமிழகத்தில் பரவி வந்த காலத்திலே காரைக்கால் அம்மையாரும் முதலாழ்வார்களும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது உறுதி, ஆனால் அந்தக் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் முற்பட்ட காலப் பகுதி என்று திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதுவதை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

திருஞான சம்பந்தர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் காரைக்கால் அம்மையார் என்பதற்குப் பெரிய புராணத்தில் ஒரு சான்று கிடைக்கிறது: அதாவது, காரைக்கால் அம்மையார் தலையால் நடந்துபோய்,வழிபட்ட திருவாலங் காட்டிலே, அடிவைத்து நடக்க அஞ்சித் திருஞான சம்பந்தர், புறத்தேயுள்ள பதி ஒன்றில் தங்கியிருந்ததாகப் பெரிய புராணம் தெரிவிக்கும் செய்திதான். சேக்கிழாரடிகள் கேள்விப் பட்டிருந்த செவி வழிச் செய்திகளில் ஒன்றாகவே இது கருதத் தக்கது. இதையே ஆதாரமாகக் கொண்டு காரைக்கால் அம்மையார் கி. பி. ஐந்து அல்லது ஆறும் நூற்றாணடில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்று முடிவு கட்டுவது சரியன்று.

முதலாழ்வார்களையும் காரைக்கால் அம்மையாரையும் கி பி. ஏழாம் நூற்றாண்டுக்கும் பிற்பட்டவர்களாகக் கொள்வதே பொருந்தும் என்பது என் கருத்து. அப்படியானால் திருமழிசையாழ்வார் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றே சொல்லலாம்.

**திருமழிசையாரும் திருமூலரும் :**

யாப்பருங்கல விருத்திகாரர், 'சாவவும் கெடவும் பாட வல்லவரும், முககாலமும் உணர்ந்தவருமாகிய இருடிகள்' என்று சுட்டிக்காட்டும் ஐந்து தமிழ் முனிவருள் குடமூக்கிற் பக வர் என்ற திருமழிசையாரைப்போல் சிவநேசச் செல்வரான திருமூலரும் இடம் பெற்றுள்ளார். திருமழிசையாரும் திருமூல ரும் ஏறக்குறைய ஒரே காலத்தவர் என்று கருதுவது தவறாகாது.

திருமூலரைச் சிவயோகிகளுள் ஒருவர் என்றும், சித்து களில் வல்ல பெருஞ்சித்தர் என்றும், மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்து, திருமந்திரப் பாடல்கள் பாடினுர் என்றும் பெரிய புராணம் தெரிவிக்கிறது. திருமழிசையாரையும் சித்தர் என்றும் யோகி என்றும் நெடுங்காலம் யோக நிஷ்டராய் எழுந் தருளி யிருந்தவர் என்றும் குரு பரம்பரைக் கதைகள் கூறு கின்றன.

கதைகளில் ஒற்றுமை காண்பதுபோல், இந்த இருவர் வாக்கிலும் கொள்கைகளிலும் ஒற்றுமை காணலாம்.

என்னை நன்ருக
இறைவன் படைத்தனன்,
தன்னை நன்ருகத்
தமிழ்ச்செய்யு மாறே

என்பது திருமூலர் திருவாக்கு. திருமழிசையாரும் 'நற்றமிழை வித்திஎன். உள்ளத்தை நீவிஜேத்தாய்! என்று பாடியிருக் கிருரல்லவா?

'அன்பே சிவம்' என்று திருமூலர் வெளியிடும் அன்பு நெறிக் கொள்கையைத் திருமழிசையாரும், 'அன்பில்அன்றி

ஆழியானை யாவர்காண வல்லரே?' என்ற வாக்கில் அருமை யாக வெளியிட்டிருக்கிறார்.

ஒன்றே குலமும்;
ஒருவனே தேவனும்

என்ற திருமூலரின் மூலப் பெருங்கொள்கையை ஒருவாறு நினைவூட்டுகிறது,

தேருங்கால் தேவன்
ஒருவனே என்றுரைப்பன்

என்ற திருமழிசையார் திருவாக்கு.

திருமூலர் வாக்கிலே வடசொற்களும் சொற்றொடர்களும் தாராளமாக வருவதுபோல் திருமழிசையார் வாக்கிலும் வருவதைக் காண்கிறோம். சிதம்பரம்,சித்தாந்தம், ஓட்டியாணம், கடுக்கன் முதலான பிற்காலச் சொல்வழக்குகளைத் திருமூல நாயனார் வாக்கில் காண்கிறோம் திருமழிசையார் வாக்கிலும் பிற்காலச் சொல்வழக்குகளை அதிகமாகக் காணலாம். இத் தகைய சொல்வழக்குகள், இருவரும் எட்டாம் நூற்றாண்டினரே என்பதை உறுதிப்படுத்துகின்றன.

'மூலன் செய்த மூவாயிரந் தமிழ்' என்று போற்றப்பெறும் திருமந்திர நூலில் விநாயகர் வணக்கம் காணப்படுகிறது. 'யானைமுகக் கடவுளின் வழிபாடு கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடையில் திருஞான சம்பந்தர் காலத்திலிருந்த சிறுத்தொண்ட நாயனாரால் நம் தமிழ்நாட்டில் முதலில் தொடங்கப்பெற்றுப் பிறகு தமிழகம் முழுதும் பரவி, யாண்டும் நிலைபெற்றது என்பது ஆராய்ச்சியால அறிந்ததோர் உண்மையாகும்' என்று தமது தமிழ் இலக்கிய வரலாற்றிலே (கி. பி. 250—கி. பி. 600) திரு. சதாசிவபண்டாரத்தார் கூறியுள்ளார். ஆராய்ச்சி அறிஞர்கள் இன்று அறிந்துகொண் டிருக்கும் ஓர் உண்மை இது என்பதில் ஐயமில்லை.

எனவே, விநாயகக் கடவுளின் வணக்கத்துடன் தொடங்கும் திருமந்திர நூல் எட்டாம் நூற்றுண்டில் தோன்றியது என்று கருதுவது பொருந்துவதே. சுந்தரமூர்த்தி சுவாமிகள், தமது திருத்தொண்டத் தொகையில் திருமூலநாயனுருக்கும் வணக்கம் செலுத்தியுள்ளார். எனவே சுந்தரமூர்த்தியின் காலமாகிய ஒன்பதாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர்கள் திருமூலரும் திருமழிசையாரும் என்று ஊகிக்கலாம்.

திருமூலநாயனுர் சற்புத்திர மார்க்கம் இன்னதென்று கூறும்போது,

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட்(டு) அன்னமும் நீசுத்தி செய்தல்மற்(று)
ஆசற்ற சற்புத் திரமார்க்கம் ஆகுமே.

என்பர்.

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில் வீழ்கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற்(று) அண்ணலை
நேசத் திருந்த நினைவறி யாரே

என்பதும் திருமூலர் வாக்கு. இந்த வாக்குடன்,

வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது

என்ற திருமழிசையார் வாக்கை ஒப்பிடலாம்.

திருமூலரின் சமரச உணர்ச்சியைத் திருமழிசையார் வாக்கிலே காண்பது அரிது. எனினும், இன்றும் நாம் போற்றத்தக்க அறவுரைகளையும் அறிவுரைகளையும் சிறந்த சமய உண்மைகளையும் பரந்த பக்தியநுபவங்களையும் திருமந்திர

நூலகத்தே காண்பதுபோல் திருமழிசையாழ்வாரின் பிரபந்தங்களிலும் காணலாம்.

திருமழிசையாழ்வார் வாழ்ந்த எட்டாம் நூற்றாண்டைத் தமிழகத்தின் ஒரு புதிய பக்தியுகம் என்று கூறலாம். இந்தப் பக்தியுகத்திலே,

வீடாக்கும் பெற்றி அறியாது மெய்வருத்திக்
கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்!—வீடாக்கும்
மெய்ப்பொருள்தான், வேத முதற்பொருள்தான்,
[விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாராய ணன்

என்று அறைகூவிப் பறைசாற்றியவர் திருமழிசையாழ்வார்.

கொடுந் தவம் புரிவதைக் கண்டித்து, 'அது உங்களை நீங்களே ஹிம்ஸித்துக்கொள்ளும் வழி' என்பதை உய்த்துணர வைத்தார். அஹிம்ஸை முறையில் அன்புநெறி நின்று, மெய்ப்பொருளான நாராயணனை வழிபடுவதே உய்யும் வழி என்றார்.

நானுன்னை அன்றி இலேன்கண்டாய் நாரணனே!
நீஎன்னை அன்றி இலை

என்று பக்தர்களுக்கெல்லாம் ஓர் உரிமைப் பெருஞ்சாஸனம் வழங்கியவர் அல்லவா?

10

# திருமழிசையாரின் பக்தியநுபவம்

இந்த ஆழ்வார் வீர வைஷ்ணவராக விளங்கிய போதிலும் இவரது பக்தி யநுபவங்கள், பல்வேறு சமயங்களிலும் சிறந்து விளங்கிய பக்தமணிகளின் சிறந்த, பரந்த, பக்தியநுபவங்களை நினைவூட்டுகின்றன.

**அறிவு, நம்பிக்கை, அநுபவம் :**

'என்னுடைய உள்ளத்திலே நின்றான், இருந்தான் இறைவன்; பாற்கடலில் அரவணையின்மேல் பொருந்திக் கிடப்பானோ? அந்தப் படுக்கையில் கண்ணுறங்குவானோ?' என்று இவர் கூறுவதும் ஒரு பக்தியநுபவமாகும். பாற்கடல், திருவரங்கம் முதலான இடங்களில் பள்ளிகொண்டிருப்பதெல்லாம அன்பர் நெஞ்சில் நிற்பதும் இருப்பதுமாகிய பலனைப் பெறுவதற்காகத்தான் என்பது குறிப்பு :

இறைவன், உயிர்க்கெல்லாம் தாயாக இருப்பதால் சொற்ப ஆசையுள்ளவர்களுடைய நெஞ்சிலும் புகுவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டே திவ்யஸ்தலங்களில் காட்சியளிக்கிறான். இந்த உண்மையை உணர்ந்துகொள்ளும் பக்தர்கள் ஞானக் குழந்தையுள்ளம் படைத்தவரா யிருப்பர்.

இறைவன் தன்னை அழிய மாறி, அன்பர்களுக்கு உதவி செய்கிறன் என்பதும், அவனுடைய அழகிய நாமம் சொல்லிப் பக்தியநுபவம் பெறுவது, யாவர்க்கும் சாத்தியமாகும் என்பதும் இவர் கருத்து, இவர் அநுபவம்

கூற்றமும் சாரா, கொடுவினையும் சாரா தீ
மாற்றமும் சாரா-வகைஅறிந்தேன்

என்ற வாக்கிலே இவரது பக்திவழி எவ்வளவு தெளிவாக எவ்வளவு வசீகரமாகப் புலனுகிறது!

'மரணத்தை வெல்லும் வகையறிந்தேன்' என்கிருர். 'கொடுவினை சாராத வகையும் அறிந்தேன்' என்கிருர். கெட்ட பெயரோ, அபவாதமோ வரக்கூடும் என்ற பயமும் இவருக்குத் துளியும் இல்லையாம்.

பகவத்கீதையில் கண்ணன் கூறியுள்ள சரமசுலோகத்தின் பொருளை, உணர்ந்து ஒழுகியது, கூற்றத்தையும் கொடுவினையையும் தீமாற்றத்தையும் வென்று, வலியழித்தற்கு உரிய பேராற்றலைத் தந்துவிட்டது என்கிருர். 'எல்லா உபாயங்களையும் பற்றறவிட்டு, என்னை ஒருவனையே சரணமாகப் பற்றுவாய்; நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன்; வருந்தாதே' என்பது மேலே சொன்ன சரமசுலோகத்தின் பொருள்.

'இந்த உரை என் உள்ளத்திலே எப்போதும் கிடக்கும்' என்று கூறுகிருர். கண்ணன் திருப்பெயருடன், அவன் உபதேசித்த சரமசுலோகத்தின் உட்பொருளையும் உள்ளத்தில் கொண்டிருப்பவர் இவர்.

ஒருசமயம், இறைவனே ரட்சகன் என்று நம்பி வாழும் தமக்கு ஒருவரும் நிகரில்லை என்ற உணர்ச்சி உண்டாகிறதாம். இந்த நிலையில், 'என் மதிக்கு விண்எல்லாம் உண்டோவிலை?'

என்று கேட்கிறார் ஆழ்வார். இறைவனது தொடர்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இந்தத் தன்னம்பிக்கை செருக்காகாது என்பது உறுதி,

இறைவனுக்கே அவனது கௌஸ்துபமணிபோல் உரியது ஆத்மா என்பதும், இந்த விலைமதிப்பற்ற ஆத்ம சம்பத்தை ஒரு பணத்துக்கும் அரைப்பணத்துக்கும் பிறருக்கு அடிமையாக்குவது பெருந் தவறு என்பதும் இவர் கொள்கை.

கல்லா தவர்இலங்கை கட்டழித்த காகுத்தன்
அல்லால் ஒருதெய்வம் யான்இலேன்

என்ற விரதம் பூண்டவர் இவர்.

**எது கல்வி :**

அரக்கர் இலங்கையில் ராவணன் முதலான அனைவரும் கல்லாதவர்களே என்பது இந்த ஆழ்வாரின் அபிப்பிராயம். 'ஐயன், வேதம் ஆயிரம் வல்லோன், அறிவாளன்' என்று சொல்லப்படும் ராவணனும் கல்லாதவனே என்பதும் இவர் கருத்து என்றால், கல்வியைப்பற்றிய இவர் கொள்கை ஆராய்தற்கு உரியதல்லவா?

கல்லாதவர் நிறைந்த இலங்கையில், விபீஷணன் ஒருவனே கற்றவன் என்பதும், அந்த ஒருவனையும் விரட்டிவிட்டு, 'கல்லாதவர் இலங்கை' என்ற சொற்றொடரின் பொருளை நிறைத்துக்கொண்டார்கள் அரக்கர்கள் என்பதும் இந்த வாக்கின் உட்பொருள். பக்தியில்லாத கல்வி, கல்வியாகாது என்பது தேர்ந்த பொருள்.

இறைவன், உலகங்களுக் கெல்லாம் அந்தர்யாமியாக நின்று, படர்கொடியைத் தாங்கி நிற்கும் கொழுகொம்புபோல் இருக்கிறான் என்பதை நன்குணர்ந்து, ஒழுகச் செய்வதே கல்வி என்பர்.

நிற்கின்ற(து) எல்லாம் நெடுமால்என்(று) ஓராதார்
கற்கின்ற(து) எல்லாம் கடை

என்பது இந்த ஆழ்வாரது பக்தியநுபவத்திலிருந்து முளைத்தெழுந்த மகாவாக்கியங்களில் ஒன்று.

இத்தகைய கல்வியுடன் இறைவன் திருப்பெயரை உச்சரித்தால் அவன் அரைகுலையத் தலைகுலைய அடியார் இருக்கும் இடத்திற்கு ஓடி வருகிறானும். அப்படி வந்து, நெஞ்சிலே அறியாமை இருளை நீக்கி, நித்தியவாசம் செய்கிறானும். எப்படியாவது இறைவனிடம் அன்பை உண்டாக்கிக்கொள்ள உதவுவதுதான் உண்மையான கல்வி என்பது குறிப்பு.

'முதலில் என்னுடைய அறியாமை இருளைப் போக்கிப் பிறகு பிறருடைய அறியாமை இருளையும் போக்குவதற்காகவே இவ்வளவு உகப்போடு என்னுடைய நெஞ்சில் எழுந்தருளியிருக்கிறான் இறைவன்' என்று பொருள்பட இவர் பேசுகிறார். தம்மைக்கொண்டு பிறருடைய அறியாமையைப் போககியதையும் இறைவன் தமக்குச் செய்த உபகாரமாகவே மதிக்கிறார். இப்படி உபகரிப்பதால், இறைவனை 'எம்பிரான்' என்று குறிப்பிடுகிறார்.

அமுத அநுபவம் :

'உலகெல்லாம் ஒரு தட்டும், என்னை ஒரு தட்டுமாகக் கொண்டு என் நெஞ்சிலே பேரன்புடன் எழுந்தருளியிருக்கிறான் இறைவன்' என்று இவர் குறிப்பிடுவதும் பக்தியநுபவந்தான்.

இவரது பக்தியநுபவம் அன்பு மயமானது; இன்ப மயமானது; அமுதம்போல் இனிமையானது:

அன்பாவாய்; ஆரமுதம் ஆவாய்; அடியேனுக்(கு)
இன்பாவாய்; எல்லாமும் நீஆவாய்!

என்ன அதிசய அநுபவம் பாருங்கள்!

தேவர்களுக்குக் கிடைத்த அமுதம் அவர்களுக்குக் கிடைத்த 'உப்புச் சாறு'தானும். இவருக்குக் கிடைத்திருப்பதோ 'பிரம்மானந்தம்' என்ற ஆரமுதம்!

'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்' என்பதுபோன்ற பக்தியநுபவத்தைத் தான், 'எல்லாமும் நீயாவாய்' என்று குறிப்பிடுகிறார். 'தேனும் பாலும் அமுதுமாகிய திருமால்' என்ற திருமங்கை மன்னனுடைய அநுபவம் இவருக்கும் கிடைத்திருக்கிறது.

இந்தப் பெருமானைப் 'பொன்பாவை கேள்வா!' என்று அழைக்கிறார். 'பொன்பாவை' –திருமகள். இவளுடைய சந்நிதியில் இறைவன் தமக்கு அருளினன் என்பதும் இவரது அநுபவம். அமுதத்தின் சாரமெல்லாம் ஒரு வடிவம் எடுத்தாற் போல் இருக்கிறாளாம் திருமாமகள். இவளுடைய சேர்த்தியழகு தான் இறைவனையும் திருமால் ஆக்கி ஆராஅமுது ஆக்குகிறதாம்.

'பிரமசாரி நாராயண'னை அல்ல இவர் வழிபடுவது 'தென் பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்—பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி' என்று கூறி, அந்தப் பெரும் பித்தனை வழிபட்டு உய்ந்தார் மணிவாசகர். பொன்பாவையை உகந்து, அவளுக்கு இன்பமாக இருப்பவன் தமக்கும் இன்பம் அளிக்கிறான் என்கிறார். 'நமக்கும், பூவின்மிசை நங்கைக்கும், இன்பன்' என்று நம்மாழ்வார் போற்றிய நம்பி இவருக்கும் இன்பமாகிறான்.

இறைவன் இன்ப அன்புருவன்; அன்பர்களுக்குத் தாழ நின்று பரிமாறுகிறான் என்பது இவர் கொள்கையும் அநுபவமும் ஆகும். 'நமக்கு ஆளாக வருகிறவன் யாரேனும் கிடைக்கக் கூடுமோ?' எனறு தேடித் திரிந்துகொண் டிருக்கிறானும். பகவானை நோக்கி, 'நானே உன்னை விரும்புவதை விட்டொழிவதே இல்லை' என்கிறார் திருமழிசைப் பிரான்.

இறைவன் திருவடிகளையே பெறவேண்டுமென்று ஆசைப் பட்டுத் திரியும் இவர் உள்ளத்திலே இறைவன் நிலைநின்று, 'நீரும் உம் மனமும் மறந்தாலும் நான் விடேன்!' என்கிறான்.

**யோக விநோதர் :**

'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக் கினேன் போது' என்பது இந்த ஆழ்வார் மேற்கொண்ட யோகவித்தையின் ஸாரம் அல்லவா? உள்ளத்தால் அநுஸந்தித்தும் எழுதியும், பிறகு பாராயணம் செய்யவேண்டிய நூல்களை வாசித்தும், மகான்களின் அருளுரைகளைக் கேட்டும், இவர் தமக்கும் பிறர்க்கும் ஒருங்கே பிழைக்கும் வழி தேடிக் கொண்டார். 'நாம் இவ்வளவு அறிவுடையோம்!' என்னும செருக்கில்லாமல், 'அதுவும் அவனது இன்னருளே' என்று வணங்கி, வழிபட்டுப் பூசித்துப் பொழுதுபோக்கினர். இந்த மனப்பான்மை, கல்விமானைக் கல்வியோகி ஆக்கக்கூடியது தானே!

தம்மையும் திருத்திக்கொண்டார்; பிறரையும் திருத்த முயன்றார். 'இனி இங்கு இருக்கும் நாள் நல்ல போதாகப போகவேண்டும்' என்று மேலும் மேலும் அநுஸந்தித்தார், எழுதினர், வாசித்தார்; பிறரை வாசிக்கவும் செய்தார். தாம் பேயாழ்வார்போன்ற பெரியோர்களிடம் கேட்டுக் கேட்டு. அநுபவித்த உண்மைகளை, மற்றவர்களையும் கேட்கச் செய்தார். கல்விச் செருக்கு இல்லாமல் எல்லாவற்றையும் ஈச்வர ஆரா தனமாகச் செய்தார்.

கசடறக் கற்பதையும் ஒரு பொழுதுபோக்காகக் கொண்டு விளங்குவோரை, 'அருங்கலை விநோதர்' என்று குறிப்பிடு கிறோம். இறைவனது ஆராதனத்தையும் பொழுதுபோக்காகக் கொண்ட இப்பெரியாரைப் பக்திஸாரர் என்று கூறுவதுபோல் 'யோக விநோதர்' என்றும் குறிப்பிடலாம்.

இந்த யோகி, 'இறைவன் திருவடிகளில் பூக்களை இட்டு வணங்குங்கள்' என்றும் உபதேசிக்கிறார். 'பக்தியுடன் சமர்ப்பித்தால் எந்தப் பூவும் எம்பிரானுககு ஆகும்' என்பது ஸ்ரீ வைஷ்ணவ பகதர்களின் கொள்கை. 'பக்தியோடு இடுகிற எந்த இலையையும் பூவையும் நான் ஆதரத்துடன் அநுபவிக்கிறேன்' என்பது கீதாசாரியனின் வாக்கு.

'புரிவதும்புகை, பூவே' என்ற நம்மாழ்வார் அருள்வாக்கை விளக்கும்போது, பட்டர் என்ற ஆசாரியர், 'கூளத்தை இட்டுப் புகைத்தாலும் போதும்; கண்டகாரிப் பூவை இட்டாலும் ஏற்றுக் கொள்ளுவன்!' என்று கூறினார்.

அதுகேட்ட அவர் சீடரான நஞ்சீயர், 'கண்டகாரிகா புஷ்பம் தெய்வத்திற்கு இடலாகாது' என்ற ஒரு சாஸ்திர வாக்கியத்தை எடுத்துக் காட்டினார். உடனே பட்டர் சொன்னார்: "எம்பெருமானுக்கு ஆகாதது என்னும் நினைவாலே கண்டகாரிப் புஷ்பத்தை நிஷேதிக்கவில்லை பறிக்கிற ஆச்ரிதன் கையில் முள் பாயும் என்பதற்காகத் தவிர்த்தது காணும்!'

இறைஞ்சுவது, மனத்தால் இறைவனை ஆராதிப்பதாகும்; ஏத்துவது, வாயால் ஆராதிப்பதாகும். எனவே மலர் இட்டு, இறைஞ்சி, ஏத்துவது மன மெய் மொழிகளால் வழிபாடு செய்வதாகும் என்பது திருமழிசையார் திருவுள்ளம்.

அன்பனாகிய இறைவன் அழகே வடிவெடுத்ததுபோல் இருக்கிறானல்லவா? அவனது திருப்பெயரும் செவிக்கு இன்பமாகும் என்றும், இத்தகைய இறைவன், கவிதைக்கு நிறைந்த பொருள் என்றும் கூறுவர். இவனை,

சேயன், அணியன்,
சிறியன், மிகப்பெரியன்

என்றும் அநுபவித்துப் பேசுவர்.

**இவர் அந்தாதியின் சரமசுலோகம்:**

'இல்லறம் பெரிதா? துறவறம் பெரிதா?' என்று நீண்ட காலமாக விவகரித்து வருகிறார்கள் அல்லவா? வேறு உபாயங்களையும், 'நல்லறம்' என்று சுட்டிக்காட்டுவது உண்டு. வேதத்தில் சொல்லப்படுகிற கருமங்களையும், 'நற்றவம்' என்று காட்டுகிறார்கள். இந்த விவகாரக் குழப்பத்தை இந்த ஆழ்வாரின் பக்தியநுபவம் எப்படித் தெளிவிக்கிறது என்று பார்க்கலாம்.

திருமழிசையார் துறவியாகத்தானே காலங்கழித்தார் என்று சொல்லக்கூடும். எனினும், இவர் துறவறந்தான் நல்லறம் என்று சொல்லவில்லை.

> இல்லறம், இல்லேல் துறவறம், இல் என்னும்
> சொல்,அறம் அல்லனவும், சொல்அல்ல;—நல்லறம்
> ஆவனவும், நால்வேத மாத்தவமும் நாரணனே
> ஆவ(து); ஈது அன்றென்பார் ஆர்?

என்பது இவர் வாக்கு.

இந்த வெண்பாவை வாசித்ததும் பொருள் அவ்வளவு தெளிவாகப் புலப்படவில்லையே என்று வாசகர்களுக்குத் தோன்றக்கூடும். எனினும் வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளையைத் துணையாகக் கொண்டு, கூர்ந்து நோக்கித் திருமழிசையாரின் உள்ளத்தைக் காண முயல்வது நலமாகும்.

'ஈது அன்று என்பார் ஆர்?' என்ற ஓர் இறுதிக் கேள்வியுடன் இவர் வற்புறுத்திக் கூறும் கொள்கைதான் என்ன? 'நல்லறம் ஆவனவும், நால்வேத மாத்தவமும், நாரணனே ஆவது' என்ற பகுதியை முதலில் விளக்கிக்கொள்வோம்.

நல்லறங்கள் ஆவனவும், நான்கு வேதங்களில் சொல்லப்படுகிற பெருந்தவ ரூபமான கர்மங்களும் நாராயணனுடைய

அருளாலேதான் பலன் அளிப்பனவாகும் என்று சொல்லி, 'இந்த உண்மையை, "அப்படி யன்று" என்று மறுப்பவர் உண்டோ?' என்று கேட்பதே இந்த வெண்பாவின் பிற் பகுதிக்கு உரிய நேர்மையான பொருள். இனி, இவ் வெண்பா வின் முற்பகுதிக்குச் செல்வோம்.

சிலர் இல்லறமே புகல் (இல்) என்கிருர்களாம். வேறு சிலர் துறவறமே புகல் (இல்) என்கிருர்களாம். இந்த இரு வகையினர் சொற்களும் சொல் அல்ல—அதாவது, பிரமாணம் அல்ல என்கிருர்.

'அறம் அல்லனவும் சொல் அல்ல' என்பதும் கவனிக்கத் தக்கது. மற்ற உபாயங்கள் புகல் என்று சொல்வதையும் ஆழ்வார் சொல் அல்லது பிரமாணம் என்று ஒப்புக்கொள்ள வில்லை. வேதங்களில் விதித்திருக்கும் வேள்வி முதலான கர்மங்களையும் இவர் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளவில்லை.

இறையருள் இல்லாவிட்டால் எந்த உபாயமும் பலன் அளிப்பதில்லை. ஏன், பக்தியோகமும் திவ்ய தேச வாழ்வும் நாம ஸங்கீர்த்தனமுங்கூட, இறையருள் இல்லாவிட்டால் பயன் படுவன அல்ல. ஆகையால் நாராயணனே உபாயமாவான். 'இறைவனே பலனைத் தரும் உபாயமாகும்போது, வேறு உபா யங்களும் வேண்டுமோ?' என்பது இந்த ஆழ்வார் கண்ட வேதாந்த விழுப்பொருள்.

இந்தப் பாட்டு, இந்த நான்காம் திருவந்தாதியில் கீதைக்குச் சரமசுலோகமபோல் அமைந்திருக்கிறது என்பர். இந்த ஆழ் வாரின் இந்த 'மெய்ம்மைப் பெருவார்த்தை' இவரது பக்தியநுப வத்தின் விளைவு.

இந்த இறைவன் தமக்குக் 'கரு இருந்த நாள் முதலாக் காப்பு' என்று கூறி, இறையருளைப் போற்றுகிருர். தம்முடைய காதலினும் முற்பட்டதும் பெரிதும் ஆவது, இறைவன் காதல்

என்பதைத்தான் இப்படிக் கூறித் தெளிவுபடுத்துகிருர். தாம் கர்ப்ப வாசம் செய்த போதிலிருந்து, தம்மைக் கடாட்சித்து, சமயம் பார்த்துத் தொண்டனைக்கிக் காப்பாற்றியது இறையருள் தானே! இறைவன் காதல்தானே!

இத்தகைய பக்தியநுபவத்தைப் பொய்கையாரும் பூதத்தாரும் வெளியிட்டிருக்கிருர்கள்.

கருஅரங்கத் துள்கிடந்து
கைதொழுதேன் கண்டேன்

என்பர் பொய்கையார்.

கருக்கோட்டி யுள்கிடந்து
கைதொழுதேன் கண்டேன்

என்பர் பூதத்தாழ்வார்.

இந்த நிலையில் திருமழிசையார் பாடி முடிக்கிருா தமது நான்காம் திருவந்தாதியை:

*இனிஅறிந்தேன் ஈசற்கும நான்முகற்கும் தெய்வம;*
*இனிஅறிந்தேன் எம்பெருமான்! உன்னை–இனிஅறிந்தேன்*
*காரணன்நீ; கற்றவைநீ கற்பவைநீ, நற்கிரிசை*
*நாரணன்நீ, நன்கறிந்தேன் நான்.*

'சாஸ்திர மூலமாக அறிந்த அறிவு அறிவு அல்ல; நேராகவே இப்போது நன்கு அறியப்பெற்றேன்' என்பதைத்தான், 'நன்கு அறிந்தேன் நான்' என்று சொல்லி வற்புறுத்தியுள்ளார்.

## திருச்சந்த விருத்தத்திலே:

திருமழிசைப் பிரானின் பக்தி யநுபவங்களை இதுவரை நாம் நான்முகன் திருவந்தாதி மூலமாக ஒருவாறு நோக்கி வந்திருக்கிரேம். இனி இவரது மற்றப் பிரபந்தமான திருச்சந்த விருத்

தத்தின் வாயிலாகவும் இவரது அநுபவங்களைக் கொஞ்சம் அறிந்துகொள்ள முயல்வோம்.

'சொல்லினுல் சொல்லப்படாது தோன்றுகின்ற ஜோதியை' ஓசை நிறைந்த கம்பீரமான சொற்களால் சொல்லும் முயற்சி இந்தப் பிரபந்தம் என்பர்.

தன்னுளே திரைத்தெழும்
 தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந்(து)
 அடங்குகின்ற தன்மைபோல்,
நின்னுளே பிறந்திறந்து
 நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற
 நீர்மைநின்கண் நின்றதே

என்ற பாட்டைப் பாடிப் பாருங்கள்.

திருவரங்கத்திலே மூன்று தண்டத்தையுடைய துறவிகளும், பகவத் விஷயம் ஒன்றையே பற்றி நின்ற இருதயத்தையுடைய ஏகாந்திகளும் இவர் காலத்தில் அதிகமாக வாழ்ந்து வந்தனர் என்றும் இந்தப் பிரபந்தம் தெரிவிக்கிறது. திருமாலுக்கே அற்றுத் தீர்ந்த இந்தப் பக்தர்கள் தமிழகம் எங்கும் திரிந்து, வைணவ சமயத்தைப் பரப்பிவந்தனர் எனக் கருதலாம்.

தேசாந்தரங்களை விட்டுத் திருவரங்கத்தைப் புகலாகப் பற்றி நின்றவர்களையும் இந்தப் பக்தர் கூட்டத்தில் காணலாம். இவர்களுடைய தொடர்பும் திருமழிசையாரின் பக்தியைப் பெரிதும் வளர்த்திருக்க வேண்டும்.

இந்தப் பிரபந்தத்திலே திருக்குடந்தை என்ற கும்பகோணத்தைப்பற்றிய பிரஸ்தாபம் குறிப்பிடத் தக்கது. இங்கே சயனத் திருக்கோலமாக எழுந்தருளியிருக்கும் ஆராஅமுதப்

பெருமானிடம இந்த ஆழ்வாருக்குள்ள ஈடுபாடும, இஙகே இவா யோகம புரிந்ததும, இவரது பக்தி யநுபவத்தைக் கடல போலப் பெருக்கியிருக்கவேண்டும.

அற்புதன அநநதசயனன
ஆதிபூதன் மாதவன
நிற்பதும இருப்பதும்
கிடபபதுமஎன் நெஞ்சுளே !

என்ற விசேஷ அநுபவம் சிறப்பாக இவருககுக் கிடைத்தது, குடந்தையில் தானே.

அன்பு நெறிககே யோகம் துணையாகித் தொண்டு புரிந்தது இவருக்கு. 'நெஞ்சு உருகி, உளகனிந்து, எழுந்ததோர் அனபில்' இறைவனைக் கண்டவர் இவர். இந்த அநுபவமும் விசேஷமாகக் குடந்தையில் ஏற்பட்டிருக்கவேண்டும.

பாசம் விட்டுப் பக்தி என்ற பாசத்தால் இறைவனோடு கட்டுண்டவர்களுககு,

எத்திறத்தும இனபம, இஙகும்
அங்கும எங்கும் ஆகுமே!

எனறு இவர் கூறுவதும இவர் அநுபவத்தை ஒட்டியதுதான.

இவருககு விடுதலையென்பதே, பக்தியாகிற பாசத்தால மனத்தை விடுதலையில்லாது கட்டிவைக்கும் காதலின்பமே தான்!

இந்தக காதலினபததிறகு வீட்டின்பமாகிய பரமபத அநுபவமும் ஒபபாகாது எனபது குறிப்பு. 'எட்டினோடு இரண்டு எனும் கயிறு' பகதிக் கயிறுதான. எட்டும் இரண்டும சேர்ந் தால பதது; பத்து என்று பகதிக்கு ஒரு பெயர். 'பத்துடை அடியவா' எனறு பகதாகளை நமமாழ்வாரும் குறிப்பிடுவா. இந்த நிலையில் இவர்,

மறம்து றந்து வஞ்சம் மாற்றி
ஐம்பு லன்கள் ஆசையும்
துறந்து, நின்கண் ஆசை யேதொ
டர்ந்து நின்ற நாயினேன்

என்று தமமைத தாமே இறைவனுக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆயுளை அறுக்கும் வாள்களாக நாள்கள் கழிந்து போகாமல் இறைவனை ஆராதிப்பதிலேயே பொழுது போக்கி வந்த இவர், அப்பனும் அன்னையும் எம்பிரானும் எல்லாம் இறைவனே என்று வாழ்க்கை நடத்தியவர்.

முத்தனார், முகுந்தனார்
புகுந்து நம்முள் மேவினார்;
எத்தினால் இடர்ககடல்
கிடத்தி, ஏழை நெஞ்சமே!

என்று நெஞ்சை நோக்கிக் கேட்பது, சொந்த அநுபவத்தோடு பிறருக்கும் ஒரு வழிகாட்டிதான்.

**திருமழிசையாரின் அநுபவ சிகரம்:**

இந்தப் பிரபந்தத்தின் இறுதியில் மூன்று பாசுரங்கள் இவரது சிகரமான பக்தியநுபவங்களைப் பேசுகின்றன. இவர் என்ன பேசிக்கொண் டிருந்தாலும் இவரது நெஞ்சு, இறைவ னுடைய திருவடியை அணைந்துகொண் டிருக்குமாம்.

இப்படித் தமது அநுபவத்தை வெளியிடத் தொடங்குகிற வர், தம் கைகள் எந்தத் தொழில் செய்துகொண் டிருந்தாலும் இதே அநுபவந்தான் உள்ளுக்குள்ளே என்கிறார்.

ஒன்றும் பேசாமல், ஒரு தொழிலும் செய்யாமல் இறைவன் மீது ஒருமை உள்ளத்துடன் அன்பு செலுத்தும அதே நிலை, வாய் என்ன பேசிக்கொண டிருந்தாலும், கை என்ன செயது கொண்டிருந்தாலும் ஏற்படுகிறதாம்.

இந்த அநுபவம் முற்றி முதிர்ந்து, பகலில் செய்யும் செயல்களையும் நினைக்கும் நினைவுகளையும் ஊடுருவிக் கிடப்பதுடன், இராப்பொழுதில் கனவுகளையும் உறக்கத்தையுங்கூட வசீகரித்து ஆட்கொள்கிறதாம்.

`இப்படி இறைவன் திருவடிகளைத் தழுவி, அவற்றையே பூணைப் பூண்டுகொள்ளும் உள்ளம், அந்த நிலையிலிருந்து திரும்பிவிடாமல் அப்படியே நிலைத்து நிற்கிறதாம்,

சொல்லி னும்,தொ ழிற்கணும்,
தொடக் கருத அன்பினும்,
அல்லும் நண்ப கலினோ(டு)
ஆன மாலை காலையும்,
வல்லி நாள்ம லர்க்கிழத்தி
நாத! பாத போதினைப்
புல்லி உள்ளம் விள்விலாது
பூண்டு, மீண்ட தில்லையே!

'திருமாமகள் நாதனே! என்னுடைய இதயமானது உன்னுடைய திருவடித் தாமரையை எப்போதும் பரிபூர்ணமாக அணைந்துகொண்டு, மறுபடியும் போக்க முடியாதபடி அதிலேயே லயித்துக் கிடக்கிறது' என்ற இந்த வாக்கிலே இவரது பக்தியநுபவங்களின் ஒரு சிகரத்தைப் பார்க்கிறோம்.

இரண்டாவது அநுபவ சிகரம் இவருக்குத் திருவரங்கத்திலே தென்பட்டது எனலாம். நெருப்பிலே தாமரை பூத்தது போன்ற ஓர் அற்புதம் நிகழ்ந்ததுபோலப் பேசுகிறார்.

திருவரங்கத்தில் இறைவன், தன் வடிவழகையும் குண அழகையும் காட்டவே, இவருககு ஓர் ஆன்ம அநுபவம் ஏற்பட்டதாம். ஞான சொரூபி என்றும், ஆனந்த சொரூபி என்றும் ஆத்மாவை நூல்கள் குறிப்பிடுகின்றன அல்லவா? அதே ஆத்மா. இவரளவில் கொடிய வினை அல்லது பாவத்தின் பிண்ட

மாகவே முதலில் தோன்றியதாம். அவ்வளவு கடுமையாக இவர் தற்சோதனை செய்து பார்த்தார் என்பது வெளிப்படை.

காவிரி சூழ்ந்த பெரிய கோயிலில் அந்த இயற்கை அழகுடன் இறைவனது ரூப குண சௌந்தரியம் வெள்ளமிடக் கண்டதும், 'வல்வினை' என்று இவர் கருதிய ஆத்மா, திடீரென்று கொழுந்துவிடத் தொடங்கியதாம். அந்தக் கொழுந்து, 'திருவடி என்ற அழகிய சுடர் மிகக பூவிலே நிலைபெற வந்து படிந்ததாம். இந்த நிலையில் இவரது ஆத்மாவின் கொழுந்து, வாட்டமின்றி எங்கும் வியாபித்து நின்றதாம்.

அதிசயமான இந்த அநுபவத்தைப் பின்வருமாறு பாசுரமிடுகிறார் :

பொன்னிசூழ் அரங்கம்மேய
பூவைவண் ண மாய!கேள்:
என்னதாவி என்னும்வல்
வினையி னுள் கொழுந்தெழுந்(து)
உன்னபாதம் என்னநின்ற
ஒண்சுடர்க் கொழுமலர்
மன்னவந்து பூண்டு,வாட்டம்
இன்றிஎங்கும் நின்றதே!

'ஆவி வேறு, வல்வினை வேறு என்று பிரிக்க முடியாதபடி இரண்டும் ஒன்றுகிவிட்டதே!' என்று வருந்தியவருக்கு, அதே ஆத்மாவிலிருந்து, இறைவன் விஷயமான அநுராகம் என்ற கொழுந்து எழுந்து, திருவடியைப்பற்றிப் படர்ந்து, எங்கும் வாட்டமின்றி நிற்பதாகிய இந்த உணர்ச்சி ஓர் அற்புத அநுபவ மல்லவா?

மூன்றாவது அநுபவ சிகரத்தைக் காட்டுவதுடன் திருச்சந்த 'விருத்தம் என்ற இந்தப் பிரபந்தம் முற்றுப் பெறுகின்றது :

இயக்கறுத பல்பிறப்பில்
என்னைமாற்றி இன்று,வந்(து)

உயக்கொள்மேக வண்ணன்நண்ணி,
என்னில்ஆய தன்னுளே
மயக்கினான்தன் மன்னுசோதி;
ஆதலால்என் ஆவிதான்
இயக்கெலாம் அறுத்(து),அறாத
இன்பவீடு பெற்றதே!

இவரை உய்யக் கொள்ளவேணுமென்றே இறைவன் ஒரு நாள் சங்கற்பித்து விட்டதுபோல், இவரை நெருங்கி வந்தானும். இவரிடத்திற்கு வந்து சேர்ந்தவன், தன்னுடைய திவ்ய மங்கள சொருபத்தை இவருடைய இருதயத்திலே பொருந்தும்படி — பிரிக்கவொண்ணாதபடி பொருந்துமாறு—பதிய வைத்தானும்.

காரணம் இன்றியே, 'மேகவணணன்' என்ற கருணை வள்ளல், நெருங்கி நெருங்கி வந்து, தன்னுடைய நித்திய ஜோதி வடிவத்தைத் தம்முள்ளே சேர்ப்பித்தான் என்பது குறிப்பு.

இடையூறுகளெல்லாம் முற்றும் நீங்கவே, இறைவன் 'தன் மன னுசோதி'யை 'என்னில் ஆய தன்னுளே மயக்கினான்' என்பது, இவர் தமது சிகர அநுபூதியை வெளியிடுவதற்கு உபயோகிக்கும் பரிபாஷையாகும். இறைவன், 'தானே வந்து மேல் விழுந்து' விளைத்த அத்புத மல்லவா !

இந்தப் பேரநுபவத்திற்குத்தான் எத்தனை இடையூறுகள்! எப்படியெல்லாம் ஒன்றேடொன்று பிணைந்து கிடந்தன! இறையருளால் எல்லாச் சிக்கல்களும் வேரற நீங்கவே, 'என் ஆவி தான் இயகலெகலாம் அறுத்து, அறாத இனப வீடு பெற்றதே!' என்கிறார்.

இந்த இன்ப வீடு அந்தமில் பேரின்பமான கைங்கரிய ஸாமராஜ்யந்தான் என்பர். இந்த அநுபவ பூர்த்தி, திருமழிசைப் பிரானின் பக்தி அநுபவங்களுக்கெல்லாம் ஒரு பெருஞ் சிகரமாகும்.

# 11

# திருப்பாணர்

> **த**மிழகத்தின் பழங்குடிகளில் பாணர்குடியும் ஒன்றாகும்.
>
> துடியன், பாணன், பறையன், கடம்பன்என்(று)
> இந்நான்(கு) அல்லது குடியும் இல்லை

என்று புறநானூற்றுச் செய்யுள் ஒன்று, நான்கு பழங்குடிகளைக் குறிப்பிடுகிறது.

துடி அல்லது உடுக்கை முழக்கியவன் துடியன். பண் பாடியவன் பாணன். பறை என்ற ஒருவகைக் கருவியை அறைந்து, செய்தி தெரிவித்தவன் பறையன். கடம்பன் என்னும் குடிப் பெயருக்குக் காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

**பழைய சமுதாயத்தில் பாணர் நிலை :**

**பா**ண்குடியின் ஆண்மக்களை 'வயிரியர்' என்றும், 'செயிரியர்' என்றும, 'சென்னியர்' என்றும் கூறுவது உண்டு. பாணர்சாதிப் பெண், 'பாடினி', 'விறலி' என்று கூறுவதும் உண்டு. விறலபட,—அதாவது சிறப்பாக, உள்ளக் குறிப்பு உடம்பில் தோன்றுமாறு—ஆடுபவள் விறலி. ஆனால் விறலியரெல்லாம் பாண்மகளிராகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. பாணரை; மதங்கர் என்றும் குறிப்பிடுவதால், மதங்

யியர் என்று பாண்மகளிரைக் குறிப்பிடுவதும் உண்டு. பாண் மகளைப் 'பாட்டி' என்று குறிப்பிடுவதும் உண்டு: 'பாட்டி' என்றால் இசை பாடுகிறவள்.

'இன்னிசைகாரர் பாணர் என்ப' என்று கூறும் பிங்கல நிகண்டும் 'பண் பாடியவன் பாணன்' என்ற மூலப்பொருளை உறுதிப்படுத்துகிறது. பாணர்குடியில் இசைப்பாணர், யாழ்ப் பாணர் முதலான பிரிவுகள் உண்டு.

கண்டத்தால் பாடியவர் இசைப்பாணர். யாழைக் கருவி யாகக்கொண்டு இசை பாடியவர் யாழ்ப்பாணர்; இவர்கள் குழலைக்கொண்டு இசை பாடுவதும் உண்டு.

இசை பாடுவதையே பாணர்கள் தங்கள் குலத்தொழி லாகக் கருதினர். இதற்குப் 'பாணர்' என்ற பெயரே சான்று. பாணர்கள் மன்னரிடம் சென்று, இசைபாடிப் பரிசில் பெற் றனர். குறுநில மன்னர்களும் இவர்களை உவந்து ஆதரித்தனர். பாணர்களுக்கு அரசர்கள், தங்கள் உவகைக்கு அறிகுறியாகப் பொற்றாமரைப்பூ அளிப்பது உண்டு; பாடினிகளுக்கு முத்து மாலை, பொன்னரிமாலைகள், அளிப்பார்கள்.

ஒரு காலத்தில் இசைத்திறனைக் குலதனமாகப் பெற் றிருந்த பாணர்கள் ராஜசபைகளில் சிறப்பாகக் கௌரவிக்கப் பெற்றிருந்தனர் என்பதில் ஐயமில்லை. அரசர்கள், போரில் வெற்றி பெற்றதும், பாணாகள் அந்தப் போர்க்களத்திற்குப் போய், அக்களத்தை வாழ்த்திப் பாடுவார்கள். அக்காலத்து அரசர்கள் போர்த்தொழிலைக் குலத்தொழில்போலப் போற்றி வந்தார்கள் அல்லவா!

அதிகாலையில் அரசரைப் பாடித் துயிலெழுப்பும் கடமை யையும் பாணர்கள் மேற்கொண் டிருந்தனர். பின்னாளில் அரசர்க்கும் அரசாகிய ஆண்டவனைப் பக்தர்கள் பாடித் துயி லெழுப்பினார்கள் அல்லவா?

அரங்கத்தம்மா! பள்ளி
எழுந்தரு ளாயே!

என்றும்,

ஆரமுதே! பள்ளி
எழுந்தரு ளாயே!

என்றும் திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் திருப்பள்ளியெழுச்சி பாடிய பக்தர்களுக்கு முன்னோடிகள், மங்கலப் பாட்டுகள் பாடி மன்னரைத் துயிலுணர்த்திய பாணரே ஆவர்.

பாணர் பாடிய 'துயில்எழு மங்கலம்' என்ற மங்கலப் பாட்டு, பின்னாளில் தொண்டரடிப்பொடி யாழ்வாரும் மணிவாசகப் பெருமானும் கடவுளுக்கே திருப்பள்ளியெழுச்சி பாடி, நாட்டைப் பக்திநெறியில் விழித்துக்கொள்ளச் செய்வதற்கும் ஒரு தூண்டுகோல் ஆயிற்று எனக் கருதலாம்.

இசைக் கலையைத் தமிழர்கள் பெரிதும் போற்றிவந்தனர்' முத்தமிழில் இசைத் தமிழும் ஒன்றல்லவா? தொல்காப்பியத்திலே இசை பாடும் பாணர் முதலானவர்களைப்பற்றிய செய்திகளுடன், இசையைப்பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களிலும் இசைக் குறிப்புக்களைக காண்கிறோம. சிலப்பதிகாரம், இசை குறித்து விரிவாகப் பேசுகிறது தமிழகத்தை இயற்கையாகக் காடு (முல்லை), மலை (குறிஞ்சி), நாடு (மருதம்), கடற்கரை (நெய்தல்) என்று நானிலமாகப் பிரித்த தமிழர்கள், இந்த நிலப் பகுதிகளுக்கு வெவ்வேறு வகைப பண் அமைத்துக்கொண்டனர் என்பது நூல்களிலிருந்து தெரியவரும். இயற்கை வளம் குன்றிய பாலையையும் ஒரு நிலப் பகுதி யாக்கி நானிலத்தை ஐந்து நிலங்கள் ஆக்கிக்கொண்ட போது, பாலைக்கும் ஒருபண் அமைந்துவிட்டது. இதனால் பண்டைத் தமிழகம் எங்கும் இசையுணர்ச்சி நனகு பரவியிருந்தது

என்பதை ஊகிக்கலாம். இத்தகைய சமுதாயம் இசைக்கலையைக் குலதனமாகப் போற்றிய பாணர்களைப் புறக்கணித்திருக்க முடியுமா?

பாணர் குலதனமாகிய இசைக்கலை, மேன்மேலும் சிறப்புற்றுப் பல நூற்றுண்டுகளாக நம் மக்களிடையே வளர்ந்தோங்கி வந்திருக்கிறது என்பதற்குத் தமிழாராய்ச்சி, தக்க சான்றுகள் தருகின்றது. சங்க இலக்கியங்களிலுள்ள இசைக் குறிப்புகளுடன் சிலப்பதிகாரத்தில் காணப்படும் குறிப்புக்களை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால், இசைத்தமிழ், சிலப்பதிகார காலத்திலே ஒரு புது வனப்பும் வளர்ச்சியும் பெற்றிருந்தது என்பது இனிது புலனாகும்.

இசை, அரசர்களை மகிழ்வித்ததுபோல் காதலர்களையும் களிப்புறச் செய்தது; காதலர்களோடு பக்திக் காதலரையும் வெறிகொள்ளச் செய்து, ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் பண்சுமந்த பாடல்களைப் பாடச் செய்தது:

ஏழிசையாய், இசைப்
பயனாய்...

என்று பாடிய சிவநேசச் செல்வர், இறைவனே இசைவடிவமாக இருப்பதாய்க் கூறியுள்ளார்.

'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்' என்று திருவாய்மொழியைக் குறிப்பிடுவதும், இசைக்கலைக்கு ஆழ்வார்-நாயன்மார் காலத்தில் ஏற்பட்டிருந்த தனிப்பெருஞ் சிறப்பிற்கு ஒரு சான்றாகும். இறைவனே இசை பாடுவதாகவும், இசை கேட்டு உருகி, அருள் புரிவதாகவும அடியவர் கருதினரென்றால், பண்டைக் காலத்துப் பாணர்குலத் தொழில், தனக்குரிய உச்ச நிலையை அடைந்துவிட்டதென்று கருதக் கூடும் அல்லவா ?

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரைக் கோயிலில் பொற்பலகை பெற்றுக் கௌரவிக்கப்பெற்றதும், திருவாரூர்க் கோயி

யில் அப்பெருமானால் சிறப்பாகக் காட்சியளிக்கப் பெற்றதும், ஞானத்தின் திருவுருவாகிய திருஞானசம்பந்தப் பெருமானைப் பிரியாது உடனுறையும் பேறுபெற்றதும் எல்லாம் இசைப் புலமைக்குக் கிடைத்த தனிப்பெரும் பேறுகளே எனலாம்.

**பழங்குடி தாழ்ந்தது :**

இப்படியெல்லாம் பாணர்களின் பழைய உரிமைக் கலை பேரும் புகழும், சீரும் சிறப்பும் எய்தியபோதிலும், பாணர் குலம் நாளடைவில் ஒதுக்கி வைக்கப்பட்ட தாழ்குலம் ஆகிவிட் டது. சங்க காலத்தின் இறுதியிலேயே பாணர்கள், புலையர் இனத்தவராக மதிக்கப்பட்டனர் என்பதற்குக் கலித்தொகை யில் சான்று கிடைக்கிறது. இந்தக் குலத்தாழ்ச்சி, ஆழ்வார்–நாயன்மார் காலத்திலே தமிழ்மக்களால் பெரிதும் வற்புறுத்தப் பட்டது. பக்தியே திருநீலகண்ட யாழ்ப்பாணரை நாயனு ராக்கித் திருப்பாணரை ஆழ்வாராக்கியது என்பது திண்ணம்.

ஒருகாலத்தில் அரசர்களிடத்திலும் வள்ளல்களிடத்திலும் பரிசில்கள் பெற்றுச் சிறப்பான உரிமைகளும் பெற்றிருந்தவர் கள், நாளடைவில் தங்கள் சமுதாய உரிமைகளை இழந்து, தீண்டத்தகாத வகுப்பினர் ஆகிவிட்டதற்குச் சரித்திர ரீதியாகக் காரணங்கள் இருக்கவேண்டும். ஒரு பெருங் காரணம் பொரு ளாதார நிலையை ஒட்டியது என்றும் ஊகிக்கலாம்.

அரசர்கள், பாணர்களை ஆதரித்து, இசைக்கலையைப் போற்றுவதை ஒரு பெருங் கடமையாகக் கொண்டிருந்தனர் அல்லவா? அவர்கள் பாணர்களுக்குப் பெருஞ் செல்வத்தை வாரி வழங்கினர். பகைவரை வென்று, கைக்கொண்ட பொருள் களோடு யானைகளையும் தேர்களையும் பரிசிலாகக் கொடுத்து மகிழ்ந்தனர். எனினும் பாணர்குலம் பொதுவாக வறுமையி லேயே மூழ்கிக் கிடந்தது.

பாணர்கள், மீன் பிடித்து, விற்று, நெல் முதலிய பொருள் களை வாங்கிப் பிழைக்கும் வழி தேடிக்கொண்டதாகச் சங்கநூல்

கள் தெரிவிக்கின்றன. எனினும், பழுத்துச் சொரியும் மரத்தைத் தேடித் திரியும் பறவைகள்போல் இவ்வகுப்பினர் அரசர்களை யும் சிற்றரசர்களையும் பிரபுக்களையும் நாடிச் சென்று, பரிசில் பெறுவதையே பெரும்பாலும் பிழைக்கும் வழியாகக் கொண் டிருந்தனர்.

பரிசில் பெற்றுத் திரும்பும்போது பாணன், படாடோபமாக ஒரு பிரபுவோ குறுநில மன்னனோ வருவதுபோலத் தான் பட்டுடை அணிந்து, வருவான். கரிய ரோமத்தில் பொற்று ம்ரைப் பூ ஒளிர்வதையும் காண்கிறோம். பாடினியும் முத்து மாலை, பொன்னரி மாலைகள் அணிந்திருக்கிறாள். பால்நிறக் குதிரைகள் பூட்டிய தேரில் இவர்கள் வருகிறார்கள். ஆனால் பரி சில் பெறுவதற்கு முந்திய, பிந்திய, நிலை என்ன ?

பேரரசனே தன்னை, 'நீ பொற்கலத்தில்உண்பாய்' என்று உப சரித்து, உண்பித்ததாக இந்தப் பாணன் சொல்லுகிறான். இவன் சொல்வதும் உண்மைதான். அது மட்டுமா? சோழன் கரிகாற் பெருவளத்தானே பாணன் பின்னே ஏழடி நடந்து வந்து, பாண னையும் பாடினியையும் ரதத்தின்மீது ஏற்றி, அனுப்பிவைத் ததும் உண்மைதான். ஆனால் ஆடல்பாடல்களைச் சோழன் அநுபவித்துப் பரிசில் அளிக்கும்போது, இப்பாணன் அழுக் கேறிய கந்தைத் துணியைத்தான் தைத்துக் கட்டிக்கொண் டிருந்தான்.

இப்போது கிடைத்திருக்கும் இந்தப் பெருஞ் செல்வத்தைத் தான் இந்தப் பாணன் தனக்கென்றும் தன் குடும்பத்திற்கென் றும் எவ்வளவு காலம் வைத்துக் காப்பாற்றப்போகிறான்? மறு படியும் வறுமையில் வீழ்ந்து, தத்தளித்து, 'பழுத்த மரம் இன்னும வேறு எங்கே இருக்கிறது? எங்கே, எங்கே?' என்று தேடித் தவிக்கத்தான் போகிறான்.

இசைப்புலமை காட்டிப் பரிசில் பெறுவது தவிர, வேறு தக்க ஜீவன முயற்சி ஒன்றையும் பாணர்கள் மேற்கொண் டிருந்

ததாகத் தெரியவில்லை. எனவே, இசைக்கலைபோல் வறுமையும் இவர்கள்மீது உரிமை கொண்டாடியது! இத்தகைய பொருளா தார நிலையே, பாண்குலம், காலப்போக்கிலே தாழ்குலமாகி விட்டதற்கு ஒரு முக்கிய காரணமென்று தோன்றுகிறது.

அரசர்கள், நல்ல கள்ளையும் –தேறலையும்– இவர்களுக்கு அளித்ததாக நூல்கள் அறிவிக்கின்றன. பாணர்கள் அமிதமாக ஊனும் கள்ளும் உண்ணும் பழக்கம் உடையவர்களாக இருந்தனர் என்பதையும் நாம் சங்க இலக்கியங்களிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

சமணர்களும் பிற்கால வைதிக சமயத்தினரும் கள்ளுண்பதை ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றாகக் கருதியதும்,

ஊனைத்தின்(று) ஊனைப்
பெருக்காமை முன்இனிதே

என்ற கொள்கையை வற்புறுத்தியதும், பாணர்கள் என்ற பழங்குடியினரை ஒதுக்கிவைப்பதற்குக் காரணங்களாக இருந்தன என்று கருதலாம்.

பழைய காலத்தில் பாணர்கள், யாழ்ப்பாணர் இசைப் பாணர் மண்டைப் பாணர் என்று பிரிந்திருந்ததுபோல், மலையாள நாட்டில் இன்றும் காணப்படுகிற பாணர் வகுப்பினர், மீன்பிடிக்கும் பாணர், குடைகட்டிப் பாணர் முதலான பிரிவினராக இருக்கின்றனர். இன்றைய மலையாள நாடும் பண்டைத் தமிழகத்தின் பகுதிதானே?

மலையாளப் பிரதேசத்திலுள்ள பாணர்களும் பாட்டிலும் கூத்திலும் வல்லவர்களே. அங்கும் இவர்கள் ‘தாழ்ந்த வகுப்பின’ராகவே கருதப்பட்டு வருகிறார்கள். அங்கும் இவ் வகுப்பினர் பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய பெருந் தொழில்களில் ஈடுபடவில்லை என்றே தெரியவருகிறது.

இத்தகைய பாணர் குலத்திலே தோன்றியவர் திருப்பாணாழ்வார். சங்ககாலத்து ஔவையாரைத் தந்த குலந்தான் இது.

திருநீல கண்டத்துப்
பாணனார்க்(கு) அடியேன்

என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் போற்றிப் பரவும் அந்தப் பெரும்பாணரும், பாண்குலத்தில் உதித்துச் சிவபெருமான் அருள்பெற்ற உத்தமரே.

இதே குலத்தில் உறையூரில், திருமாலின திருவருட்செல்வம் துய்க்கத் தோன்றியவர் திருப்பாணாழ்வார். இவரது இயற் பெயரையும் மறந்துவிட்ட தமிழகம் இவரைப் 'பாணர்' என்றே பெயர்கூறிப் போற்றுகிறது.

பாட்டினால் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னோமே

என்பது திருமலை நம்பிகள் வாக்கு.

# 12

# திருவரங்கமும் திருப்பாணரும்

காவிரி, தெனபெணணே, பாலாறு, வையை, பொருநை எனற தாமபிரபருணி முதலான ஆறுகளால் மேனி செழித்திருப்பது தமிழ் நாடு என்று பொருள்படப பாரதியார் பாடியிருப்பதை அறியாத தமிழன் இல்லை. தமிழகத்தை வளஞ்செய்து, அணி செய்யும் ஆறுகளில காவிரி தலைசிறந்தது இநத ஆற்றங கரையிலே இயற்கை வளத்துடன் அறிவு வளத்திற்கும் பேர் போன தலஙகள் உண்டு. காவிரி தீரம், தமிழகத்தின் பொருளாதார வளர்சசிக்கு ஒரு கருவூலமாக இருந்ததுபோல் அறிவு வளர்ச்சிக்கும் சமய வளர்சசிககுங்கூடப் பெருங கருவூலமாக இருந்தது.

**அரங்கன் என்ற குலதனம்:**

காவிரியாற்றைச் 'செங்கோற் சோழர்தம குலககொடி' என்றும, 'தண்டமிழ்ப்பாவை' என்றும புலவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். இந்த ஆற்றங் கரையிலே தமிழ் நாகரிகம், தமிழர் பணபாடு, தமிழர் சமயக கொளகைகள ஆகிய பொருளின் வளர்ப்புப் பண்ணைகளான ஊர்கள் தோன்றித் திகழ்ந்தன. இந்த ஊர்களுககெலலாம ஞான ராஜதானிகள் எனறு சொல்லத் தக்க திவ்ய ஸ்தலங்களும உணடு.

இவற்றுள் திருவரங்கம்—பெரிய கோயில்—என்ற திவ்ய ஸ்தலம்,

காவி ரித்திரு நதியி லேஒரு
கருணை மாமுகில் துயிலுமே

என்ற தனிப்பெரும் புகழுக்கு உரிய தலமாகும். இது, திருச்சிராப்பள்ளியின் வடக்கே இரண்டரை மைல் தொலைவில் இருக்கிறது. ஆற்றிடைக் குறையாகிய இந்த அரங்கத்தில் கோயில கொண்டிருக்கும் அரங்கநாதனைக் காவிரியும் கொள்ளிடமும் மாலையிடுவதுபோலச் செல்லுகின்றன.

இந்தத் தீவு, நீர்வளமும் நில வளமும் ஒருங்கே பொருந்திச் சோலைகள் சூழ்ந்து விளங்குகிறது. இது பக்தி வளத்திற்கும் பேர்போனதாய், ஸ்ரீவைஷ்ணவ ராஜதானியாகிப் 'பூலோக வைகுந்தம்' என்று புகழ்ந்து பேசப்படுகிறது. ஆழ்வார்கள் பாடிய திருப்பதிகளில் இதுவே முதன்மையானதாக மதிக்கப்படுகிறது. வட நாட்டினரும் தென்னாட்டினருமாகிய பக்தமணிகளால் இந்தியாவின் புனித ஸ்தலங்களில் மிக்க புகழ்பெற்றதெனக் கருதப்படுகிறது 'தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்' என்பது திவ்யப் பிரபந்த வாக்கு.

அரங்கநாதனுக்கு, 'பதின்மர் பாடும் பெருமாள்' என்று ஒரு விருது உண்டு. முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசையார், திருப்பாணர், தொண்டரடிப்பொடிகள், குலசேகரர், திருமங்கை மன்னன், பெரியாழ்வார், நம்மாழ்வார் ஆகிய எழுவரும் அரங்கனைப் பாடியிருக்கிறார்கள்.

இந்தப் பதின்மரோடு ஆண்டாளையும் மதுரகவியையும் சேர்த்து, ஆழ்வார்கள் பன்னிருவர் என்று கணக்கிடலாயினர். ஆண்டாளும் அரங்கநாதனைப் பாடியிருக்கிறாள். மதுரகவி யாழ்வார் மட்டும் ஒரு தலத்துப் பெருமாளையும் பாடாமல் தமது குருவாகிய நம்மாழ்வரையே பாடியிருக்கிறார்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாளைப்போல் குலசேகரர் புதல்வி, சேரர்குலவல்லியும், நந்த சோழன் மகள் கமலவல்லியும், பின்னாளில் டில்லி பாதுஷாவின் மகள் துலுக்கநாய்ச்சியாரும் அரங்கநாதனாகிய அழகிய மணவாள னைக் காதலித்துப் பேறு பெற்றனர் என்பது பிரசித்தம்.

ஸ்ரீவைஷ்ணவத்திற்குப் புத்துயிர் அளித்த ஸ்ரீராமானுஜரே இக்கோயிலின் நடைமுறைகளை வகுத்தனர் என்பதும் பிரசித் தமே. இப்பெரியார் வாழ்ந்து, ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தை நாட்டியச் செய்ததும் இந்தத் திருப்பதியிலேதான். வேறு சித் தாந்த ஸ்தாபகர்களான மத்வர் முதலானவர்களும் இங்கே வந்து, வணங்கி, வழிபட்டுப் பேறு பெற்றிருக்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், துளஸீதாஸர் முதலான வடநாட்டுப் பெரும் பக்தமணிகளும் அரங்கநாதனை வணங்கி, அருள் பெற் றார்கள் என்பதற்கும் ஆதாரம் உண்டு.

சங்கீதக் கலைக்குப் புத்துயிர் அளித்த தியாகராஜ சுவாமிகள் முதலானவர்களும் பல கீர்த்தனங்களால் திருவரங்கத்தைப் போற்றியிருக்கிறார்கள். 'அணிதிரு அரங்கர், மணிதிகழ் முகுந் தர், அழகிய மணவாளர்' என்று அழகிய மணவாளதாசர் என்ற திவ்ய கவி பிள்ளைப் பெருமாளையங்கார் போற்றியுள்ள இப்பெருமானது கோயில், சரித்திர காலத்திற்கு முந்திய காலத் திலிருந்து நாளிதுவரை வாடாத சிறப்புடன் பக்தியின் வளர்ப் புப் பண்ணையாகத் திகழ்ந்து வந்திருக்கிறது எனலாம்.

பழந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங் கோவடிகள் சமணர் என்பர். இவர் அரங்கநாதனது சயனத் திருக்கோலத்தை அழகாகப் பாடியிருக்கிறார்:

நீல் மேகம், நெடும்பொற் குன்றத்துப்
பால்விரித்(து) அகலாது படிந்தது போல,
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறல்
பாயற் பள்ளிப் பலர்தொழு(து) ஏத்த,

விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருஅமர் மார்பன் கிடந்த வண்ணமும்......

[பால் - பக்கம், திறல் - திறம். பாயல் - படுக்கை. வியன் – பெருமை. துருத்தி – ஆற்றினிடையே உள்ள சிறு திட்டு.]

'நீலமேகம் பொன்மலைமீது படிந்து கிடப்பதுபோல, ஆயிரம் பணுமுடிகளோடு கூடிய பாம்பணைமீது, அலை கொழிக்கும் காவிரி யாற்றுக்கிடையே, அறிதுயில் அமர்ந்திருக்கிருன்' என்று இளங்கோவடிகள் பாடியிருப்பது ஊன்றி நோக்கத்தக்கது.

இளங்கோவடிகளின் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றுண்டு எனலாம். அக்காலத்தில் திருவரங்கம், கற்கோயிலாக இருந்திருக்க முடியாது. கி. பி.600 முதல்தான் கற்கோயில்கள் தோன்றத் தொடங்கின என்பது ஆராய்ச்சியாளர் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் அபிப்பிராயம்.

இளங்கோவடிகள் காலத்திலே கோயில்கள் சுண்ணும்பாலும் மரத்தாலும் கட்டப்பெற்றிருந்தன எனக் கருதலாம. பிறகு தான் கற்கோயில்கள் தோன்றி, விமானம் கோபுரம் மண்டபம் முதலான அமைப்புகளைப் பெற்றிருக்க வேண்டும். இளங்கோவடிகள் தம் காலத்திலிருந்த அரங்கநாதன் சந்நிதியைப் பாகவதர்களின் பக்திக் கண்கொண்டு பார்த்துச் சயனத் திருக்கோலத்தை அதே உணர்ச்சியுடன் பாடியிருக்கவேண்டும்.

'தேனேங்கு சோலைத் திருவேங்கடம்' என்று திருமலையையும், 'வானேங்கு சோலை மலை' என்று திருமாலிருஞ்சோலையையும் சிறப்பித்துப் பாடியிருக்கும் ஒரு புலவர், திருவரங்கத்தை, 'தான் ஓங்கு தென் அரங்கம்' என்றே சிறப்பித்து இத்திருப்பதியின் தனிப் பெருஞ் சிறப்பை வற்புறுத்துகிருர். இச்சிறப்பு, சரித்திர காலத்தையும் கடந்து நிற்கிறது என்பது இத் திருப்பதி குறித்து வழங்கும் புராணக் கதைகளின் ஒரு புதை பொருளும் ஆகும்.

முன்ஒரு காலத்திலே - புண்ணிய நதிகள் தெய்வ கன்னிகைகளின் வடிவம் கொண்டு சஞ்சரிக்கக் கூடிய அந்தப் புராண காலத்திலே–கஙகை, யமுனை, சரஸ்வதி முதலான நதி-கன்னிகைகள் இமய மலைத் தாழ்வரையில் விளையாடிககொண்டிருந்தார்களாம். அப்போது வான வீதியில் சென்றுகொண்டிருந்த கந்தர்வன் ஒருவன் இந்தக் கன்னிகைகள் இருந்த திசை நோக்கிக் கைகூப்பி, அப்பால் போய்விட்டான்.

அந்தக் கந்தர்வன் யாரை வணங்கினான் என்பது குறித்து, நதி கன்னிகைகள் ஒருவரோடொருவர் பூசலிடத் தொடங்கினர். அந்தப் பெண்கள் குழுவில் காவிரி தேவியும்—காவிரியாற்றின் அதி தேவதையும், காணப்பட்டாளாம். கங்காதேவி, ‘என்னைத்தான் அந்தக் கந்தர்வன் கும்பிட்டுப்போனான்’ என்று சொல்ல, மற்றவர்களும், ‘என்னைத்தான், என்னைத்தான்?’ என்று வாதாடத் தொடங்கினர்.

கூடி விளையாடிய விளையாட்டு, இப்படிச் சண்டையில் முடியவே, சில நதி கன்னிகைகள் அலுப்பும் சலிப்புமாக, ‘இது என்ன தொல்லை? நாம் நம்முடைய வேலையைப் பார்ப்போம். மக்களின் தாகத்தையும் பயிர் பச்சைகளின் தாகத்தையும் பூமகளின் தாபத்தையும் தீர்க்கப் போவோம்’ என்று போய்விட்டார்களாம். கடைசிவரை இருந்து, கங்கையோடு வாதாடியவள் காவிரிப் பெண்தான்.

சொற்போருக்கு முடிவு காணாததால் இந்த இரண்டு நதி நங்கையரும் திருமாலிடம் போய், ‘கந்தர்வன் செலுத்திய வணக்கம் யாருக்கு?’ என்று கேட்டார்கள். உடனே பெருமாள், கங்கையை நோக்கி, இளநகை அரும்பி, ‘அம்மா, எந்தக் காரணத்தால் கந்தர்வனுடைய வணக்கம் உனக்கே உரியது என்கிறாய்?’ என்று கேட்டார்.

கங்காதேவி, இறைவன் திருவடியைத் தொட்டு, ‘இங்கே இருந்துதானே தோன்றினேன் நான்’ என்றாள். பகவானும்,

திருவடியிலிருந்து உதித்த சிறப்பை ஒப்புக்கொண்டுதான், 'கந்தர்வன் கங்கா தேவிக்கே வணக்கம் செலுத்திஞன்' என்று தீர்ப்பு அளித்தார். காவிரிக்கோ கோபம் பொங்கிவிட்டது.

'கங்கையிற் புனிதமாய காவிரி' என்று ஒரு நாள் புகழ் பெற்றுத்தான் ஆகவேண்டும் என்று ஒருமை யுள்ளத்துடன் காவிரி தவங்கிடந்தாளாம். காவிரியின் தவம்,அன்பு நெறியிலே சென்ற தொண்டர்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி யளித்தது. எனவே, தொண்டர் நாதனுகிய பெருமான் நேரில் வந்து, 'காவிரிப் பெண்ணே! உன்னுடைய கைங்கரிய ரூபமான தவத்தை மெச்சினேன். நான் இங்கே வந்து சயனித்துக்கொள் ளப் போகிறேன். அப்போது நீ எனக்கு மாலையாக அமைந்து பெரும்பேறு பெறுவாய். உன்னைக் கங்கைக்கும் மேற்பட்டவள் என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடப் போகிருர்!' என்று வரம் அளித்தாராம்.

பிறகு காவிரிக்கிடையே ஒரு தீவு தோன்றியது. அந்தத் தீவில் ஸ்ரீரங்கநாதனேடு கூடிய ஸ்ரீரங்க விமானமும் தோன்றி யது இரண்டு ஆற்றின் மத்தியிலுள்ள இந்த அரங்கம் இயற்கை வளத்தாலும் இறையருளாலும் அபூர்வ சோபை யுடன் திகழ்ந்தது.

ஸ்ரீரங்க விமானத்தினுள்ளே மூலவரான அரங்கநாதன், ஆயிரம தலைகளுக்கு அறிகுறியான ஐந்து தலைகளோடு கூடிய ஆதிசேஷன்மீது, மேற்கே தலையும் கிழக்குப் புறம் திருவடிகளு மாகத் தெற்கு முகமாக இலங்கையை நோக்கிய வண்ணம் சயனித்திருக்கிருர். தமது வலது கையால் திருமுடியைச் சுட் டிக் காட்டித் தாமே உலகங்களுக்கெல்லாம் இறைவன் என்ப தைப புலப்படுத்துகிருராம். இடது கையால் திருவடிகளைக் காட்டி, 'என் திருவருளுக்கு அறிகுறியான திருவடிகளைப்பற்றி உலகம் உய்ய வேண்டும்' என்று சொல்லாமல் சொல்லு கிருராம்.

ஸ்ரீரங்க விமானம் பகவானால் பிரமதேவனுக்கு அளிக்கப் பட்டதென்றும், அது சூரிய குலத்தைச் சார்ந்த இட்சுவாகு மன்னனுக்குப் பிரமனால் வழங்கப்பட்டதென்றும புராணம் சொல்லுகிறது. இட்சுவாகு, இந்த விமானத்தை அயோத்தி யில் தமது அரண்மனையில் வைத்து, ஆராதித்து வந்தானாம். அவன் காலம் முதல் அந்தப் பரம்பரையில் வந்த ராமபிரா னுடைய காலம்வரை ஸ்ரீரங்க விமானம் அக்குல மன்னர் களின் குலதனமாகக் கருதப்பட்டதாம். இந்தக் குலதனத்தை ராமன் விபீஷணனுக்குக் கொடுத்தானாம்.

ராம பட்டாபிஷேகத்திற்குப் பின் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு ஸ்ரீரங்க விமானத்துடன் திரும்பிய விபீஷணன் காவிரிதீரத்தைக் கடந்து செல்லும்போது, காவிரியாற்றுக் கிடையே அரங்கமாக இருக்கும் தீவைக் கண்ணுற்றதும் அந்த அழகிற்கு உள்ளத்தைப் பறிகொடுத்தவனாக அங்கே விமானத்தை வைத்து, அன்றைய ஆராதனத்தை அவ்விடத்தி லேயே நடத்தினான். அப்போது தர்மவர்மன் என்ற சோழ மன்னனும் சில முனிவர்களும் அங்கே வந்து, அரங்கநாதனை வணங்கினர்.

விபீஷணன் அவர்களிடம் இலங்கைக்குச் செல்ல விடை பெற்று. ஸ்ரீரங்க விமானத்தை எடுத்துச்செல்ல முயன்றான். ஆனால் இவ் விமானத்தை அசைக்கவும் முடியவில்லையாம். அரங்கநாதன் விபீஷணனிடம் காவிரிக்குத் தான் அளித்திருந்த வரத்தைப்பற்றிய வரலாற்றை வெளியிட்டானாம். 'அந்த வாக்கை நிறைவேற்ற உன்மூலம் இங்கு வந்து சேர்ந்தோம்; இனி நாம் இவ்விடத்தை விட்டு அசையப்போவதில்லை., உன் னுடைய தென்திசை இலங்கை நோக்கி இப்படியே சயனித் துக்கொண் டிருப்போம்' என்று முடிவாகச் சொல்லிவிட் டானாம். இவ்விதமாக ஸ்ரீரங்க விமானம் ஸ்ரீரங்கத்திற்கே வந்து சேர்ந்துவிட்டது!

தர்மவர்மன் என்ற சோழன் விமானத்தைச் சுற்றி மதில் எழுப்பி, முன்மண்டபம் முதலானவை கட்டி, அரங்கநாதனுக்கு முறைப்படி ஆராதனம் நடக்க ஏற்பாடு செய்தான். இந்தத் தர்மவர்மனின் பரம்பரையில் வந்த நந்தசோழன், தன் மகளான கமலவல்லியை அரங்கநாதனுக்கே மணஞ்செய்து கொடுத்துத் தன் ராஜதானியான உறையூரில் ஒரு கோயிலும் கட்டிவைத்தான் என்பர். கமலவல்லி, உறையூரில் பிறந்ததால் இவளை, 'உறையூர்வல்லி' என்றும் கூறுவது உண்டு.

கமலவல்லி பிறந்த உறையூரும் காவிரி தீரத்திலே, 'கோயில் நாகரிகம்' என்ற தமிழர் பண்பாட்டின் சிறந்த வளர்ப்புப் பண்ணைகளில் ஒன்ருகும். இது சோழ மன்னர்கள் அரசு வீற்றிருந்த ஐந்து தலைநகரங்களில் ஒன்ருகவும் பேர் பெற்றிருக்கிறது. இவ்வூரில் தோன்றியவரே திருப்பாணுழ்வார்.

இவர் திருவரங்கத்தில் சயனத் திருக்கோலத்தில் இருக்கும் இறைவன்மீது விசேஷ பக்திபூண்டு, பாடல்-தொண்டு புரிந்திருக்கிருர் என்பது பிரசித்தம். இவரது சந்நிதி திருவரங்கம் பெரிய கோயிலில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் சந்நிதிக்கு வடக்கேயுள்ள விட்டல கிருஷ்ணன் சந்நிதிக்கும் வடக்கில் இருக்கிறது.

இவர் பாடிய பிரபந்தம், பத்தே பாசுரங்கள் அடங்கியது. 'அமலன் ஆதிபிரான' என்று தொடங்குவதால் இந்தப் பிரபந்தத்தை, 'அமலனுதி பிரான்' என்பர். இது திவ்யப்பிரபந்தத்திலே முதலாயிரம் என்ற பகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

*　　*　　*

புராண மனேபாவம் திருவரங்கத்துக் கோயிலின் தோற்றத்தைத் திரேதாயுகத்திற்கே கொண்டுபோய் விடுகிறது.

எனினும் இப்போதுள்ள கோயில் அமைப்பு, சுமார் 900 ஆண்டுகளாக வளர்ந்திருப்பதுதான். இக்கோயிலைச் சென்ற ஒன்பது நூற்றாண்டுகளாக, 'பிற்காலப் பல்லவ அரசர்கள், பிற்காலச் சோழன் பராந்தக சுந்தரசோழன், பிற்காலப் பாண்டியர், குலசேகரப் பெருமாள்போன்ற சேரர்கள், ஒய்சாளர், விஜயநகர அரசர்கள், மதுரை-திருச்சி நாயக்க மன்னர்கள் இவர்கள், அவ்வப்போது திருத்தியும் பெருக்கியும் அமைத்தனர்' என்பது கல்வெட்டுகள், செப்பேடுகளின் ஆராய்ச்சியால் தெரியவரும் செய்தி.'—ஸ்ரீரங்கம் பெரிய கோயில்: திரு. ஜே. எம். சோமசுந்தரம்.

ஏழு பிராகாரங்களைக் கடந்து, அரங்கநாதனை அணுக வேண்டும். அகன்று நீண்ட வீதிகள் போன்ற இந்தப் பிராகாரங்கள் காலப்போக்கிலே தோன்றியிருக்கவேண்டும். இந்த ஏழு பிராகாரங்களில் சிறிதும் பெரிதுமாக 21 கோபுரங்கள் உண்டு. இவையும் காலப்போக்கிலே அவ்வப்போது தோன்றியவை. ஐந்தாவது பிராகாரத்திலே கோயிலின் தொடக்கத்தைக் காண்கிறோம்.

உள்ளே நுழைந்ததும் ஒரு நாற்கால் மண்டபத்தைப் பார்க்கிறோம். இம் மண்டபத்தினின்றும் மேல் நோக்க, மகம்மதியச் சிற்ப முறை ஒன்று காணப்படுகிறது. காரணம் என்ன?

14-ஆம் நூற்றாண்டில் இக்கோயில் இருமுறை மகம்மதியர்களால் கொள்ளையடிக்கப்பட்டது என்பது சரித்திரச் செய்தி. முதலாவது படையெடுப்பிலே அரங்கநாதனின் திருமேனி, மகம்மதியர்களால் கொண்டு போகப்பட்டது என்றும், சுமார் அறுபது ஆண்டுகளுக்குப் பின் திரும்பி வந்து சேர்ந்தது என்றும் சொல்லுகிறார்கள். பக்தர்கள் டில்லியிலிருந்து விக்கிரகத்தை மீட்டுக்கொண்டு வந்தபோது, டில்லி பாதுஷாவின் மகளும் இந்த விக்கிரகத்தைத் தொடர்ந்து, திருவரங்கத்திற்கே வந்துவிட்டாளாம்.

தன் கோயிலைக் கொள்ளை யிட்டவர்களின் தலைவனுகிய பாதுஷாவுடைய அருமை மகளின் மனத்தையே கொள்ளை கொண்டு விட்டானும் அழகிய மணவாளன். இவளைத்தான், ‘துலுக்க நாச்சியார்’ என்று சொல்லுகிருர்கள். ‘இதனை ஓட்டி, டில்லி பாதுஷா விசேஷ நிலதானங்களை ஸ்ரீரங்கனுக்குக் கொடுத்து, கோயிலில் மகம்மதிய சின்னமாகிய இம்மாடங் களை இங்கும், இரண்டாவது பிராகாரத்துச் சேனை முதலியார் சந்நிதி மேற்பக்கச் சுவர்களிலும் அமைத்தார் என்பது சரித் திரம்’.- ஸ்ரீரங்கம், பெரிய கோயில்; திரு. பிஜே. எம். சோம சுந்தரம்.

புறச்சமயியான பாதுஷாவின் அருமைத் திருமகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அழகிய மணவாளன் 14–ஆம் நூற்ருண்டுக்குப் பல நூற்ருண்டுகளுக்கும் முன்பே, ‘தாழ் குலத்தவர்’ என்று, சமுதாயம் ஒதுக்கிவைத்திருந்த பாணர் குலத்தினரான நம் பாணநாதரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு தன் திருவருட் செல்வம் எத்துணையும் பேதமின்றி எல்லாரையும் வாழ்விக்கும் என்பதை மெய்ப்பித்தான்.

* * *

நாற்கால் மண்டப முற்றத்தின் எதிரே ஸ்ரீரங்கவிலாச **மண்டபம்** என்ற ஒரு பெரிய மண்டபம் காணப்படுகிறது. இம்மண்டபத்தைச் சுற்றிக் கூரத்தாழ்வான் சந்நிதி, தொண்ட ரடிப்பொடியாழ்வார் சந்நிதி, திருப்பாணுழ்வார் சந்நிதி முதலியன அமைந்திருக்கின்றன.

தென்னுட்டுக் கோயில்களில் எல்லாம் பெரியது திருவரங் கம் பெரிய கோயில். இக்கோயிலைப் பாடிய ஆழ்வார்களில் திருப்பாணுழ்வாரின் பெருமை குறித்து ஸ்ரீ வேதாந்த தேசிகன்,

காண்பனவும் உரைப்பனவும் மற்றென்(று) இன்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல்

பாண்பெருமாள் அருள்செய்த பாடல்பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுமின்கள்!

என்று கூறியுள்ளார்.

திருவரங்கத்துப் பெருமானை வழிபட்டு, உய்ந்த திருப்பாணரைப் 'பாண்பெருமாள்' என்று திருவரங்கத்தமுதனாரும் தமது 'இராமாநுச நூற்றந்தாதி'யில் குறிப்பிடுகிறார். இப்பாண்பெருமாளின் திருவடிகளை யதிராஜரான ஸ்ரீஇராமாநுஜரே தம் முடியில் அணிந்து பேறு பெற்றார் என்பர் அமுதனார்.

'திருப்பாணன் பொற்பதங்கள் செகதலத்தில் வாழியே' என்று வாழ்த்துகிறது ஸ்ரீவைஷ்ணவ உலகம். பாகவத ஸமதர்மத்தின் அருமை பெருமைகளை அறிந்துகொள்வதற்குத் திருப்பாணர் கதையையும் வாக்கையும் வாழ்க்கையையும் நாம் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும்.

# 13

# பாணர் விளக்கு

## (கதை, வாக்கு, வாழ்க்கை)

திருவரங்கத்திற்கு அருகிலுள்ள உறையூரில், ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாகக் குடிசைகளில் வசித்துவந்த பாணர் குலத்தில் தோன்றியவர் திருப்பாணர். செங்கெற் பயிருக்கு அருகில் ஒரு தங்கப் பதுமைபோல் ஒளிர்ந்த ஒரு குழந்தையை ஒரு பாணனும் அவன் மனைவியும் கண்டு, பிள்ளை இல்லாதவர்களாகையால் மகிழ்ந்து, எடுத்துக் கொண்டுபோய் வளர்த்து வந்ததாகவும், இந்தக் குழந்தையே திருப்பாணராக வளர்ந்து விட்டதாகவும் குருபரம்பரைக் கதைகள் தெரிவிக்கின்றன.

**திருப்பாணர் கதை:**

பேசத்தொடங்கிய காலம் முதல் இவர் பாணர்களின் குலத்தொழிலாகிய இசைக்கலையில் பெரு விருப்பமும் உள்ளவராகி, இன்னிசை வீணை ஏந்திப் பாடும் திறனும் பெற்றுவிட்டார். இவரை வளர்த்த தாய் தந்தையரும் பக்திசீலராக இருந்தனர். இவரோ, 'துளசி, பரிமளத்துடன் தோன்றுவதுபோல் பக்தியுடன் தோன்றிவிட்டாரோ!' என்று ஊரார் அதிசயிக்கும் நிலை

யில் திருவரங்கப்பெருமான்மீது பக்திக்காதல் கொண்டு, இறைவனது திருக்குணங்களைப் பாடிப் பாடி அநுபவித்துக்கொண்டிருந்தார்.

நாள்தோறும் காவிரியாற்றுக்குப் போய் நீராடுவார். திருவரங்கம் பெரிய கோயிலின் விமானத்தை நோக்கி, யாழும் கையுமாக நின்று, மனமுருக, உடல் புளகிக்கக் கண்களில் ஆனந்தம் சொரியப் பாடுவார். கேட்டவர்களெல்லாம். 'இப்படிக் கீத மழை பொழிவது நாரதரோ? அல்லது பரமபத வாசிகளில் ஒருவரோ?' என்று பிரமித்துப் போவார்கள்.

ஒரு நாள் அரங்கநாதனுடைய திருமஞ்சனத்திற்கு வேண்டிய தீர்த்த கைங்கரியம் செய்து வந்த லோக ஸாரங்க முனிவர், பொற்குடத்துடன் பொன்னித் துறைக்கு வந்தார். திருப்பாணர் வழக்கம்போல் தம்மை மறந்து, இறைவனதுதிருப்புகழைப் பாடிக்கொண் டிருந்தார்.

துறையில் இருந்தவர்கள் பாணரை அப்பால் போய்விடுமாறு சொன்னார்கள். பக்திமயமாய் இசைமயமாய் நின்ற பாணர் காதில், சொற்களோ, கூச்சல்களோ விழவில்லை. லோகஸாரங்கர் நல்லறிஞராகவும் பக்தராகவும் இருந்தபோதிலும் தம் குலாசாரப் பழக்கங்களுக்கு ஆட்பட்டவராய்ப் பாணர் விலகவில்லையே என்று சீற்றங் கொண்டார்.

துறையில் நின்றுகொண் டிருந்த ஒருவன், 'இனி நாம் சொல்லை வீசிப் பயன் இல்லை' என்றான். உடனே கல்லை வீசினான் வேறொருவன். அந்தக் கல், தமது மேனியில் விழுந்ததும் பாணருக்குப் புறவுலக உணர்ச்சி வந்தது.

பாணர் நெற்றியில் ரத்தம் கண்டதும், லோகஸாரங்கரும் தம்மை அறியாமலே நடுங்கினார். கல் தம்மீது விழுந்ததோ என்ற ஒரு பிரமையையும் அடைந்தார்.

பாணரோ தம் கண்மலர்களை விழித்துப் பார்த்து, 'பொறுத் தருள வேணும்' என்று சொல்லிக்கொண்டே விரைந்து போய் விட்டார். லோகஸாரங்கர் தமது கடமைகளை முடித்துக்கொண்டு இல்லத்திற்குத் திரும்பினர். பாணரையும், அவர் தம் மார்பில் அணைத்து, விரல்கள் சிவப்பெய்தத் தடவிய அந்த யாழையும் இவரால் மறக்க முடியவில்லை.

லோகஸாரங்கர் படுக்கையில் படுத்து, உறக்கம் வராமல் புரண்டுகொண் டிருந்தார். 'சிந்திக்கும்; திகைக்கும்; தேறும்; கைகூப்பும்' என்ற நான்கு நிலைகளிலும் பாணர் இவர் மனக் கண்முன் தோன்றினர். அந்த நினைவை உள்ளத்தைவிட்டுத் துரத்த முடியவில்லை.

'எப்படியும் அவனை அந்த இடம்விட்டுத் துரத்தாமல் விடுவ தில்லை' என்று சொல்லிச் சிலர் கல்வீசிய காட்சியும் மனக்கண் முன் தோன்றியது. கல்மழைக்கிடையே ரத்தம் பெருகக் கீத மழை பொழிந்தவர், இந்திரன் சோனைமாரியாகப் பொழிந்த கல் மழைக்கிடையே சலியாது கோவர்த்தனக் குன்றுபோல் நின்ற தாகவும் ஒரு தோற்றத்தைக் கண்டு, அந்த இந்திரன்போலவே அச்சம் அடைந்தார் லோகஸாரங்கர்.

கலங்கிய உள்ளம் களைப்புற்றது. கடைசியாக உறக்கமும் வநதுவிட்டது.— ஆனால் அந்த நெற்றியில் பெருகிய ரத்தம் இப்போது பெரிதும் பயமுறுத்துகிறது! திருப்பாணரின் நெற்றி யிலா, திருவரங்கப் பெருமானின் நெற்றியில்தானா ரத்தம் பெருகுகிறது? லோகஸாரங்கர் அளவிறந்த அச்சத்துடன் நோக்குகிறார்.

அரங்கநாதனுடைய நெற்றிச் செந்நீர், மேனியிலும் பெருகு கிறது. லோக ஸாரங்கர் உள்ளத்தில் இப்போது அச்சத்தைக் காட்டிலும் பரிவு பொங்குகிறது. 'அழகிய மணவாளனே! உன் னுடைய பொன்மேனியையும் புண்மேனியாக்கத் துணிந்தவர் யாரோ?' என்று ஏங்குகிறார்.

பவளவாய் திறந்து, உதடு துடிக்க, விடையும் கிடைக்கிறது. 'அவர் உள்ளத்தில் இருந்தேன், அந்த இசையை ஆனந்த மாக அநுபவித்துக்கொண்டு; அப்போது பட்ட காயந்தான்! அப்பா!' என்று பகவான் பதில் சொன்னதும், 'ஐயோ, பாவி யேன் பிழைத்தவாறு!' என்று அலறிவிட்டார் லோகஸாரங்கர்.

இந்த அலறல் உறக்கத்தைக் கலைப்பதற்கு முன்பே, 'அஞ்சேல், அஞ்சேல்! இன்றைத் தினம் அந்த அன்பரை நம் முடைய சந்நிதிக்கு எப்படியாவது அழைத்து வந்து விட வேணும்' என்ற பெருமானின் கட்டளையும் காதில் தெளிவாக விழுந்தது. லோகஸாரங்கர் எழுந்து நின்றார்.

விடியற்காலம் ஆகிவிட்டது. 'என்ன கனவு!' என்று அதி சயிப்பார் ஒரு கணம். 'கனவுதானா அது! இறைவன் திருவுள் ளத்தை அவன் வாயிலாகவே தெரிந்துகொள்ளும் பேறு பெற் றேன்!' என்று கருதுவார் ஒரு கணம். 'இன்று விடிவுதான் நமக்கும் விடிவாயிற்று' என்று குதூகலிப்பார் ஒரு கணம்.

நீராடி நிர்மலராகிக் கடுநடையாகத் திருப்பாணரைத் தேடிச் சென்றார். 'இன்று வருவாரோ? ஒருவேளை வராமலேயே இருந்துவிடுவாரோ?' என்ற கவலையும் எழுந்தது.

தூரத்திலே திருப்பாணரைக் கண்டதுமே கைகூப்பிக் கொண்டு ஓடினார். அதிதூரத்தில் நின்று பாடிக்கொண் டிருந்த பாணரை நெருங்கினார். பாணர் விலகி விலகிச் சென்ற போதி லும் லோகஸாரங்கர் தொடர்ந்துபோய்ப் பணிந்தார். 'தேவரீர் எழுந்தருளவேணும்; நம் பெருமாள் கட்டளை! அடியேனுக்கு நியமனமாகிவிட்டது' என்றார் தழுதழுத்த குரலில்.

திருப்பாணரோ, 'நீசனேன், நிறைவு ஒன்றும் இலேன்' என்று சொல்லிக்கொண்டே பின்வாங்கினார். லோகஸாரங்கர் தொடர்ந்து வற்புறுத்தவே பாணர், 'திருவரங்கப் பெருநகரில் அடியேன் அடிவைக்கலாமா?' என்றார்.

உடனே லோகஸாரங்கர், "அப்படியானல் அடியேன் தோள்மேல் ஏறியருளுக" என்ருர். பிறகு லோகஸாரங்கர், 'இந்தக் கைங்கரியம் நமக்குக் கிடைத்ததே!' என்ற பெருமகிழ்ச்சியுடன் ஆழ்வாரைத் தம் தோளில் தூக்கிக்கொண்டு புறப்பட்டார். திருப்பாணர் உள்ளமோ யாவர்க்கும் புகலிடமான திருவடித் தாமரைக்கே வண்டாகிப் பண் பாடிக்கொண் டிருந்தது.

கமலபாதம் தம்மை ஆட்கொண்டதென்று பாடத்தொடங்குகிருர்:

கமல பாதம், வந்துஎன்
கண்ணின் உள்ளன
ஒக்கின்றதே.

மலரடிகள் தம் கண்களிலேயே உள்ளனபோல் காணப்பட்டதும், தம்மை ஆட்கொண்ட அரங்கனே, 'அமலன், விமலன், நிமலன், நின்மலன். நீதிவானவன்' என்ற ஐந்து பெயர்களால் குறிப்பிடுகிருர்.

'இவன் சுத்தனுகையாவது: தான் ஒருத்தன் சுத்தனுகையன்று, தன்னேடு சம்பந்தித்தாரையும் சுத்தராக்க வல்ல அடியுடைமை' என்ற வியாக்கியானம் கூர்ந்து நோக்கத் தக்கது.

**உட்கண்ணுல் காண்பது :**

அடுத்தபடியாக, பொன்னுடை புனைந்த திருமேனி யழகு உள்ளத்தைக் கவர்கின்றது. இந்த அழகை இரண்டாவது பாட்டில் அநுஸந்தித்தபின் படைப்பிற்கெல்லாம் காரணமான உந்திக் கமலத்தைப் பாடுகிருர்.

'மதுரமா வண்டுபாட, மாமயில் ஆடு' அரங்க நகரில் இவர் சென்றுகொண் டிருக்கும் குறிப்பை நான்காவது பாசுரத்தில் காண்கிருேம். அடுத்த பாட்டிலே, தம் உள்ளம் புகுந்த இறைவனது திருமார்பின் அழகை அநுபவிக்கிருர்:

ஆர மார்(வு) அதுஅன்றோ,
அடியேனை ஆட்கொண்டதே!

பிறகு திருக்கழுத்தின் அழகு, அகக்கண்ணுக்கு இலக்கா கிறது. அனைவருக்கும் பட்சபாதம் இல்லாமல் அபயம் அளிக் கும் நீதி வானவனின் அந்தப் பவளவாயின் அழகையும் அநுபவிக்கிறார்:

செய்யவாய், ஐயோ!
என்னைச் சிந்தை
கவர்ந்ததுவே!

எல்லாவற்றுக்கும் மேலாக, கண்கள், குளிரக் கடாட்சித்து இவரை வசீகரிக்கின்றனவாம். இந்த வசிய சக்தியைத் தான் என்னென்பது! திருப்பாணர் பாடுகிறார்:

கரிய வாகிப் புடைப ரந்து
மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்டஅப்
பெரிய வாய கண்கள் என்னைப்
பேதை மைசெய் தனவே!

அப்பால் எல்லா அவயவங்களின் சமுதாய சோபையை யும் ஒருங்கே அநுபவிக்கிறார்:

ஆலமா மரத்தின்
இலைமேல் ஒருபா லகனாய்
ஞாலம் ஏழும்உண் டான்அரங்
கத்[து)அர வின்அ ணையான்
கோல மாமணி ஆரமும் முத்துத்
தாம மும்முடி(வு) இல்ல தோர்எழில்
நீல மேனி, ஐ யோ! நிறை
கொண்ட(து)என் நெஞ்சி னையே!

உழக்கைக் கொண்டு, கடலை அளக்க முயன்றானும் ஒரு வன். ஒவ்வொரு உழக்காக எடுத்தெடுத்துக் கடல்நீரைக் கரை

யில் ஊற்றிக்கொண்டே இருந்தான். திடீரென்று அலையொன்று புரண்டு வந்து, உழக்கையும் உருட்டிக்கொண்டு போய்விட்டது. 'கடல்நீரை அளக்க முயன்று, அளக்கும் கருவியும் பறி போயிற்றே!' என்று கதறினன். இதுதான் தமது நிலையும் என்கிருர் திருப்பாணர்.

நீலமேனியின் நிர்மல செளந்தரியம் கடலாக வெள்ளமிட்டு வர, அதை நெஞ்சால் அநுபவிக்கப் பார்க்கிருர். ஆனல் அந்த அழகு வெள்ளத்திலே சுருட்டிய பேரலை ஒன்று, இவர் நெஞ்சை இழுத்துக்கொள்ள, 'ஐயோ, என் நெஞ்சையும் இழந்துவிட்டேனே!' என்கிருர்.

**கண்ணனைக் கண்ட கண்கள் :**

லோகஸாரங்க முனிவர் திருப்பாணரைத் தம் தோளில் தூக்கிக்கொண்டு, அடியவர்கள் சூழத் திருவரங்கப் பெரு வீதியில் வலம்வந்து, கோவிலுக்குள் புகுந்தார். அழகிய மணவாளன் திருமண்டபத்துக்கு அருகே முனிவரின் தோள் களினின்று இறங்கினர் திருப்பாணர்.

வறியன் நிதிக்குவைகளை யெல்லாம் ஒருங்கே கண்டது போல் இறைவனைக் கண்ணுரக் கண்ட திருப்பாணர்,

> கொண்டல் வண்ணனைக்
> கோவல னுய்வெண்ணெய்
> உண்ட வாயன்என்
> உள்ளம் கவர்ந்தானை
> அண்டர் கோன்அணி
> அரங்கன்என் அமுதினைக்
> கண்ட கண்கள்மற்(று)
> ஒன்றினைக் காணவே!

என்று பாடி முடித்தார்.

இவர் பாடிய இந்த, 'அமலனுதி பிரான்' என்ற பெயர் பெற்ற பிரபந்தத்தில் ஒன்பது பாசுரங்கள், உட்கண்ணுல் கண்டு பாடப் பெற்றவை; பத்தாவது பாசுரம் நேரில் கண்டு பாடப் பெற்றது என்பர்.

'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே!' என்று இவர் பாடி முடித்ததும் திருவரங்கப் பெருமான், இவரை அந்த அளவற்ற பெருமகிழ்ச்சி நிலையில் அப்படியே அந்தத் திருமேனியுடன் ஏற்றுக்கொண்டானும்.

லோகஸாரங்கர் முதலிய பலர் பாண்பெருமாளை வழிபட்டு, நற்கதி யடைந்ததாகச் சொல்லுகிறுர்கள். பாண்பெருமாள் அருள்செய்த பாடல் பத்தும் இன்றும் தாழ்ந்தாரை உயர்த்துவதுடன், கல்வித் திமிர், செல்வத் திமிர், சாதித் திமிர் என்ற முக்குறும்பையும் போக்கி, உள்ளத்தைத் தூய்மை செய்துகொள்வதில் பலருக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாக உதவக்கூடும்.

திருப்பாணர் இவ்வுலகில் எண்பது வயது வாழ்ந்தார் என்று குருபரம்பரை வரலாறுகள் தெரிவிக்கின்றன.

# 14

# தொண்டக்குலத்தில் பாணர் நிலை

முதலாழ்வார்கள் மூவரும் ஏற்றிய மொழிவிளக்கிலிருந்து திருமழிசையாழ்வார் தமது ஞானதீபத்தை ஏற்றிக்கொண்டார் என்று நிச்சயிக்கும்படி, அந்த நால்வரும் ஏறக்குறைய ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களென்று தெரிந்துகொண் டிருக்கிறோம். திருப்பாணரைப்பற்றியோ காலநிலையாகத் தெரிந்துகொள்ளக் கூடிய செய்தி ஒன்றும் கிடைப்பதற்கில்லை.

## கொண்டாடும் நாள்:

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தமது அதிகார ஸங்கிரகம் என்ற நூலில் பொய்கையார், பூதத்தார், பேயார் ஆகிய மூவரையும் குறிப்பிட்டபின், நம்மாழ்வார், விஷ்ணுசித்தர் (பெரியாழ்வார்), குலசேகரர், திருப்பாணர், தொண்டரடிப்பொடி, திருமழிசையார், திருமங்கை மன்னன் என்ற முறையில் ஆழ்வார் பதின்மரையும் வரிசைப்படுத்திக் கூறுகிறார். திருமழிசையாரை, முதலாழ்வார்களை ஒட்டிக் கூறவில்லை. திருப்பாணரை, 'நம் பாணநாதன்' என்று விசேஷ அபிமானத்துடன் குறிப்பிடுகிறார்.

மணவாள மாமுனிகள் தமது 'உபதேசரத்தின மாலை'யில் பொய்கையார், பூதத்தார், பேயார் என்ற மூவருக்குப் பின்

திருமழிசையாரைக் குறிப்பிடுகிருர். பிறகு நம்மாழ்வார், குலசேகரர், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி, பாணர், திருமங்கையார் என்ற முறையில் கூறியுள்ளார். இவர் பாணரை 'நற்பாணன்' என்று குறிப்பிடுவர்.

இராமாநுச நூற்றந்தாதியோ முதலாழ்வார்களை ஒட்டித் திருப்பாணரைக் குறிப்பிட்டுத் திருமழிசையாரையும் குறித்துச் செல்லுகிறது. திருமழிசையாழ்வார் வாழ்ந்த காலத்தை ஒட்டித் திருப்பாணழ்வாரும் கி. பி. எட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்திருக்கக் கூடும் என்று ஊகிப்பது தவருகாது.

திருப்பாணுழ்வார், கலியுகம் 343-வது துன்மதி ஆண்டு, கார்த்திகைத் திங்களில் உரோகிணி நடசத்திரத்தில் புதன் கிழமை தோன்றியதாகக் குருபரம்பரைக் கதைகள் கூறு கின்றன. ஆண்டுகளின் பெயர் முதலியன பிற்காலத்தில் சேர்க்கப்பட்டவை என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

கார்த்திகையில் உரோகிணிநாள்
காண்மி(ன்) இன்று காசினியீர்!
வாய்த்த புகழ்ப்பாணர்
வந்துதிப்பார்—ஆத்தியர்கள்
அன்புடன் தான்அமல
ஞதிபிரான் கற்றதற்பின்
நன்குடனே கொண்டாடும் நாள்

என்று தெரிவிக்கிறது உபதேசரத்தின மாலை.

**பாணரும் விப்பிரநாராயணரும்:**

திருப்பாணுழ்வார், தொண்டரடிப்பொடி யாழ்வாருக்கு முற்பட்டவர் என்று ஊகிப்பதற்குத் தொண்டரடிப்பொடி யாழ்வார் வாக்கிலே ஒரு குறிப்பு உண்டு. நான்மறையாளர் களான அந்தணர்களை நோக்கி ஒரு பாட்டும், ஸ்ரீவைஷ்ணவ

அந்தணர்களை நோக்கி ஒரு பாட்டும் தொண்டரடிப்பொடிகள் அருளிய திருமாலையில் காணப்படுகின்றன.

இந்த இரண்டு பாடலகளும், முனிவாகனராய்ச் சென்று, அரங்கநாதனை அநுபவித்த திருப்பாணரை உள்ளத்தில் கொண்டு, தொண்டரடிப்பொடிகள் பாடியிருப்பதுபோல் அமைந்திருக்கின்றன.

'இழிகுலத்தவர்களாயினும் அடியார் தொழத்தக்கவர்கள்' என்று அரங்கநாதனே தமக்கு உபதேசித்ததாகத் தொண்டரடிப்பொடிகள் பாடுகிறார். நான்மறையாளர்களை விளித்து, 'இப்படி எனக்கு அரங்கநாதனே அருளிச் செய்தான்' என்று சொல்லுகிறார்.

'எக்குலத்து அடியவர்களும் நான்மறையாளர்களின் தொழுகைக்கும் உரியவர்களே; தெய்வ சமானர்களாகத் தொழுதற்கும் உரியராவர்' என்று தொண்டரடிப்பொடிகள் தெரிவிக்கிறார். 'பழுதில்லாத பரம்பரையில் வந்து, அதற்கு இசைந்த ஒழுக்கமும் பெற்று, நான்மறைகளையும் நன்கு கற்ற அந்தணர்களும் வந்தனை செய்யவேண்டும் அடியார்களை' என்கிறார் விப்பிரநாராயணர் என்ற தொண்டரடிபபொடிகள். 'தொழுமின் நீர், கொடுமின், கொள்மின்' என்பது இவர் வாக்கு.

அடியவர்களை வந்தனை செய்யாது, நிந்தனை செய்பவர்களின் கதியை அடுத்த பாட்டில் குறிப்பிடுகிறார்: 'அடியவர்களைப் புலையர் என்று பழித்தால் பழித்தவர்களே புலையராகி விடுகிறார்கள்' என்கிறார்.

இந்தத் தண்டனை, மரணத்திற்கு அப்பால், மறுபிறப்பிலே கிடைப்பதன்று; இந்தப் பிறவியிலேயே, 'பழிப்பது ஒரு கணம், பழித்தவர்களே புலையராவது மறு கணம்' என்றவாறு தண்டனை நிறைவேறிவிடுகிறதாம்.

இந்தப் பாடல்களைக் குறித்தும், இவற்றின் பொருளாழம் குறித்தும், தொண்டரடிப்பொடி யாழ்வாரைக் குறித்துப் பேசும் போது விரிவாக ஆராய்வோம். இப்போது, இந்தப் பாடல் களில் ஒன்றுக்கு வியாக்கியானமிடும் பெரியவாச்சான் பிள்ளை, 'லோக ஸாரங்க மாமுனிகள் தலையிலே திருப்பாணாழ் வாரை வைத்து, இவ்வர்த்தத்தை இறைவனே விளக்கிக் காட்டியதாகக்' கூறுவதை மட்டும் சுட்டிக்காட்டலாம்.

திருப்பாணர் வரலாற்றைத் தொண்டரடிப்பொடி யாழ் வார், தம் உள்ளத்தில் கொண்டு, பாடி யிருக்கவேண்டும் என்பதை வியாக்கியான சக்கரவர்த்தியின் அபிப்பிராயமாகக் கொள்ளலாம். எனவே, திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்திற்கு முன்பு, திருமழிசையாழ்வார் காலத்தை ஒட்டி, இவர் வாழ்ந்திருக்கக் கூடும் என்று துணியக் கூடும்.

# 15

# கதையும் படிப்பினையும்

யாழையே தெய்வமாகப் போற்றி வந்த பாணர் குலத்தில் தோன்றியவர், அந்த இசையாகவும் இசைப் பயனாகவும் இருக்கும் தெய்வத்தைத் திருவரங்கப்பெருமானைக் கண்டு கொண்டார். 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்று சுந்தரமூர்த்திசுவாமிகள், சிவபெருமானை இசை வடிவத்திலும் கண்டார். அப்படியே ஆழ்வார்களிலும், இசைப்பயனாகவும் இசை உருவாகவும் இறைவனைக் கண்டவர்கள் உண்டு.

எனினும் ஆழ்வார் நாயன்மார்களில் இறைவனை இசை வடிவமாகவே, இசையின் பொருளும் பயனுமாகவே கண்டு கொண்டவர்களில் பாண்குலப் பெரியார்களான திருப்பாணரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

### திருப்பாணரும் பெரும்பாணரும் :

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருமுனைப்பாடி நாட்டில் தோன்றிச் சிவபெருமானின் பல திருப்பதிகளுக்கும் சென்று, யாழிசைத் தொண்டு புரிந்து வழிபட்டு வந்தனர். திருப்பாணரோ சோழர் பேரூராகிய உறையூரில் தோன்றி, அரங்கநாதனுக்கே இசைத்தொண்டு புரிந்து வந்தார்.

யாழ்ப்பாணர், திருஞான சம்பந்தரின் இன்னிசைப் பதிகங்களை, யாழில் இட்டுப் பாடிப் பேறு பெற்ருர், திருப்பாணரோ தம்முடைய பாடல்களையே யாழில் தொடுத்துப் பாடித் தம் இறைவனை ஆராதித்தார்.

யாழ்ப்பாணர், குரு அருளால் வீடு பெற்றவர்களில் ஒருவர் என்பர். இவரது குரு திருஞானசம்பந்தர். திருப்பாணருக்கோ குருவும் தெய்வமும் அரங்கநாதன் தான். 'நீள்மதிள் அரங்கத்து அம்மான்' என்று இவர் போற்றும் பெருமானே வடவேங்கடவனுகவும் ராமனுகவும் கண்ணனுகவும் இவரால் குறிக்கப் படுகிருன்.

திருநீலகண்ட யாழ்ப்பாணரின் பிள்ளைப் பெயர் 'திருநீல கண்டன்' என்பது. இவரை 'யாழ்ப்பாணர்' என்றும், "பெரும் பாணர்" என்றும் குறிப்பிடுவது உண்டு; திருப்பாணரின் பிள்ளைப் பெயர் மறைந்துவிட்டது. 'தாம் வளர்ந்த பாணர் குடிக்கு இசைய யாழிசை பாடும் ஆற்றல் பெற்றிருந்ததால் இவரைப் 'பாணர்' என்றே சிறப்பித்து அழைத்தனர் எனக் கருதலாம். இவரது பக்தியை வியந்து, தொண்டர் குலத்தினர், 'திருப் பாணர்' என்றனர்.

**கதைகளும் ஊகங்களும் :**

திருப்பாணர், உறையூரிலே ஒரு கழனியில் செங்நெற்கதிரிடமாகக் காணப்பட்டுப் பாணர்குலக் குழந்தையாக வளர்ந்ததாகக் குரு பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. இவர், தாய் வயிற்றிலிருந்து பிறவாதவர் என்பது கருத்து.

இவர், தாய்ப்பால் உண்ணுமல் ஆவின் பாலையே உண்டு வளர்ந்தவரென்றும் கதைகள் கூறுகின்றன. இந்தச் செய்திகளைப் புனைந்துரை யென்றே இன்றைய ஆராய்ச்சியாளர் கருதுவர்.

இறைவனுடைய வடிவழகை, நெஞ்சு என்னும் உட்கண்ணுல் கண்டு, அந்த அழகையே இசை வடிவத்தில் வெளியிட்டு

மகிழ்ந்தார் இவர். திருவரங்கத்தின் தென்பால், காவிரிக் கரையிலுள்ள உறையூர், இசை பாடும் பாணர்களுக்கும் அரங்கன் அடியார்களுக்கும் விசேஷ உகப்பைத் தந்த ஒரு தலமாக இருந்தது. இந்த அடியவர்கள் பரப்பிய பக்தி, ஒரு பாணரைத் தீண்டி, திருப்பாணராக்கியது என்று கருதுவது தவறாகாது.

தர்மவர்மன் என்ற சோழனுக்குத் திருமகளை ஒத்த ஒரு பெண்ணரசி உதித்ததாகவும், அவள், அழகிய மணவாளனையன்றி மானிடவர்க்கு வாழ்க்கைப்படேன் என்று பிடிவாதமாக இருந்ததாகவும், நீளாதேவியே அப்படி அவதரித்து, அழகிய மணவாளனுக்கு மனைவியானதாகவும் கதை வழங்குகிறது. இவளையே **உறையூர் நாச்சியார்** என்று பிரசித்தமாகக் கூறுவது உண்டு. இத்தகைய தலக் கதைகளும் திருப்பாணரது பக்தியை இளமையிலேயே தூண்டி வளர்த்திருக்க வேண்டும்.

பாணர் குலத்தில் தோன்றிப் பரம பாகவதனாகத் திகழ்ந்த நம்பாடுவான் கதையும் திருப்பாணரது பக்திப் பயிரை வளர்ப்பதற்குப் பெருந் துணையாக இருந்திருக்க வேண்டும். திருக்குறுங்குடிக்கு அருகிலுள்ள முனிக்கிராமம் என்னும் ஒரு குக்கிராமத்துச் சேரியில் ஒரு பாணனுக்குப் புதல்வனாகப் பிறந்தவன் நம்பாடுவான். இளமை தொடங்கி, இடையறாத பக்தி, இவனை ஆட்கொண்டது.

பக்தனாக விளங்கியதுபோல் இவன் ஞானசீலனாகவும் இருந்தான். திருக்குறுங்குடி என்ற திருப்பதிக்கு நாள்தோறும் சென்று, யாழும் கையுமாகத் 'திருக்குறுங்குடி நம்பி' என்று பிரசித்திபெற்ற அப் பெருமானின் வடிவழகை யாழிசையில் அமைத்துப் பாடுவான்.

பாணர் குலத்தினனானதால் கோவிலுக்குள் செல்ல வழியின்றி மதிலுக்கு வெளிப்புறத்தில் நின்றுகொண்டு, குறுங்குடி நம்பியின் வடிவழகை நெஞ்சால் பாவனை செய்து, பெருமானின்

திருப்புகழைப் பாடுவான். நம்பியும், 'பக்தன் நாம் இருக்கும் இடத்திற்கு வரவில்லையே' என்று, தாமே இவன் இருக்கும் இடத்திற்கு வந்து, காட்சி வழங்குவாரும். இப்படி வெகுகாலம் நடந்து வந்தது. (இக்கதையின் இப்பகுதி பாணரைச் சிறப்பாக வசீகரித் திருக்கவேண்டும்.)

ஒருநாள்–கார்த்திகைத் திங்கள் சுக்கில பட்சம் ஏகாதசி நாளில்-நம்பாடுவான் யாழும் கையுமாக, வழக்கம்போல் திருக்குறுங்குடிக்குப் போய்க்கொண் டிருந்தான். நம்பியின் வடிவழகை அகக்கண்ணுல் அநுபவித்துக்கொண்டே நடந்து சென்றுன். அதனுல் வழி தவறி, ஒரு காட்டுக்குள்ளே போய் விட்டான்,

'பசியோ பசி! உணவே! இங்கு வந்துவிடு; மரியாதையாக வந்துவிடு; இதோ உன்னைப் பட்சணம் செய்யப்போகிறேன்' என்ற ஒரு ராட்சஸக் குரலைக் கேட்டு, நம்பாடுவான், சிந்தனை கலந்து, 'எங்கேயோ வந்துவிட்டோமே!' என்று மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சத்திலே அங்குமிங்கும் பார்த்தான். இருளை இருள் தாக்குவதுபோல நின்ற ஒரு பிரமராட்சஸனைக் கண்டதும், நம்பாடுவான் சற்றுத் திடுக்கிட்டு நின்றுன்.

பக்தனல்லவா?-பயம் ஏது? 'அவசரமாகக் குறுங்குடி நம்பியைப் போய்த் தரிசிக்கவேணுமே; தாமதம் ஆகிவிட லாகாதே' என்ற ஒரே கவலைதான் இப்போது. விஷயம் தெரிந்துகொண்டதும், அமைதியாகப் பிரமராட்சஸனைத் தீப்பந்தம்போன்ற அவன் பார்வையின் வெளிச்சத்திலேயே உற்று நோக்கி, 'ஏனப்பா இந்த அவசரம்? ஐயோ, பாவம்! அவ்வளவு கடும் பசியா?' என்று அன்போடு கேட்டான் நம்பாடுவான்.

பிரமராட்சஸன் சற்றுத் திகைத்து நின்றுன். அப்போது நம்பாடுவான், 'குறுங்குடி நம்பியைச் சேவித்து, மீண்டு வரும் போது உனக்கு இரையாவேன். இந்த உடம்பு அப்படியாவது

பயன்பட்டால் போதும்! உன் பசிப்பிணி போக்கும் அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கும் அஞ்சேன்!' என்ருன்.

ஆனுல் அந்தப் பசியனுக்கு நம்பிக்கை பிறக்கவேணுமே: பாகவதனுடைய முகத்தை நோக்கினுன், பிரமராட்சஸன் ஒரு கணம். அந்த விழிகளின் தீயை அணைத்துவிட்டது இந்த முகத்திலே பொங்கிய அன்பு. 'திரும்பி வருவதாகச் சத்தியம் செய்துகொடு' என்ருன் பிரமராட்சஸன்.

அப்படியே சத்தியம் செய்துகொடுத்து, விடுபட்டு, விரைந்து சென்று, நம்பி சந்நிதியை அடைந்தான் நம்பாடுவான். வழக்கம் போல் யாழை மார்பில் தாங்கி, அந்த நெஞ்சில் குடிகொண் டிருந்த பக்திக்காதலை அப்படியே இசையில் கொட்டி, விரல்கள் சிவப்பெய்தத் தடவி மிழற்றினுன். சோனை மாரியாக இசை மாரி பொழிந்தான். இந்த ஏகாதசியில் நம்பி அடைந்த உவப்பிற்கு அளவில்லை.

மீண்டு வந்து நம்பாடுவான் பிரமராட்சஸனுக்கு எதிரே நின்ருன். பிரமராட்சஸன் பேராச்சரியத்துடன், 'சுவாமி! அடியேனைக் காப்பாற்ற வேணும்' என்று காலிலே விழுந்தான். பிறகு கைகூப்பி நின்று, 'அடியேன் முற்பிறவியில் ஒரு பிராமணனுயிருந்து தவறுகள் செய்ததால் இந்த உருவம் பெற்றிருக்கிறேன். இவ்வுருவிலே தங்களையும் கொல்ல நினைத்தேனே! நான் எப்படிப் பிழைத்துப் போவேன்?' என்ருன்.

'இவனுக்கு நாம் இனி என்ன செய்ய முடியும்?' என்று ஆலோசித்தான் நம்பாடுவான். பிரமராட்சஸன், 'எம்பெருமானை இசையால் உகப்பிக்கும் தங்களுக்கு அரியதும் உண்டோ? தங்களுடைய செல்வத்தை யெல்லாம் அடியேனுக்கு வழங்கிவிட்டால், இந்தச் சாபத்திலிருந்து உய்ந்து போவேன்!' என்ருன்.

'அப்படி நம்மிடம் என்ன செல்வம் இருக்கிறது? பொருட் செல்வம் அல்ல இவன் விரும்புவது. அதற்கும் நமக்கும் ஒரு

தொடர்பும் இல்லையே! அது நம்மிடம் இருந்தாலுங்கூட இவனுக்கு எப்படிப் பயன் அளிப்பதாகும்?' என்று மறுபடியும் ஆலோசித்தான் நம்பாடுவான். தன்னிடம் உள்ள பக்திப் பெருஞ் செல்வத்தை வாரி, வழங்கி, உய்விக்க முடியும் என்பதை நம்பாடுவானும் நினைத்துப் பார்க்கவில்லை.

தான் ஒரு பக்தன் என்ற நினைவும் இன்றியே பக்தி பண்ணிக்கொண்டிருந்தவன். 'நீசனேன், நிறைவு ஒன்றும் இலேன்' என்ற பெரும் பணிவுநிலையில் இசைத்தொண்டு ஆற்றிவந்தவன்தானே.

பளிச்சென்று பிரமராட்சஸன் குறுக்கிட்டு, 'தாங்கள் எம்பெருமானை உகப்பிக்கும் அந்த இசைப் பெருஞ்செல்வத்தின் பயனை அளித்தால்தான் இந்தச் சாபத்திலிருந்து அடியேன் விடுதலை பெற முடியும். ஆனால் எப்பேர்ப்பட்ட தியாகத்தைத் தாங்கள் செய்யவேண்டியிருக்கும்! அடியேனுக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று சொல்லிப் பெருங் கவலையுடன் நின்றான்.

'அப்படியே இசையின் பயனை உனக்கு வழங்குகிறேன்' என்ற நம்பாடுவான் குரல், பிரமராட்சஸன் செவியில் அமுதமாய்ப் பாய்ந்தது. உடனே விடுதலை பெற்றுப் பிரமராட்சஸன் நம்பாடுவானை வாழ்த்தி வணங்கி, விடைகொண்டான்.

இது நிகழ்ந்த கார்த்திகைத் திங்கள் வளர்பிறை ஏகாதசியைக் 'கைசிக ஏகாதசி' என்று சொல்லுகிறார்கள். கைசிகம் என்பது ஒரு பண்ணின் பெயர். இந்தப் பண்ணிலே நம்பாடுவான் விசேஷமாகப் பாடுவது உண்டென்றும், இந்தப் பண்ணை இவன் பாடக் கேட்டு திருக்குறுங்குடி நம்பியும் உகந்து அருளினனென்றும் சொல்லுகிறார்கள்.

நம்பாடுவான் கதையை வராகபுராணத்தில் 'கைசிக மான்மியம்' என்ற பகுதியில் விரிவாகக் காணலாம். இத்தகைய

புராணக்கதைகளும் திருப்பாணரின் இன்னிசைத் தொண்டு வளர்ந்தோங்குவதற்குப் பயன்பட்டிருக்கக் கூடும்.

## தீண்டாமையும் தொழுகுலமும்:

திருப்பாணர் கதையில் தீண்டாமையின் இன்னல்களைக் காண்கிறோம். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் கதையிலும் தீண்டாதார் துயரத்தைக் காணலாம். யாழ்ப்பாணரும் கோவிலுக்குள் பிரவேசம் இன்றி வெளியே நின்று, இசைத் தொண்டு புரிந்தவரே.

'பாட்டுக்கு உருகும் தமிழ்ச் சொக்கன்' என்று சொல்லப் படும் மதுரைச் சொக்கநாதர், யாழ்ப்பாணரின் இசைக்கு உருகித் தொண்டர்களின் கனவிலே தோன்றி, அவரைச் சந்நி திக்கு அழைத்துவருமாறு பணித்தாராம். திருவாரூர்ப் பெருமானும், யாழ்ப்பாணர், தம்மை நேரே தரிசிக்குமாறு வட திசையில் ஒரு வாசலை வகுத்தருளினாராம்.

'இன்று இரவு தங்குவதற்கு யாழ்ப்பாணருக்கு ஓர் இடம் கொடுக்கவேணும்' என்று சம்பந்தர் சொன்னதும், திருநீலநக்கர் என்ற மறையவர் நடுமனையில் இடங்கொடுத்தார். பெரிய புராணத்தில் காணப்படும் இச் செய்திகளிலிருந்தே, திருஞான சம்பந்தர் காலத்திலும் தீண்டாமையின் இன்னல், நாட்டிலே காணப்பட்டது எனலாம்.

திருப்பாணர் காலத்திலும் நந்தனார் காலத்திலும் தீண்டா மையின் இன்னல் அதிக அளவில் இருந்ததாக ஊகிக்கலாம். 'விலகிப் போ!' என்று கூச்சலிட்டும் கற்களை எறிந்தும் திருப் பாணரைத் துரத்த முயன்றதாக வரும் கதைப்பகுதி அக்காலத் தில் 'தீண்டாதார்' நிலையைக் காட்டுகிறது.

ஆனால் நந்தனார் கதையில், தீக்குளித்து நந்தமாமுனியாகி நடராஜப் பெருமானை அடைந்த நிகழ்ச்சி கூறப்படுகிறது.

திருப்பாணரோ லோகஸாரங்க முனிவரின் தோளில் தம் திருமேனியுடன் சென்று பேறுபெற்றவர்.

'தீண்டாமை' கடுமையாக அநுஷ்டிக்கப்பட்டுவந்த காலத்திலே, தொழுகுலம் தொண்டக் குலமே என்பதை மெய்ப்பித்தவர்களில் திருப்பாணருக்கு ஒரு சிறப்பான ஸ்தானம் உரியது. இது பாணர் கதையின் படிப்பினை.

# 16

# வாக்கும் வாழ்க்கையும்

திருப்பாணர், இசைப்புலமையுடன் இயற்றமிழ்ப் புலமையும் உடையவர். இவர் இயற்றிய பிரபந்தம், பத்தே பாடல்களுடன் கூடிய சின்னஞ்சிறு பிரபந்தந்தான். இந்தப் பாசுரங்களிலிருந்தே இவரது புலமைத் திறனையும் பக்திக் காதலையும் ஒருங்கே ஊகித்துக்கொள்ளலாம்.

இத்தகைய இசைத்தமிழ்ப் பாடல்கள் பல இவரால் பாடப்பெற்றிருக்கவேண்டும் என்றும், இந்தப் பத்துப் பாடல்கள் தவிர மற்றவை காலவெள்ளத்தில் மறைந்துவிட்டன என்றும் ஊகிப்பது தவறாகாது.

### பிரபந்தத்தின் போக்கு :

'அமலனாதிபிரான்' என்ற இந்தப் பிரபந்தத்தின் முதற் பாட்டே திருப்பாணரின் பக்தியுள்ளத்தை வசீகரமாக வெளியிடுகிறது. 'அமலன்' என்று பிரபந்தத்தைத் தொடங்கி, இறைவன் தம்மைத் தூய்மையாக்கி, ஆட்கொண்டதை வெளியிடுகிறார். தமக்கு ஒளிகாட்டி நெறிகாட்டிய பெருமானை, 'நிமலன்' என்கிறார்.

பொன்னுடை, புழுதி படியாமல் 'ஆதியஞ்சோதி உரு'வை விண்ணகத்தே வைத்துக்கொண்டு, விலகி இருந்துவிடவில்லை யாம் இறைவன். தீண்டாதாரையும் தீண்டித் தூய்மை செய்கிருன் என்ற புதைபொருள் தோன்ற இறைவனை, 'நிமலன்' என்றும், 'நின்மலன்' என்றும், 'நீதிவானவன்' என்றும் குறிப்பிடுகிருர்.

இத்தகைய இறைவனது அருளுக்கு அறிகுறியான மலரடிகளைக் கண்ணுள்ளும் கருத்துள்ளும் காண்கிருர். குழந்தைக்குத் தாய்ப்பால் போன்றது தொண்டனுக்கு இறைவனது அடிநிழல் என்ற அருள்.

இந்தக் கொள்கை திருமாலடியார்களைப்போல் சிவநேசர்களுக்கும் உரியதாகும்.

> இறைவன் கழல் ஏத்தும்
> இன்பம் இன்பமே

என்றும்,

> செல்வன் கழல்ஏத்தும்
> செல்வம் செல்வமே

என்றும் சைவ உலகின் தனிநாயகமாகிய திருஞான சம்பந்தர் கூறியுள்ளார்.

திருநாவுக்கரசரும் சிவபெருமானது வடிவழகில் ஈடுபட்டு அந்த அழகனது அருளுக்கு அறிகுறியான திருவடியைப் பாடுகிருர்:

> திருவுடை அந்தணர்
> வாழ்கின்ற தில்லைச்சிற்
> றம்பலவன்
> திருவடி யைக்கண்ட
> கண்கொண்டு மற்(று)இனிக்
> காண்பதென்னே!

இதே கருத்தை உட்கொண்டு 'என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று, தம் பிரபந்தத்தை முடிக்கிறார் திருப்பாணாழ்வார். 'மலைமங்கை மணாள'னுடைய பக்தியநுபவத்தில் எல்லா அநுபவங்களும் அடங்கியுள்ளன என்பது அப்பர் குறிப்பு. அரங்கநகர் அப்பனாகிய அழகிய மணவாளனை அநுபவிப்பதில் எல்லா அநுபவங்களும் தமக்குக் கிடைத்துவிட்டதுபோன்ற உணர்ச்சியைத் திருப்பாணர் பெற்றிருக்கிறார்.

## திருமலையும் திருப்பாணரும் :

திருவேங்கடம், இந்த ஆழ்வாருக்கு அரங்கநாதனின் வடக்குத் திருமாளிகைதான். 'வண்டுவாழ் பொழில் சூழ் அரங்க நகர்' என்று பாடுகிறவர் 'விரை ஆர் பொழில் வேங்கட'த்தையும்–பரிமளம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவேங்கடத்தையும்-பக்திக் காதலுடன் குறிப்பிடுகிறார்.

மந்திபாய் வடவேங்கட
மாமலை

என்று திருவேங்கடத்தைக் குறிப்பிடுவதால், இந்த ஆழ்வார் தம் காலத் தமிழ்நாட்டின் வட எல்லையான திருமலையையும், அங்கே குரங்குகள் மரங்களில் பாய்ந்துகொண் டிருப்பதையும் நேரில் பார்த்திருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

## இயற்கை அழகுகளில் அழகிய மணவாளன் :

'விரைஆர் பொழில்' என்றும், 'கடிஆர் பொழில்' என்றும், 'அஞ்சிறைய-அழகிய சிறகுகளைக் கொண்ட–வண்டு வாழ் பொழில்' என்றும் சோலைகளை இவர் வருணிப்பதிலிருந்தும், 'அந்திபோல் நிறத்து ஆடை' என்று இறைவனது பீதாம்பரத்தைக் குறிப்பிடுவதிலிருந்தும், குரங்குகள் பாய்வதையும் வண்டுகள் பாடுவதையும் மயில்கள் ஆடுவதையும் பாடியிருப்பதிலிருந்தும் இந்த இசைச் செல்வரின் உள்ளம் இயற்கை

அழகுகளில் ஈடுபட்டிருந்தது என்பதும் புலனாகும். இயற்கை அழகுக ளெல்லாம் இவருக்கு இறைவன் திருமேனியின் அழகுத் துணுக்குகளே!

தம்மைச் சூழ்ந்திருந்த படைப்பின் அதிசயங்களைக் கொண்டே இறைவனது அதிசயப் பெருஞ் சக்திகளை இவர் ஊகித்துக்கொண்டார். செந்தாமரைப்பூ ஒன்றே இவருக்கு இறைவன் திருவடிகளையும் திருமுகத்தையும் கண்களையும் நினைவூட்டியிருக்கக்கூடும் அல்லவா? உலகம் பூத்த உந்தியும் ஒரு தாமரைதானே!

நீல வானமும் நீலக் கடலும் இறைவனது நீல நிர்மல மேனியை நினைவூட்டியிருக்கும். வானத்திலுள்ள மேகமும் வான வில்லும் அன்புருவாகிய அழகனது திருநிறத்தையும் வசீகர மேனியையும் நினைவூட்டி யிருக்கக்கூடும்.

ஆனந்தமான காலை வேளை, 'உவந்த உள்ளத்தன்' இறைவன் என்பதை அறிவித்திருக்கும், காலைக் கதிரவன் கீழ்வானத்தில் ஏறி, உச்சநிலைக்கு வந்து, அந்த விண்ணையெல்லாம் சாடி, அப்பாலும் போவது, 'நீள்முடியனு'ன இறைவன் அண்டமுற நிமிர்ந்து, உலகங்களை அளந்த கதையை நினைவூட்டியிருக்கும்.

இருளைப் போக்கிய கதிரவன், நிசாசரராகிய, இருளில் சஞ்சரிப்பவராகிய-அரக்கர்களை ஒழித்த ராமனை நினைவூட்டியிருக்கும். ஆரம் பூண்ட இறைவனது திருமார்பை, மாலையிடுவதுபோல் ஓடிக்கொண் டிருக்கும் காவிரியும் கொள்ளிடமும் நினைவூட்டக் கூடியனவே!

வேங்கட மலையும் வேறு எந்த மலையும் இவருக்கு மலை போன்ற இறைவன் திருமேனியை ஞாபகப்படுத்தியிருக்கும்! 'இறைவனுடைய அணிகளுக்கு ஓர் எல்லை இல்லை' என்பதை எங்கும் மட்டுப்படாது கொட்டிக்கிடக்கும் இயற்கை அழகுகளே உபதேசித்திருக்கக்கூடும்.

இந்த இறைவனே கண்ணனை கண்ணனாகி, வெண்ணெய் கவர்ந்துண்டான் என்ற கதை, இசை வடிவிலே இறைவனைக் காண முயன்று முயன்று உருகிக்கொண் டிருந்த உள்ளத்திற்கு எவ்வளவோ ஆறுதல் அளித்திருக்கவேண்டும். இத்தகைய கொள்கையுடன் வாழ்க்கை நடத்திய பாணர் உள்ளம் இறைவனது கமல பாதத்திற்கு வண்டாகி, 'மதுரமா(க) வண்டுபாட' என்றவாறு பாடிக்கொண்டே இருந்தது இயற்கைதான்.

## பழமறையைப் புதுப்பித்தவர் :

திருப்பாணரின் வாழ்க்கையை, இவரைக் குறித்து வழங்கும் கதையில் காண்பதுபோல் இவரது அருமையான வாக்கிலும் காண்கிறோம். இவரது வாழ்க்கையைத் தயிலத்தோணியில் இட்டு வைத்திருப்பதுபோல் காட்டுகின்றன இவர் அருளிய பாடல் பத்தும்.

இந்த வாக்கைப் 'பழமறையின் பொருள்' என்று ஸ்ரீ வேதாந்த தேசிகர் கூறியுள்ளார். இந்த வாக்கு, நான்மறையின் செம்பொருளைச் செந்தமிழால் வெளியிடுகிறது என்பர் திருவரங்கத்தமுதனாரும், தாம் அருளிய இராமாநுச நூற்றந்தாதியில். இருவரும் திருப்பாணரைப் 'பாண்பெருமாள்' என்று குறிப்பிடுகிறார்கள்.

பாண்பெருமாளின் திருவடிக் கமலத்தை ஸ்ரீ ராமாநுஜரும் முடியில் தரித்துக்கொண்டார் என்று இராமாநுச நூற்றந்தாதி அறிவிக்கிறது:

சீரிய நான்மறைச் செம்பொருள்
செந்தமி ழால்அளித்த
பார்இய லும்புகழ்ப் பாண்பெரு
மாள்சர ணாம்பதுமத்
தார்இயல் சென்னி இராமா
நுசன்தன்னைச் சார்ந்தவர்தம்

காரிய வண்மைஎன் னுல்சொல்
லொணு(து)இக் கடலிடத்தே.

**பாணரும் கவிச்சக்கரவர்த்தியும் :**

திருப்பாணர் வாக்காகிய அமலனுதிபிரான் என்ற பிரபந்தத்தில் கவிச்சக்கரவர்த்தியான கம்பனுக்கும் விசேஷ ஈடுபாடு உண்டு என்று தெரியவருகிறது. அங்கபங்கமுற்ற சூர்ப்பணகை ராமலட்சுமணரை நோக்கிச் சீறி,

காற்றினிலும், கனலினிலும்
கடியானைக் கொடியானைக்
கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே
கொணர்கின்றேன் என்றுசலம்
கொண்டு போனுள்.

என்று கூறியபின், கரனிடம் செய்தி சொல்லிச் சில அரக்கர்களை அழைத்துவருகிருள்.

இதற்கிடையே பதினுன்கு பாடல்களில், சூர்ப்பணகை, கரனிடம் சென்று பேசிக் கடுங்கோபத்தைத் தூண்டியதும், அவன் உடனே போருக்குப் புறப்படுவதும், அந்தத் தலைவனை அப்படியே நிற்கச் செய்துவிட்டுச் சில அரக்கர்கள் முற்பட்டுப் போருக்கு வருவதும் வருணிக்கப்படுகின்றன. அதே சமயம் ராமன் என்ன நினைத்தான். அந்த நினைவின் விளைவாக என்ன செய்தான் என்பதைப் பேசாத பேச்சாகக் காட்டுகிறது கம்ப சித்திரம். இது 'கரன் வதைப்படல'த்தில் வரும் பதினைந்தாவது பாடலால் ஊகிக்கப்படும்.

இந்த அருமையான பாட்டிலேதான் கவிச்சக்கரவர்த்தி, திருப்பாணரது பிரபந்தத்தின்மீது தனக்குள்ள ஈடுபாட்டை இலைமறை காய்போல் காட்டியிருக்கிருன்:

துமிலப் போர்வல்
அரக்கர்க்குச் சுட்டினுள்,
அமலத் தொல்பெயர்
ஆயிரத்(து) ஆழியான்
நிமலப் பாதம்
நினைவில் இருந்தஅக்
கமலக் கண்ணனைக்
கையினிற் காட்டினுள்.

இந்தப் பாட்டின் பொருளை நன்கு உணர்ந்துகொள்வதற்கு முன்பே 'அமலனுதிபிரான்' என்ற பிரபந்தத்தின் முதற் செய்யுள் நினைவிற்கு வந்துவிடுகிறது. அச்செய்யுளின் 'அமலன்' 'நிமலன்' 'கமல்' என்ற எதுகைச் சொற்களும் ஞாபகத்திற்கு வந்துவிடுகின்றன.

'அமலன் ஆதிபிரான்' என்று தொடங்கும் செய்யுள், கம்பன் உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்திருககவேண்டும். அந்த ஆழத்திலிருந்து எழுந்ததுதான், 'துமிலப் போர்வல் அரக்கர்க்கு' என்று தொடங்கும் கம்பன் செய்யுள் என்பது தெளிவு.

இனி, நாம் மேலே காட்டிய கம்பராமாயணச் செய்யுளை உற்றுநோக்கி அதன் பொருளையும் தெளிவாகத் தெரிந்துகொள்வோம். அட்டகாசம் செய்து, பேரிரைச்சல் இட்டுக்கொண்டு வந்த அரக்கர்களுக்கு ராமனைச் சுட்டிக் காட்டுகிறுள் சூர்ப்பணகை.

ராமன், இப்போது என்ன செய்துகொண் டிருக்கிறுன்? வேறென்றும் செய்யாமல் தியானத்தில் அமர்ந்திருககிறுனும். 'அமலத் தொல்பெயர்' என்று சொல்லத்தக்க ஆயிரம் பெயர்களையுடைய இறைவனது பாதத்தை நினைவில் இருத்திக் கொண்டு, தியானத்தில் அமர்நதிருக்கிறுனும். இந்தப் பாதத்தை, 'நிமலப் பாதம்—அதாவது, நினைப்பவர்களைத்

தூய்மை செய்து, அதனால் தூய்மையாகியிருக்கும் திருவடி, என்கிறான் கம்பன்.

திருப்பாணர் பாட்டு, இறைவனை, 'நிமலன்' என்று குறிப்பிட்டுத் திருவடிகளைக் 'கமலபாதம்' என்று சுட்டிக்காட்டுகிறது. திருப்பாணரின் உட்கருத்தை அப்படியே நன்கு உணர்ந்து கொண்டவன்போல் நிமலனுடைய கமலபாதத்தை 'நிமலப் பாதம்' என்றே குறிப்பிடுகிறான். குறிப்பிட்டு, நிமலபாதத்தைத் தியானித்த வண்ணம் கண்மூடியிருக்கும் ராமனுடைய அந்தக் கண்களைக் 'கமலக் கண்' என்கிறான்.

'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா?' என்று சொல்வதுபோல், அதோ இருக்கிறானே அவன்தான் நமது எதிரி என்று சுட்டிக் காட்டுகிறாள். 'ஒன்றும் அறியாதவன்போல், பரம சாதுவின் தோற்றத்துடன் அதோ உட்கார்ந்திருக்கிறானே! அவன்தான், அவன்தான் அந்தப் பொல்லாத ராமன்!' என்கிறாள், வல்லரக்கரை நோக்கி,

> கமலக் கண்ணனைக்
> கையினிற் காட்டினாள்

என்ற கவிக்கூற்றிலே சூர்ப்பணகையின் உரையோடு உள்ளமும் புலப்படுகிறது. அந்தக் கண் அழகிலே உள்ளத்தைப் பறிகொடுத்தவள் அல்லவா? 'பாவியேனையும் பார்க்கும் கொலோ?' என்று பரிதவித்தவள் அல்லவா?

இவள் உள்ளம் இருக்கட்டும்: திருப்பாணரின், 'அமலனாதி பிரானி'ன் முதற் செய்யுளை ஒட்டித் தன் செய்யுளை அமைத்துக் கொண்ட கவியுள்ளந்தான் என்ன!

சூர்ப்பணகை, வஞ்சினம் கூறிப் போனபின், 'இந்தத் துஷ்ட அரக்கியுடன் விளையாட்டாகப் பேசியதும் வினைதானே! இதன் விளைவுகள் எப்படி ஆகுமோ?' என்பதுபோன்ற நினைவுகளுடன்

ராமன் தற்சோதனை செய்து பார்த்துக்கொண்டான் என்று கருதலாம்.

தன் வாழ்க்கையின் முக்கியமான சந்தர்ப்பங்களில், 'ஆயிர மௌலியான்' என்ற தனது ஆதிமூர்த்தியை ராமன் தன் திருவுள்ளத்திலே நினைத்துக்கொள்வதாகக் காட்டுகிறது கம்ப சித்திரம்.

'ஆயிரமோலி அரும்பரஞ்சுடரி'ன் நினைவுக்குறிதான் அரங்கநாதன் என்பது ஆழ்வார் – ஆசாரியார்களின் திருவுள்ளம். 'பணியரங்கப் பெரும்பாயல் – பரஞ்சுடர்' என்று அரங்கனைக் கம்பனும் குறிப்பிடுகிருன், விசுவாமித்திரன் வாயிலாக. அரங்கன் வழிபாடு, குலதனமாக ராமனுக்குக் கிடைத்தது என்ற ஸ்ரீரங்க ஸ்தல புராணக் கொள்கை, கம்பனுக்கும் உடன்பாடு தான்.

எனவே, அரங்கநாதனையே, 'ஆயிர மோலியான்' என்றும், 'அமலத் தொல்பெயர் ஆயிரத்து ஆழியான்' என்றும் கம்பன் குறிப்பிடுவதாக ஊகிப்பது பொருத்தமே. 'அமலனுதிபிரான்' என்ற பிரபந்தமும் அரங்கனைப் பாடுவதுதானே.

தம்மைத் தூய்மை செய்து, அதனுல் தானும் தன்னை அமலனுகி மெய்ப்பித்துக் காட்டிய அரங்கனை, நெஞ்சார அநுபவித்துத் திருப்பாணர் பாடியிருக்கும், 'அமலனுதிபிரான்', ஓதி ஓதி உணரும் தொண்டர் உள்ளங்களை யெல்லாம் தூய்மை செய்யும் அருமருந்தாகும். இந்தப் பிரபந்தத்தைக் கவிச் சக்கரவர்த்தியும் தன் உள்ளத்தைத் தூய்மை செய்துகொள்ள விரும்பிப் பல சமயங்களிலும் பாராயணம் செய்து வந்தான் என்று கருதலாம.

'காவிய நாயகன் தன் இதயத்தைச் சோதித்துக்கொண்டு தன்னுடைய ஆதிமூர்த்தியான திருமாலின் சங்கற்பத்தை அறிந்து, அந்தத் தூய அதிகார முத்திரையுடன் கரன் முதலான அரக்கர்களை வதஞ் செய்யப்போகிருன்' என்று சொல்ல

விரும்புகிறது கவியுள்ளம். இநத நிலையில், கவிஞனது நினைவிலே நீங்காதிருந்த திருப்பாணா வாககில் தோய்ந்து வருகிறது இந்தக் கவிச்சிததிரம்.

**வாக்கிலே வாழ்கிறார் ·**

இப்படி யெல்லாம் ஸ்ரீ ராமாநுஜர் முதலான மெய்ஞ்ஞானியரும், கவிச்சககரவாததி போனற மேதாவிகளும் உச்சிமேல் கொள்ளத்தக்க சிறப்பு வாய்நதது திருப்பாணர் திருவாக்கு. தமது வாழ்க்கையின சாரமாக இந்தப் பிரபந்தத்தை அருளிய உறையூர்ப, பாணரை, 'மெயஞ்ஞானி' என்றும், 'ஞானவள்ளல்' என்றும், 'முனிதோளில் வந்தபிரான்' எனறும், 'மதிள் அரங்கர் அகம புகுந்தான்' என்றும ஸ்ரீ வைஷ்ணவ உலகம் போற்றுகிறது.

பெரியாழ்வார் பாடுகிறார் :

முத்தும மணியும்
வயிரமும் நன்பொன்னும்
தத்திப பதிததுத்
தலைப்பெய்தாற் போல்எங்கும்
பத்து விரலும்
மணிவண்ணன் பாதஙகள்
ஒத்திட் டிருநதவா காணீரே !
ஒண்ணுத லீரவந்து காணீரே !

அப்படியே திருப்பாணரும் அரஙகநாதனின் கமல பாதத்தைத் தம் கண்ணிலும கருத்திலும நிறைந்து மலர்ந்த அடிமலர்களை—'பாருங்கள் ! பாருஙகள் !' எனறு, பிற்காலத்தில் உள்ளவர்களும் கண்டு ஆறுதல் பெற்று உய்யுமாறு காட்டுகிறார்!

திருபபாணர், தமது திருவாக்கிலே இன்றும் வாழ்கிறார். இவரை அன்பர்கள் விசேஷ நனறியுடன் வாழ்த்தியிருககிறாகள்.

உம்பர்தொழும் மெய்ஞ்ஞானத்(து)
உறையூரான் வாழியே!
உரோகிணிநாள் கார்த்திகையில்
உதித்தவள்ளல் வாழியே!
வம்பவிழ்தார் முனிதோளில்
வந்தபிரான் வாழியே!
மலர்க்கண்ணை வேறொன்றில்
வையாதான் வாழியே!
அம்புவியில் மதிள் அரங்கர்
அகம்புகுந்தான் வாழியே!
அமலனாதி பிரான்பத்தும்
அருளினான் வாழியே!
செம்பொன்அடி முடியளவும்
சேவிப்போன் வாழியே!
திருப்பாணன் பொற்பதங்கள்
செகதலத்தில் வாழியே!

# 17

# அமலனாதிபிரான்

திருப்பாணாழ்வாரின் அநுபவரூபமான பத்துப் பாசுரங்கள் அடங்கியது இந்தப் பிரபந்தம், எளிய நடையில் பொருளும் புதை பொருளும் நிறைந்திருப்பது. கம்பீர நடையில் இதற்கு உரைகள் எழுதப்பெற்றுள்ளன.

இந்தப் பாசுரங்களில் அழகிய மணவாளனின் வடிவழகை, அடிமுதல் முடிவரை அநுபவிக்கிறார், திருப்பாணர். எளியனுக்கு நிதி காட்டுவதுபோல் ஆழ்வாருக்கு இறைவன் தனது அழகைக் காட்ட, அன்பின் மிகுதியால் இவர் இந்தப் பிரபந்தத்தை அருளிச் செய்தாராம்.

'எவர் காவிரி நதியின் நடுவில் அரவணையில் பள்ளி கொள்ளும் ஹரி என்னும் திருநாமம் பெற்ற ஸ்ரீ ரங்கநாதனைத் திருவடி முதல் திருமுடி வரை அநுபவித்து, உவந்த உள்ளத்தராய், தம்முடைய கண்கள் மற்றெதையும் காண மாட்டா என்று துணிந்தாரோ, அத்தகையரான முனி வாகனரை மனத்தால் வணங்குகிறேன்' என்று பொருள்பட, இந்தப் பிரபந்தத்திற்குப் பெரிய நம்பிகள் வடமொழியில் ஒரு தனியன் இயற்றியுள்ளார்.

திருமலை நம்பி என்பார் தமிழில் ஒரு தனியன் அமைத்திருக்கிருர். அதில், 'திருவரங்கன் திருவருளால் காட்டவே, அந்த அடித்தாமரைகள், அழகிய ஆடை, உந்திக்கமலம், உதர பந்தம், திருமார்பு, கழுத்து, சிவந்த வாய், என்றும் வாடாத கண் மலர்கள் ஆகியவற்றைத் திருப்பாணர் 'முனி ஏறித் தனி புகுந்து' கண்டு அநுபவித்தார் என்று கூறப்படுகிறது. திருப்பாணரைத் திருமலைநம்பி, 'பாட்டினுல் கண்டு வாழும் பாணர்' என்று குறிப்பிடுகிருர்.

'புறம்பு இல்லாதவையெல்லாம் இதிலே உண்டு' என்றும், 'இதில் இல்லாதது ஒன்றும் புறம்பு இன்றியே இருக்கும்' என்றும் இந்தப் பிரபந்தத்தின் சிறப்பை வெளியிடுகிருர் பெரிய வாச்சான் பிள்ளை.

அமலன் ஆதிபிரான் அடியார்க்கு
　　என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
　　விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
　　நீள்மதில் அரங்கத்து அம்மான்திருக்
கமல பாதம், வந்துஎன்
　　கண்ணின் உள்ளன ஒக்கின்றதே !

[விரைஆர் பொழில் - மணம் நிறைந்த சோலைகள். அரங்கத்து அம்மான் - திருவரங்கம் - பெரிய கோயிலிலே கண் வளர்ந்தருளும் தலைவன். என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே - என்னுடைய கண்களின் உள்ளனபோல் காண்கின்றன.]

தன்னேடு தொடர்பு கொண்டவர்கள் எக்குலத்தராயினும் எந்நிலையினராயினும் அவர்களை யெல்லாம் தூய்மை செய்து, ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமாக்கிக்கொள்ள வல்ல

வடிகளை, அருளின் செவ்வியும் குளிர்ச்சியும் மலர்ச்சியும் கருதிக் 'கமலபாதம்' என்பர். கதிரவனைக் கண்டு மலர்வது தாமரை. இந்தத் தாமரைக்குக் கதிரவன், திருப்பாணர் என்று பொருள் பட உரை இடுவர் பெரியவாச்சான் பிள்ளை.

இந்தப் பாசுரத்திலே, 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' என்பதில் தற்சரிதக் குறிப்பு ஒன்றைக் காணலாம். அன்புருவாகிய அழகனை இசை வடிவில் ஆராதித்ததுடன், இவர் அன்பர்களுக்குப் பணி செய்ய ஆசைப்பட்டார் என்றும், அதற்குரிய வாய்ப்புகளையும் இறையருளால் பெற்றாரென்றும் ஊகிக்கலாம். இந்த அன்பரின் பணி வாயிலாக இவரை இறைவன் சுத்தமாக்கிய குறிப்பையும், 'ஆட்படுத்த விமலன்' என்ற சொற்றொடரில் கண்டுகொள்ளலாம்.

உவந்த உள்ளத்த னாய்உல
கம்அளந் தண்டம்உற
நிவந்த நீள்முடி யன்அன்று
நேர்ந்த நிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக் காகுத் தன்கடி
யார்பொழில் அரங்கத்து அம்மான்அரைச்
சிவந்த ஆடையின் மேல்சென்ற
தாம்என் சிந்தனையே.

[அண்டம் உற நிவந்த - அண்ட கடாகத்திலே சென்று பொருந்தும்படி உயர்ந்த. அன்று நேர்ந்த - அக்காலத்தில் எதிர்த்துவந்த. நிசாசரரைக் கவர்ந்த-அரக்கர்களின் உயிரைக் கவர்ந்த. வெங்கணைக் காகுத்தன் - கொடிய பாணங்களை யுடைய ராமன். கடி ஆர் பொழில் - மணம் மிக்க சோலைகள். அரைச் சிவந்த ஆடை - அரையிலுள்ள பீதாம்பரம்.]

அடியார்கள் வழிபடுவதால் இறைவன் 'உவந்த உள்ளத்தன' ஆகிறான்.

## ஆட்கொண்ட அழகும் அநுபவமும் :

முதலாவது பாட்டில் திருவடியைக் குறிப்பிட்டவர், இதில் அண்டமுற நிமிர்ந்த நீள்முடியைக் குறிப்பிட்டுத் தம் இஷ்ட மூர்த்தி ராஜாதி ராஜனும் தேவாதி தேவனுமாக இருக்கிறான் என்பர்.

ராட்சஸ இருளைப் போக்கியவன், அக இருள் போக்கி, எக் காலத்திலும் அடியார்களைக் காப்பவன் என்பதை உய்த்துணர வைக்கிறார், 'அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்' என்ற செய்யுட் பகுதியில்.

உலகம் அளந்து, அண்டமுற நிமிர்ந்து, அரக்க இருள் ஒழித் தவன், புகுந்து சாய்ந்தருளிய சோலை திருவரங்கம் என்பர். இப்பெருமானுடைய நீலமேனிக்குப் பரபாகமான பொன்னுடை யின் அழகையும் அநுபவிக்கிறார். இந்தப் பொன்னுடை, புழுதி படிய, மண்ணகம் புகுந்து. மானுடத்தின் வெற்றி காட்டிய ராமாவதாரத்தையும் இப் பாசுரத்தில் பாடுகிறார்.

மந்தி பாய்வட வேங்கட
    மாமலை வானவர்கள்
சந்தி செய்யநின் றான்அரங்
    கத்(து)அர வின்அணையான்
அந்தி போல்நிறத்(து) ஆடை யும்அதன்
    மேல்அய னைப்படைத் த(து)ஓர்எழில்
உந்தி மேல(து)அன் றோஅடி
    யேன்உளத்(து) இன்னுயிரே.

[மந்தி பாய் வடவேங்கடமாமலை - குரங்குகள் அங்கும் இங்கும் \பாய்ந்துகொண் டிருக்கும் திருமலை. சந்திசெய்ய நின்றான் - பூக்களைக் கொண்டு வணங்கும்படி நின்றவனை. அரங்கத்து அரவின் அணையான் – திருவரங்கத்தில் பாம்பணை மேல் பள்ளிகொண்டவன். அந்திபோல் நிறத்து ஆடையும் -

செவவானம போன்ற நிறததையுடைய பீதாமபரமும். ஓர் எழில் - ஒப்பற்ற அழகையுடைய.]

முநதிய பாட்டில பிரஸ்தாபிககப்பட்ட பீதாமபரத்தை, 'அந்திபோல நிறத்து ஆடை' என்று இந்தப் பாசுரத்திலும் குறிபபிடுகிறா. பீதாம்பரத்தின அழகு, படைப்பிற்கெல்லாம் காரணமாகிய உநதியந் தாமரையின் அழகிலே உள்ளத்தைக கொண்டு முட்டுகிறதாம.

'அரங்கத்து அரவின் அணையான்' சயனத திருக்கோலத் தில் தன் அழகை வெளியிடுவதுபோல், வடவேங்கட மாமலை யில், நின்ற திருக்கோலத்திலே தன் அழகை வெளியிடு கிறுனும்.

'திரு அமர் மாாபன் கிடநத வண்ண'த்தைத் திருவரங்கத் தில் காட்டும் சிலப்பதிகாரம், திருவேங்கடத்திலே,

பொலமபூ ஆடையில
பொலிநது தோன்றிச
செஙகண நெடியோன்
நின்ற வண்ணமும்

காட்டுவது இஙகே ஒப்புநோக்கத தககது,

சதுர் மாமதில் சூழ்இலங்
கைக(கு)இறை வனதலைபத்(து)
உதிர ஓட்டிஓர் வெஙகணை
உய்த்தவன ஓதவண்ணன்
மதுர மாவண்டு பாடமா மயிலா(டு)
அரங்கத்தம்மான திருவயிறறு
உதர பந்தமென உளளத்துள்
நின்று உலாகினறதே!

[சதுர மாமதில சூழ் இலங்கை – சதுரமாகக கட்டிய உயர்ந்த மதில்கள் சூழ்ந்த. இலஙகைக்கு இறைவன் – இலங்,

கேசவரனுன ராவணன். தலை பத்து உதிர-பத்துத தலைகளையும் பனங்காய்களைப் போல் உதிரச்செய்து. ஓர் வெங்கணை உய்த்தவன் - ஒப்பற்ற கொடியதொரு பாணத்தைச் செலுத்தியவன். ஓத வண்ணன் - கடல்போன்ற குளிர்ந்த வடிவை உடையவன். மதுர மாவண்டுபாட - மதுரமாக வணடுகள் ரீங்காரம் செய்ய. மாமயில் -சிறந்த மயில்கள். ஆடு அரங்கத்து - ஆடுதற்கு இடமாகிய திருவரங்கத்தில். உதரபந்தம் - உதரபந்தனம என்ற அரைப்பட்டிகை. உலாகின்றதே-நிலைபெற்று உலாவுகின்றது.]

'மதுரமா வண்டுபாட, மாமயில் ஆடு அரங்கம்' என்று நித்தியவசந்தமான சோலை, திருவரங்கம் என்பதைக குறிப்பிடுகிறார் இந்தப் பசுஞ்சோலையில இறைவன் கடல்வண்ணனுகக காட்சியளித்து, அடியவர்களின் சிரமத்தைப் போக்குகிறுனும் தன் வடிவழகினுல்.

இநதத திருமேனியழகில் ராமனுக அவதரித்து, ராவண வதம் செய்தபோது ஏற்பட்ட வீரப்பொலிவும் கலந்து காணப் படுகிறது என்கிறுர்.

'ஸ்ரீவைகுண்டநாதன் பெரிய பெருமாள் ஆனவாறே, நித்திய சூரிகள் - வைகுந்தத்தில் இறைவனுடன் உறையும விண்ணவர்கள- வண்டுகள், மாமயில்களும ஆனபடி! என்பது வியாக்கியானம்.

பாரம் ஆய பழவினை
பற்(று)அறுத்(து) என்னைத்தன்
வாரம் ஆக்கிவைத தான்வைதத(து)
அனறிஎன் உள்புகுந்தான
கோர மாதவம செய்தனன் கொலஅறி
யேன்அரங்கத்(து) அம்மான்திரு
ஆர மார்வது அன்றோ
அடியேனை ஆட்கொண்டதே!

[பாரம ஆய பழவினை – தாங்கமுடியாத பாரமாகவுள்ள வையும் நெடுங்காலமாகச் சேர்த்துவைத்திருப்பனவுமாகிய வினைகள். பற்று அறுத்து – சிறிதும் இலலாதபடி போக்கி. தன் வாரமாக்கி வைத்தான் - தன்னிடம் அன்பனாக்கி வைத்தான். கோர மாதவம் – மகா உக்கிரமான தவம். செய்தனன் கொல் - செய்தேனோ? திரு ஆர மார்வு - திருமகளுக்கும் ஆரத்திற்கும் இடமாகிய மார்பு.]

இறைவன் தம்முள் புகுந்து நிற்கும் நிலையில் ஒன்றுபட்டுப் பேசிய பாசுரம் இது. இறையருள், தமக்கு மூன்று வகைகளில் உபகரித்திருக்கிறது என்கிறார்: 1. பாரமான பழவினைகளைப் பற்றறுத்தது; 2. இவரைத் தன்பால் அன்பனாக்கிக்கொண்டது; 3. இந்த நன்மைகளுக்கும் மேலாக, இவருள்ளம் புகுந்தது.

'பின்னையும் தன் ஆற்றுமையாலே விடாய்த்தவன் - பெரிதும் களைப்புற்றவன் – தடாகத்தை நீககி உள்ளே முழுகுமா போலே, என் உள்ளம் புகுந்தான்' என்பது வியாககியானம்.

இந்தப் பேற்றுக்குக் காரணம் என்னவென்று பார்க்கிறார்: 'இந்திரிய ஜயம் செய்து, கொடுந்தவம் புரிந்தேனோ? நான் அறிய ஒன்றும் இல்லையே!' என்கிறார்.

'திரு ஆர மார்வு அது அன்றோ அடியேனை ஆட்கொண்டதே!' எனற அநுபவத்தையும் அளித்திருக்கிறான் உள்ளம் புகுந்த இறைவன்.

துண்ட வெண்பிறை யன்துயர் தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டு வாழ்பொழில் சூழ்அரங் கநகர் மேய அப்பன்
[வரைமுற்றும்
அண்ட ரண்டபகி ரண்டத்(து) ஒருமா நிலம்எழுமால்
உண்ட கண்டம்கண் டீர்! அடி யேனை உயக்கொண்டதே!

[துண்ட வெண்பிறையன்—ஒரு கலையான வெண்ணிற முள்ள பிறைச்சந்திரனைச் சடையிலே கொண்ட ருத்திரன். அஞ்சிறைய வண்டு - அழகிய சிறகையுடைய வண்டுகள். எழு மால்வரை - ஏழு மலைகளையும். முற்றும் உண்ட - எல்லாம் அமுது செய்த. கண்டம் - கழுத்து.]

'அஞ்சிறைய வண்டு வாழ்பொழில்' என்ற அழகான சொற்றொடரைப் பாருங்கள். பெரிய பெருமாளுக்கு ஆபரண மாய், ஊருக்கும் ஆபரணமாயிருக்கும் சோலை என்றும், சோலைக்கு ஆபரணமாயிருக்கும் வண்டுகள், வண்டுகளுககு ஆபரணமாயிருக்கும் அழகிய சிறகுகள் என்றும் விரித்துப் பொருள் கூறுவதும் உண்டு. அவ் வண்டுகளைப்போலே தம்மை அநுபவிக்கச் செய்து விடாய் கெடுத்தான் இறைவன், என்பது குறிப்பு.

திருமார்பின் அழகு, அண்டங்களை யெல்லாம் அமுது செய்த கழுத்தின் அழகிலே கொண்டு மூட்ட, அந்த அழகு தம்மை ஈடுபடுத்தியது என்கிறுர் இந்தப் பாசுரத்திலே.

கழுத்தின் அழகுக்குமேல் சிவந்த வாயின் அழகு, தம்மை வசீகரித்ததை அடுத்த பாசுரத்தில் பேசப்போகிருர்.

கையின் ஆர்சுரி சங்(கு)அனல்
ஆழியர், நீள்வரைபோல்
மெய்ய ஞர்துள பவிரை
யார்கமழ் நீள்முடிஎம்
ஐய ஞர்(அ)ணி அரங்க ஞர்அர
வின்அணை மிசைமேய மாயனுர்
செய்ய வாய்ஐ யோ!என்னைச்
சிந்தை கவர்ந்ததுவே!

[கையின் ஆர் - கைகளில் பொருந்தியுள்ள. சுரிசங்கு — துவாரமுள்ள சங்கு. அனல் ஆழி - நெருப்பைச் சொரியும் சக்கரம். ஆழியர் - சக்கரத்தை உடையவர். நீள்வரைபோல்

மெய்யனுர் - பெரிய மலே போன்ற திருமேனியை உடையவர். துளபவிரை ஆர்கமழ் நீள்முடி - மணம் மிக்க துளசிமாலே அணிந்த நீண்ட திருமுடி. எம் ஐயனுர் - எமது தலேவராய். அணி அரஙகனுர் - உலகத்துககெல்லாம் ஆபரணம் போனற திருவரஙகத்தில எழுநதருளி யிருப்பவராய். அரவின் அணே மிசை - பாமபணேமீது. மேய - விரும்பி அடைந்து, கணவளர்ந் தருளுகிற. மாயனுா - ஆசசரிய சக்திகளேயுடைய திருவரஙகர். செய்ய வாய் - சிவந்த வாய்.]

திருமேனி அழகில் படிப்படியாக ஈடுபட்டு வநதவர், 'சிவந்த வாயானது, ஐயோ என்னேச் சிந்தை கவர்ந்ததே!' என்கிருர்.

சஙகு சககரங்களே உடையவனுய, துழாய் மாலே அணிந்த நீள்முடியனுய்த் தலேவனுய்க் காட்சி தரும் மலே போன்ற திரு மேனி அழகுக்குத தப்ப முடிந்தாலும், அன்பர்களின் யோக க்ஷேமத்தை வினவத் துடித்துககொண டிருக்கும் வாயழகிற்குத் தபப முடியாது.

'ஐயோ!' எனபதற்கு, "பணடே நெஞ்சு பறிகொடுத்த என்னே அநியாயம செய்வதே!—என்று கூப்பிடுகிருர்" என் பதும், 'கல்லே நீராக்கி, நீரையும் தானே கொண்டது' என்பதும் வியாக்கியானம்.

**கண்ணழகு**

பரியன ஆகிவந்(த) அவுணன்
உடல்கீண்ட அமரர்ககு
அரிய ஆதிபபிரான் அரங்கத்(து)
அமலன் முகத்துக
கரியஆ கிபபுடை பரந்து
மிளிர்ந்து செவ்வரி ஓடிநீண்டஅப்
பெரியஆய கண்கள் என்னேப்
பேதைமை செய்தனவே!

[பரியன் ஆகி - பருத்த உடலைப் பெற்றவனாகி. அவுணன் இரணியன் என்ற அசுரனுடைய. உடல் கீண்ட - அந்த உடம்பைப் பிளந்த அமரர்க்கு அரிய ஆதிபபிரான் - தேவர்களுக்கு அரியவனும் அடியார்களுக்கு எளிதில பெறத்தக்க உதவியாளனுமாகிய பெருமான். முகத்து - திருமுகத்திலே. புடை பரந்து மிளிர்ந்து - விசாலமாகப பரந்து விளங்கி. செவ்வரி ஓடி - செவ்வரிகள் படர்ந்து அப் பெரியவாய கண்கள் - அப பெரிய திருக்கண்கள்.]

இந்தப் பாசுரத்திலே, சிவந்த வாயின் அழகுக்கு மேல, கண்களின அழகு, தம்மை ஈடுபடுத்தியது என்கிறுர். வாயால சொல்ல முடியாததையும பேசாத பேச்சாகக் கண்கள் உணரச செய்து வசீகரிக்கின்றனவாம்.

கண்களின் அழகு, அதிசயமான செந்தமிழாகப் பரிணமித்திருக்கிறது

கரியவாகிப புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரி ஓடிநீண்டஅப்
பெரியவாய கண்கள் என்னைப்
பேதைமை செய்தனவே!

என்ற பாசுரப் பகுதி, ஓதி ஓதி, உணர்ந்து உணர்ந்து, இன்புறத் தக்கது.

'அந்தக் கண்களின் அழகு, என்னைப் பைத்தியமாக்கி விட்டதே!' என்பதில் கடல்போலப் பெருகி வரும இவரது பக்திக்காதலை நாமும் உணர்ந்து அநுபவிக்க முடிகிறது.

அழகும் எளிமையும் :

ஆலமா மரத்தின் இலைமேல் ஒருபா லகனாய
ஞாலம ஏழும்உண டான்அரங் கத(து)அர வின்அணை
[யான்

கோல மாமணி ஆர முமமுததுத
தாம முமமுடி(வு) இலல தோர்எழில
நீல மேனிஐ யோ! நிறை கொண்ட(து)என் நெஞ
[சினையே!

[ஒரு பாலகனுய - ஒப்பற்ற சிறு குழந்தையாய். ஞாலம் ஏழும உணடான - உலகஙகள் ஏழையும உண்டவனுய். கோல மாமணி ஆரமும - அழகிய சிறநத ரததினஙகளால் ஆககப்பட்ட ஆரமும். முததுத் தாமமும - முதது மாலையும். முடிவு இலலதோர் எழில - எலலை காண முடியாத அழகு.]

இநதப பாசுரததிலே, எலலா அழகுகளையும சோததுக் கொணடு, திருமேனி எனற நீலஜோதி, தம்மைப் படுததிய பாடடைப பாடுகிருர்.

திருப்பாணர், தமமை ஆட்கொண்ட நீலத திருமேனியின் முடிவிலலாத அழகை,

'கோல மாமணி ஆரமும முத்துத தாமமும்
முடிவிலல தோாஎழில'

எனறு பாடிப் பரவசமாகிருர்.

இநத அழகு, வர்ணனைக்குச் சிகரம்போல் அமைகிறது.

'நீல மேனி, ஐயோநிறை கொணட(து)என்
நெஞ்சினையே!'

எனற அருள் வாககு. இதன் எதிரொலிதான்,

'ஐயோ! இவன் வடிவென்பதொர்
அழியாஅழ(கு) உடையான'

என்ற கவிசசககரவர்த்தியின வருணனை.

கொண்டல வண்ணனைக கோவல னுய்வெண்ணெய்
உணட வாயன்என் உள்ளம கவர்ந்தானை

அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற்(று) ஒன்றினைக் காணுவே!

[கொண்டல் வண்ணனை – நீருண்ட மேகம்போன்ற திரு நிறம் உடையவனை. கோவலனுய்-கோபாலனுய்; மாடு மேய்ப்பவர் குலத்தில் அவதரித்தவனுய். அண்டர்கோன் – அண்டத்துக்கு உள்ளிருக்கும் எல்லா ஆத்மாக்களுக்கும் தலைவனை என் அமுதினை – எனக்கு அமுதமாக இருப்பவனை.]

என்ற பாசுரத்திலே கொண்டல்வண்ணன் என்பதில், இறைவன் தாபம் தீர, விடாய் தீர இவருக்கு அருள் பொழிந்த குறிப்பைக் காணலாம்.

அழகிய மணவாளன் திருமேனியில் முன்பு வீரப்பொலிவு கண்டவர் இப்போது வெண்ணெயையும் வெண்ணெய் போன்ற உள்ளங்களையும் களவாடிய கிருஷ்ண சௌந்தரியத்தை அநுபவிக்கிறார்.

அன்று களவு கண்டு ஒளித்து வந்து கிடக்கிறவன் அரங்கநாதன் என்கிறார். உற்று நோக்கினால், வெண்ணெயுண்ட திருப்பவளமாகக் காணப்படுகிறது அந்தச் சிவந்த வாய் என்கிறார். 'என்னைச் சிந்தை கவர்ந்த வாயில், இப்போதும் வெண்ணெய் மணக்கிறது!' என்பது குறிப்பு.

'ஞாலம் ஏழும் உண்டான்' என்று சொல்வதைக் காட்டிலும் 'வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தான்' என்று கூறுவதில் இவருக்கு விசேஷ திருப்தி.

முற்றும்

குலம் இல்லாதவர்களுக்கும் ராஜகுலம் தருவது பக்தி என்ற உண்மையைத் திருமழிசையாழ்வார், திருப்பாணாழ்வார் என்ற இருபெருந் தொண்டர்கள் வாயிலாகப் புலப்படுத்துவது இந்நூல். இவர்களுடைய வாழ்க்கைக் கதைகளும் பக்தியநுபவங்களும் பல நூற்றூண்டுகளாக எண்ணற்ற இதயங்களுக்கு ஆறுதல் அளித்துவந்திருக்கின்றன. இந்நூலை வாசிப்பவர்களுக்கு, இவர்களைக் கண்ணாரக் கண்டு, உபதேசங்களையும் காதாரக் கேட்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படும்.

2-3284

# இதே ஆசிரியரின்
# வெளிவரப் போகும் சில நூல்கள்

## துயில் எழுப்பிய தொண்டர்

தொண்டரடிப்பொடி என்ற பக்தமணியின் கதை, பக்திக்கதையாகத் தொடங்கி, காதற்கதையாகி, ஒரு பக்திப் பெருங்காதலரின் கதையாக விளைந்து விடுகிறது. இவர், தமது மனநோய்க்குச் செய்துகொண்ட ராஜவைத்தியம், இவர் கவிதை வாயிலாக நமக்குக் கிடைக்கிறது.

இவரது திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்கள் பிரசித்தமானவை. பெருமாளைத் துயில் எழுப்பப் பாடிய பாடல்கள் எத்தனையோ மக்களை அஞ்ஞான உறக்கத்திலிருந்து விழிக்கச் செய்திருக்கின்றன. இவரைப்பற்றி இன்றைய தமிழகம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களெல்லாம் இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

## அடி சூடிய அரசர்

ராஜரிஷியான குலசேகராழ்வாரின் வாழ்க்கைச் சித்திரத்தையும் குணசித்திரத்தையும் இந்நூலில் கண்டு கொள்ளலாம். அன்று, மலைநாட்டில் பெய்த பக்தி மழையை இன்றைத் தமிழர்களும், தங்கள் வாழ்க்கையை வளமுறச் செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## காதலால் கதி பெற்றவர்

'குமுதவல்லி மணவாளர்' என்று வாழ்த்தப்பெறும் திருமங்கை மன்னன் பக்திக்காதலராகப் பரிணமித்த அதிசயம், இவர் தமது தத்துவ சிந்தனைகளைக் காதற் கதைகளின் ரூபத்தில் வெளியிடுவது முதலான பல விவரங்களையும் இந்நூலில் காணலாம். இந்த ஆழ்வாரின் உள்ளத் திற்கும் உபதேசங்களுக்கும் இது ஒரு தங்கத் திறவுகோல்.

## பகவானை வளர்த்த பக்தர்

'நம் தமிழ் நாட்டிலே கண்ணன் பிறந்தான்! அவரை வளர்த்துவிட்டவரும் இவரே!' என்னும்படி அமைந்திருக்கின்றன பெரியாழ்வாரின் பாசுரங்கள். முதல் முதல் 'பிள்ளைத் தமிழ்'க் கவிதை பாடியவரும் இவரே. இவரையும், இவர் கண்ட ஜகன்மோகன பால கோபாலனையும் கண்டுகொள்வதற்குத் துணைசெய்வது இந்நூல்.

கலைமகள் காரியாலயம், சென்னை, மயிலாப்பூர் - 4.